விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி

Valampurii
website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ராம்கோ சீமெந்தைப் பயன்படுத்துங்கள்; உங்கள் பணத்தை மீதப்படுத்துங்கள்.

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஆனி 19 புதன்கிழமை (03.07.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 196

# இலங்கை விவகாரங்களில் இந்தியா தலையிடக் கூடாது



## இந்திய தூதுவரிடம் பொது பல சேனா கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் இந்தியா தலையீடு செய்யக் கூடாது என இந்தியத் தூதுவரிடம் பொது பல சேனா அமைப்பு நேற்று கோரிக்கை விடுத்துள்ளது. ஆயிரத்திற்கும் மேற்பட்ட பௌத்த பிக்குகள் இந்திய உயர் ஸ்தானிகராலயத்திற்கு நடந்து சென்று இந்த மகஜரைக் கையளித்துள்ளனர். (19ஆம் பக்கம் பார்க்க)

# மேனன் – மகிந்த 9ஆம் திகதி சந்திப்பு

(கொழும்பு)

இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ் சங்கர் மேனன், எதிர்வரும் 9-ம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை கொழும்பில் வைத்து சந்திக்கவுள்ளார். இந்த சந்திப்பின் போது மேனன், இந்திய பிரதமர் மன்மோகன் சிங், 13-வது சட்டத்திருத்தம் தொடர்பில் கொண்டுள்ள கொள்கை தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு தெளிவுபடுத்துவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன் மன்மோகன் சிங்கின் தகவல் ஒன்றை (20ஆம் பக்கம் பார்க்க)

# நாட்டு மக்கள் பட்டினியிருக்க ஆபிரிக்காவிற்கு அரசு தானம்

## ஐ.தே.க.விசனம்


(கொழும்பு)

நாட்டு மக்கள் பட்டினியில் வாடுகின்ற வேளை மக்களின் பணத்தை ஆபிரிக்க நாடுகளுக்குத் தானம் செய்வதாக இலங்கை அரசு சர்வ தேசத்திற்கு காட்டுகின்றது என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இராஜகிரியவில் நேற்று செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (19ஆம் பக்கம் பார்க்க)

# புத்தர் சிலையை நானே வைத்தேன்

## யாருடைய அனுமதியும் தேவையில்லை – விகாராதிபதி



(மட்டக்களப்பு)

என்னிடம் மத வேறுபாடுகளோ சாதி வேறுபாடுகளோ ஒரு போதும் கிடையாது. புத்தர் சிலையை வைப்பதற்கு நான் யாரிடமும் கேட்க வேண்டிய அவசியம் கிடையாது. இந்தப புத்தர் சிலையை நான்தான் வைத்தேன் என வாழைச்சேனை புத்த ஜயந்தி விகாரையின் விகாராதிபதி வண. நாவானே அபயவன்ஸ அலங்கார தேரர் தெரிவித்தார்.

வாழைச்சேனை-பிறைந்துரைச் சேனை சாதுலியா வித்தியாலய மைதானத்தில் நேற்றுமுன்தினம் திடீரென தோன்றிய புத்தர் சிலை தொடர்பாக கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், புத்த ஜயந்தி விகாரைக்குரிய (19ஆம் பக்கம் பார்க்க)

# 13 ஐ திருத்த வேண்டும் பொன்சேகா

(கொழும்பு)

நாட்டுக்கு பாதகமான நடவடிக்கைகளை எடுக்கும் அதிகாரங்கள் முதலமைச்சருக்கு இருப்பின் 13ஆவது திருத்தத்தை திருத்த வேண்டும் என ஜனநாயக தேசிய கூட்டணியின் தலைவர் சரத பொன்சேகா தெரிவித்தார்.

முதலமைச்சருக்கு கெடுதியான தீர்மானங்களை எடுக்கும் அதிகாரம் இருக்குமாயின் அதை நிறுத்தும் வழியை கண்டுபிடிக்க வேண்டும்.

சகல இனங்களினதும் உரிமை (19ஆம் பக்கம் பார்க்க)

# அபிவிருத்தி நிதியிலிருந்து ரூ. 100 மில்லியன் மோசடி

## சுரேஸ் எம்.பி. குற்றச்சாட்டு



(கொழும்பு)

வட மாகாணத்தின் அபிவிருத்திக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்து 100 மில்லியன் ரூபாய், வட மாகாணசபைத் தேர்தலுக்கு பயன்படுத்துவதெற்கென மோசடி செய்யப்பட்டுள்ளது என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

அபிவிருத்திக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியை எவ்வாறு தேர்தலுக்காகப் பயன்படுத்த முடியும் என்று கேள்வி எழுப்பிய தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமச்சந்திரன், இது தொடர்பில் தேர்தல் ஆணையாளர் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

நேற்று செவ்வாய்க்கிழமை யாழ் ஊடக அமையத்தில் நடைபெற்ற (19ஆம் பக்கம் பார்க்க)

# அவிசாவளையில் வெடிகுண்டு

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் அமைப்பினால், கொழும்பு மற்றும் அதன் புறநகர் பகுதிகளில் அழிவை ஏற்படுத்துவதற்காக கொண்டு வந்துள்ள இதுவரை கண்டு பிடிக்கப்படாத சுமார் ஒரு தொன் எடை கொண்ட குண்டு அவிசாவளை பிரதேசத்தில் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக புலிகளின் புலனாய்வு பரிவின் தலைவர் ஒருவர் ஊடாக தகவல்கள் பெறப்பட்டுள்ளதாக கொழும்பு பயங்கரவாத விசாரணைப் பிரிவினர் நேற்று முன் தினம் நீதிமன்றத்தில் தெரிவித்தனர். புலிகளின் புலனாய்வுப் பிரிவின் (19ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பஷிலை சந்திக்க அனுமதி தாருங்கள்

## தமிழக மீனவர்கள் கோரிக்கை

தமிழக, இராமேஸ்வரம் மீனவர்கள் நிலைமையை எடுத்துக் கூறுவதற்காக இந்தியா வரும் பஷில் ராஜபக்ஷவை சந்திக்க அனுமதி தருமாறு மத்திய அரசுக்கு மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இராமேஸ்வரம் அனைத்து மீனவர் சங்க்ங்களின் கூட்டம் தமிழ்நாடு பாண்டிச்சேரி மீனவர் தொழிலாளர் சங்க மாநில செயலாளர் தலைமையில் நடந்தது.

இந்த கூட்டத்தில், இலங்கை உள்நாட்டு பாதுகாப்பு அமைச்சரும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் சகோதரருமான பஷில் ராஜபக்ஷ நாளை வியாழக்கிழமை இந்தியா வருகிறார்.

அவரை நேரில் சந்தித்து மீன்பிடிக்க செல்லும் இராமேஸ்வரம் மீனவர்களுக்கு இலங்கை கடற்படையினரால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும், இருநாட்டு மீனவர்களும் பாரம்பரிய முறையில் நிம்மதியாக மீன்பிடி தொழில் செய்யும் வகையில் உடன்பாடு ஏற்படுத்துவது குறித்தும் கோரிக்கை அளிக்க முடிவு செய்யப்பட்டது.

இதற்கு ஏதுவாக பஷில் ராஜபக்ஷவை மீனவர்கள் சந்திக்க உரிய அனுமதியை வழங்க வேண்டும் என மத்திய அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டது.

மேலும் இலங்கையில் சிறை வைக்கப்பட்டுள்ள 49 மீனவர்கள் நாளை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். அன்றையதினம் மீனவர்கள் விடுவிக்கப்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.

அவ்வாறு மீனவர்கள் அனைவரும் விடுவிக்கப்படவில்லை எனில் அடுத்த கட்ட போராட்டம் குறித்து முடிவு செய்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது. (செ-11)


## பிரதேச செய்தியாளர்களுக்கான விண்ணப்பம் கோரல் - 2013

வலம்புரி நாளிதழில் பிரதேச செய்தியாளர்களாகக் கடமையாற்றும் பொருட்டு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களிடம் (ஆண்கள் மட்டும்) இருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றன.

செய்தித்துறையில் ஆர்வமும் விருப்பமும் கொண்டவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பதாரி ஆகக் குறைந்தது 21 வயதை அடைந்திருத்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் தாம் செய்தியாளராக இருக்க விரும்பும் இடத்தைக் குறிப்பிடுவது அவசியம்.

பொருத்தமான விண்ணப்பதாரிகள் கீழ்வரும் மாதிரி விண்ணப்பத்திற்கு அமையும் வண்ணம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை எதிர் வரும் 10.07.2013 ற்கு முன்னதாக

பிரதம ஆசிரியர்
வலம்புரி
இல.3, 2-ம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் "பிரதேச செய்தியாளருக்கான விண்ணப்பம் - 2013" எனத் தவறாது குறிப்பிடவும்.

பொது முகாமையாளர்
வலம்புரி

மாதிரி விண்ணப்பம்

### பிரதேச செய்தியாளர்களுக்கான விண்ணப்பம் கோரல் - 2013

முழுப் பெயர் :- ..........................................
நிரந்தர முகவரி :- ..........................................
தபால் முகவரி (தேவையாயின்):- ....................
தொலைபேசி இலக்கம் :- ..............................
பிறந்த திகதி :- ..........................................
தே.அ.அ.இல. :- ..........................................
கி.சே.பிரிவும் இலக்கமும் :- ..........................
பிரதேச செயலர்பிரிவு :- ..................................
செய்தியாளராகக் கடமையாற்ற விரும்பும்
ஊரின் பெயர் :- ..........................................
மாவட்டம் :- ..........................................
தற்போது செய்யும் தொழில் :- ..........................
கல்வித் தகைமை :- ..................................
முன் அனுபவம் (இருப்பின்) :- ..........................
ஏனையவை :- ..........................................

.................... ..........................
திகதி கையொப்பம்


# மாகாண சபை முறைமை தொடர்பில் இந்தியாவின் நிலைப்பாடு என்ன?

## பகிரங்கப்படுத்தக் கோருகிறது ஐ.தே.க

13-வது திருத்தத்திற்கு எதிராக இலங்கை அரசாங்கம் செயற்படுகின்றமைக்கு இந்திய அரசாங்கம் இனியும் மௌனம் காக்காது தனது நிலைப்பாட்டை பகிரங்கமாக வெளிப்படுத்த வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் ஊவா மாகாண சபை உறுப்பினர் கே.வேலாயுதம் தெரிவித்தார்.

இராஜகிரியவில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியலமைப்பின் 13-வது திருத்தச் சட்டத்தின் ஊடாக கொண்டுவரப்பட்ட மாகாண சபை முறைமையை நிறுத்துவதற்கு அரசாங்கம் செயற்பட்டு வருகின்றது.

நாட்டில் புரையோடிப்போயிருந்த தமிழ்-சிங்கள இனப்பிரச்சினை தீர்வுக்காக இந்திய நாட்டின் தலையீட்டுடன் 25 ஆண்டுகளுக்கு முன் ஏற்படுத்தப்பட்டதே இந்த மாகாண சபை முறைமையாகும்.

அனைத்து மாகாணங்களிலும் இது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றவேளை அதனை வடக்கில் நடைமுறைப்படுத்த முற்படுகின்ற போது அதன் அதிகாரங்களை அரசு குறைக்க முற்படுகின்றமையானது அரசின் இன விரோத செயற்பாட்டையே காட்டுகின்றது.

இது தொடர்பில் அரசாங்கம் தெரிவுக்குழுவொன்றை நியமித்துள்ளது. அதில் சிறுபான்மை தமிழ் மக்களுக்கு எதிராகப் பேசுகின்ற விமல் வீரவன்ச மற்றும் சம்பிக்க போன்றோர் உள்ளடங்கியுள்ளனர். இது அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எவ்விதமான அரசியல் தீர்வுகளையும் வழங்காது என்பதையே காட்டுகின்றது. இந்நிலையில் இது தொடர்பில் இந்தியா மதில்மேல் பூனையாக செயற்பட்டு வருகின்றது. இதைவிடுத்து இந்தியா தனது நிலைப்பாட்டை பகிரங்கமாக உலகிற்கு தெரிவிக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்(செ-11)

# யாழ்.ஆயரின் 75-வது பிறந்த தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மற்ற மாவட்ட ஆயர் வண. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகையின் 75-வது பிறந்ததினமும் அவரின் பெயர் கொண்ட தினமும் நாளை புதன்கிழமை கொண்டாடப்படவுள்ளது.

இதனை முன்னிட்டு பாடசாலை சிறுவர்களுடன் இணைந்து நாளை முற்பகல் 9 மணிக்கு யாழ்.பேராலயத்தில் ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை திருப்பலி ஒப்புக் கொடுக்கவுள்ளார்.

இத்தினத்தில் ஆயரின் பெயர் கொண்ட புனிதரின் விழாவும், ஆயரின் அபிஷேக தினமும் நினைவு கூரப்படுவது குறிப்பிடத்தக்கது. (செ-5)

# இரத்த காயங்களுடன் இருவர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

உடலில் இரத்தக் காயத்துடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட இருவர் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளனர்.

யாழ்.நல்லூர் கந்தசுவாமி கோவிலுக்கு அண்மையில் நேற்று முன்தினம் அதிகாலை 3மணியளவில் ஒருவரும் யாழ்.குளப்பிட்டி பகுதியிலிருந்து நேற்று முன்தினம் மாலை 4 மணியளவில் ஒருவரும் இரத்த காயங்களுடன் மீட்கப்பட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று அதிகாலை இருவரும் உயிரிழந்துள்ளனர்.

வைத்தியசாலையில் உயிரிழந்த இருவரும் யார் என்பது கண்டறியப்படவில்லை என யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்ததோடு வைத்தியசாலையில் அடையாளம் காணப்படாத நிலையில் இரு ஆண்களின் சடலம் உள்ளதை தெரியப்படுத்துமாறு ஊடகவியலாளர்களிடம் கேட்டுக்கொண்டனர்.

இதேவேளை குறித்த இருவரும் வாகன விபத்தில் காயமடைந்திருக்கக்கூடும் என பொலிஸார் தெரிவித்தனர். (செ-6)

# "ஆயிரத்தில் ஒருவன்"

மினிபஸ்ஸில் பயணித்த நபர் ஒருவர் தனது டயறி அதனுள் இருந்த ஒருதொகைப் பணம் உள்ளிட்ட முக்கியமான ஆவணங்களைத் தவற விட்டுள்ளார்.

எனினும் மேற்குறித்த அனைத்தையும் மினிபஸ் உரிமையாளர் அடுத்த நாள் தவற விட்ட நபரிடம் ஒப்படைத்துள்ளார்.

உடைமைகளைப் பெற்றுக் கொண்ட நபர் வலம்புரிக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில்,

கடந்த 28-ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து கொடிகாமம் பயணித்த 60-2730-ம் இலக்க மினிபஸ்ஸில் நானும் பிரயாணம் செய்தேன். நான் சாவகச்சேரியில் இறங்கி எனது வீட்டுக்குவந்து பார்த்தபோது எனது டயறியை மினி பஸ்ஸினுள் தவறவிட்டதை உணர்ந்தேன். அதனுள் எனது வங்கிப் புத்தகங்கள், சாரதி அனுமதிப்பத்திரம், ஒருதொகைபணம் மற்றும் பெறுமதியான ஆவணங்கள் பல இருந்தன.

இது பற்றி யாரைக்கேட்பது? என்ன செய்வதென்று தெரியாமல் இருந்தபோது அன்று இரவு 8மணியளவில் எனக்கு ஓர் தொலைபேசி அழைப்பு கிடைத்தது. அந்த மினிபஸ் உரிமையாளர் பாஸ்கரன் கோவிலாக்கண்டியில் தமது வீட்டிலிருந்து கதைத்தார். நான் தவறவிட்ட அந்த டயறி தமது பஸ்ஸினுள் இருந்து கிடைக்கப்பெற்ற அந்த நல்ல செய்தியைக் கூறினர் .

இதைக்கேட்டதும் நான் சந்தோஷப்பட்டேன். இன்றைய காலகட்டத்தில் அவரைப் போல ஒரு மனிதரை காண்பதாயின் ஆயிரத்தில் ஒருவர்தான் இருப்பார்கள். அவருக்கு எப்படி நன்றி கூறுவதென்றே எனக்கு தெரியவில்லை. மறுநாள்காலை பேருந்து நிலையத்தில் அவர்களைப் போய் சந்தித்தபோது எனது டயறி மற்றும் அதனுள் இருந்த பணம் உட்பட அனைத்து ஆவணங்களையும் பெற்றுக் கொண்டேன். பெரிதும் சந்தோஷப்பட்டேன்.

இந்த பஸ் உரிமையாளர் உண்மையில் ஆயிரத்தில் ஒருவர் தான்எனஅவர்குறிப்பிட்டுள்ளார். (செ)

# நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

உடுவில் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளுக்குரியவர்களுக்கான நடமாடும் சேவை நாளை வியாழக்கிழமை, நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஆகிய தினங்களில் மு.ப 9மணி தொடக்கம் பி.ப 4 மணிவரை நடத்த ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

உடுவில் பிரதேச செயலகம், பவ்ரல், ஒவ்வர் அமைப்புக்களின் உதவியுடன் நடத்தப்படும் இச்சேவையில் தேசிய அடையாள அட்டை, பிறப்பு மற்றும் திருமணப்பதிவிற்கான பதிவுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக உடுவில் பிரதேச செயலர் எம்.நந்தகோபாலன் தெரிவித்துள்ளார். (செ)


## வேலையாள் தேவை

வெளிநாட்டிற்கு பொதிகள் அனுப்பும் நிறுவனம் ஒன்றிற்கு வேலையாள் தேவை

தொடர்பு:-0773818799

பிரணவன் எண்டர் பிறைசஸ்

இல.635, பருத்தித்துறை வீதி, நல்லூர் (C-3859)


# தொழிற்பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரல்

இலங்கை தொழில்பயிற்சி அதிகாரசபையினால் யாழ்ப்பாணத்தில் எதிர்வரும் 8-ம் திகதி திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட உள்ள கணணி மென்பொருள் (தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்திலான தேசிய சான்றிதழ்-NCICT) மற்றும் கணனி வன்பொருள் (தேசிய தொழில்தர சான்றிதழ்-NVQ) கற்கை நெறிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் கைதடி தொழில்பயிற்சி நிலையத்தில் மோட்டார் சைக்கிள் திருத்துனர் (தேசிய தொழில்தர சான்றிதழ்-NVQ) கற்கை நெறிகள் ஆரம்பமாக உள்ளது. மேற்படி கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்களை இல.12 வீரசிங்கம் மண்டபம் 1-ம் மாடி கே.கே.எஸ் வீதி யாழ்ப்பாணம் எனும் முகவரியில் உள்ள இலங்கை தொழில் பயிற்சி அதிகார சபை மாவட்ட அலுவலகத்திலோ அல்லது 0212227949,077244404 0 எனும் தொலைபேசி இலக்கங்களூடாக தொடர்பு கொண்போஅனுப்பிவைக்கு படி கேட்டுக் கொள்ள பட்டுள்ளது. (செ)





## பிள்ளையார் இன்

12 மணி முதல் 3 மணிவரை மிகச் சிறந்த சைவ அசைவ உணவு வகைகள் வழங்கப்படுகின்றன. வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு தினங்களில் புஃவே (Buffet) முறையில் இந்திய சமையற்கலை வல்லுநர்களால் தயாரிக்கப்பட்ட உணவு வகைகள் வழங்கப்படும்.

சைவ உணவு: 150/- அசைவ உணவு 175/-

தொடர்புகளுக்கு: இல.31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2829

C-3840


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## பரிசுச்சீட்டு

அதிர்ச்சியில் இரண்டு வகையுண்டு. ஒன்று இன்ப அதிர்ச்சி. இன்னொன்று துன்ப அதிர்ச்சி. பரிசுச் சீட்டில் திடீரென ஒரு இலட்சம் விழுந்தால் அது இன்ப அதிர்ச்சி. ஆயிரம் ரூபாய்க்கு ஒரு சீட்டு வாங்கி அதில் ஒன்றுக்குக்கூட பரிசு விழவில்லை என்றால் அது துன்ப அதிர்ச்சி.

இதெல்லாம் இருக்கட்டும். இந்த அதிர்ஷ்ட இலாபச் சீட்டு எப்பொழுது எங்கே ஆரம்பமானது தெரியுமா?

15 ஆம் நூற்றாண்டில்தான் இது ஆரம்பமானதாம். முதன்முறையாக ரோமானியர்கள்தான் இதை ஆரம்பித்தார்களாம்.

அப்பொழுதெல்லாம் என்ன பரிசு தெரியுமா?

முதல் பரிசு ஒரு கப்பல்.

இரண்டாவது பரிசு ஒரு வீடு.

மூன்றாவது பரிசு வீட்டு வேலை செய்வதற்கு ஒரு அடிமை ஆள்.

நான்காவது பரிசு ஆடு, மாடு.

ஐந்தாவது பரிசு கட்டை வண்டி.

இப்படித்தான் அந்தக் காலத்தில் பரிசு கொடுத்தார்களாம்.

பணம் கொடுத்து லொத்தர் டிக்கெட்டுக்கள் வாங்கும் முறை இங்கிலாந்தில்தான் அறிமுகமாகியது. அதுவும் 1612 இல் பரிசையும் பணமாகவே கொடுத்தார்கள். அதன் பின்னர் 1894 இல் அமெரிக்காவில் இந்தப் பழக்கம் ஆரம்பமாகியது. ஜேர்மனி, பிரான்ஸ் இங்கெல்லாம்கூட இத்திட்டம் நடைமுறைக்கு வந்தது.

இத்தாலி அரசாங்கம் லொத்தர்மூலம் கிடைத்த வருவாயை வைத்து அரசாங்கத்தையே நடத்தியதாம்.

புகழ்பெற்ற பிரிட்டிஷ் அருங்காட்சியகத்தைக்கூட இங்கிலாந்து அரசாங்கம் லொத்தர் வருவாய் மூலம்தான் கட்டி முடித்ததாம்.

அமெரிக்காவிலுள்ள ஹவார்ட் பல்கலைக்கழகம், கொலம்பிய பல்கலைக்கழகம் எல்லாம் ஆரம்பிப்பதற்கும் லொத்தர் வருவாய்தான் மிகவும் உதவியாக உள்ளதாம். ரஷ்யாகூட 2 ஆவது உலகப் போர் நடந்த சமயத்தில் மட்டும் லொத்தர் திட்டத்தை நடைமுறைப்படுத்தியதாம். 50 இல் ஆங்கிலேய ஆளுநராக இருந்தவர்தான் முதற்தடவையாக இந்தியாவில் இந்த திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

சென்னையிலுள்ள ரிப்பன் மாளிகை, மூர் மார்க்கெட், மியூசியம் போன்றவற்றைக்கூட லொத்தர் வருமானத்தின் மூலமாகத்தான் கட்டி முடித்தார்களாம்.

ஒரு மனிதன் மிகவும் கவலையுடன் உட்கார்ந்திருந்தான். கடவுள் அவன் முன் தோன்றி ''ஏன் இப்படி கவலையுடன் உட்கார்ந்திருக்கிறாய்? உனக்கு வேண்டும் வரம்கேள் தருகிறேன்'' என்றார்.

''வேறு ஒன்றும் வேண்டாம். எனக்கு லொத்தர் சீட்டில் ஒரு இலட்சம் பரிசு விழுவது போல செய்யுங்கள். அது போதும்'' என்றான்.

"சரி அப்படியே நடக்கும். வரம் கொடுத்து விட்டேன்" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டுப்போய்விட்டார்.

கொஞ்ச நாள் கழித்து மறுபடியும் கடவுள் வந்தார். அந்த ஆசாமி தலையில் கைவைத்து உட்கார்ந்திருந்தான். கடவுளைப் பார்த்ததும் கோபமாகக் கத்தினான். "என்னை இப்படி ஏமாற்றிவிட்டாயே! லொத்தர் சீட்டில் ஒரு இலட்சம் விழும் என்று வாக்குக் கொடுத்தாய். எனக்கு விழவே இல்லையே!'' என்றான்.

கடவுள் நிதானமாகச் சொன்னார்.

''தப்பு என்மேல் இல்லை. உன் மேல்தான் ஒரு இலட்சம் விழுவதற்கான அதிர்ஷ்டத்தை நான் கொடுத்து விட்டேன். ஆனால் நீ ஒரு ரூபாய்கூட கொடுத்துச் சீட்டு வாங்கவில்லையே!'' என்றார்.

*தென்கச்சி கோ.சுவாமிநாதன்*

# வடமராட்சி கல்வி வலய திருக்குறள் போட்டி முடிவுகள்

வடமராட்சி கல்வி வலய திருக்குறள் போட்டிகளின் முடிபுகள் கல்வி வலயத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய அதி கீழ்ப்பிரிவு ஈ. பவதாரணி– பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, சி.சிலக்ஷிகா– கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி, ஜே. அபிரா– வதிரி திருதயக் கல்லூரி, ச.அபிராமி– வட. இந்து மகளிர் கல்லூரி, ச.கௌரிகநிலா– வல்வை சிவகுரு வித்தியாலயம் போன்றவர்களும் கீழ்ப்பிரிவில் பா. ஜெயமிதுலா– வட. இந்து மகளிர் கல்லூரி, ஜே.யதுஷனா– மெதடிஸ்த பெண்கள் உயர் தரப் பாடசாலை, ப. சாளினி– குடத்தனை கரை அ.மி.த.க. பாடசாலை, தி.தர்சாந்தி– கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை, தி.விருஜா வட. மத்திய மகளிர் கல்லூரி, மாணவிகளும் மத்திய பிரிவு ஜெ.விசோபா– மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, மு.தர்ஷணா– வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, ஜெ.நிவேகா பரு. சித்தி விநாயகர் வித்தியாலயம், இ. ராஜனா– அம்பன் அ.மி.த.க. பாடசாலை, இ.லோகிதன்– பரு. ஹாட்லிக் கல்லூரி, மேற்பிரிவு மு. சத்தியதேவி– வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, இ.முரளிதரன் ப.வேலாயுதம் மகாவித்தியாலயம், க.சோபனா– தும்பளை சிவப்பிர காச வித்தியா லயம், தி.ஜெனனி– பரு. மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை ஜெ. ராகவி, உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (செ–9–24)

# கண்ணலிங்கேஸ்வர ஆலய மஹோற்சவம்

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை கொடியேற்றதுடன் ஆரம்பமாக வுள்ளது.

தொடர்ந்து 10 நாட்கள் நடைபெறவிருக்கும் மஹோற்சவத்தில் எதிர்வரும் 9 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை சப்பறமும்13 ஆம் திகதி சனிக்கிழமை தேர் உற்சவமும் மறுநாள் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்த உற்வசமும் நடைபெற வுள்ளன.

பூஜைகள் மற்றும் திருப்பணிக்கு உதவ விரும்புவோர் இலங்கை வங்கி யாழ். கிளை சேமிப்பு கணக்கு இல 8600925626, இலங்கை வர்த்தக வங்கி யாழ். கிளை சேமிப்பு கணக்கு இல 8600928501 ஆகிய வங்கிக் கணக்கு இலக்கங்களில் பணத்தை வைப்பிலிட்டு உதவமுடியும் என நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (2)

# குறும்படத் தயாரிப்பாளர்களுக்கான குறும் கலைப் பயிற்சி வழங்கல்

வடமாகாணத்தில் குறும்படக்கலையை ஊக்குவிப்பதற்காக, இத்துறையில் ஆர்வமுள்ள ஐவருக்கு இந்தியாவில் ஒருமாத காலப் பயிற்சியை வழங்குவதற்கு வடமாகாண ஆளுநரினால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி. சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

இதன்பிரகாரம் சிறந்த ஒளிப்பதிவாளர், ஒலிப்பதிவாளர், படத்தொகுப்பாளர், இயக்குநர், திரைக்கதை என ஐந்து துறைகளிலிருந்தும் தலா ஒரு கலைஞரைத் தெரிவு செய்வதற்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 12 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வடமாகாண கல்வி அமைச்சில் இடம்பெறவுள்ளது.

மேற்படி துறைகளில் ஈடுபட்டோர் அதற்கான சான்றுகளை எதிர்வரும் 10 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்திற்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ சமர்ப்பிக்க வேண்டும்.

மேற்படி ஐந்து துறைகளிலும் ஆர்வம் உள்ளவர்கள் தாங்கள் தயாரித்த படச்சான்றுகளுடன் நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ளுமாறு அவர் கேட்டுள்ளார்.

மேலதிக தொடர்புகளுக்கு 021 320 2990, 072 967 9782 ஆகிய தொலைபேசி எண்களுடன் தொடர்பை ஏற்படுத்தி தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியுமென அவர் குறிப்பிட்டுள்ளார். (செ–2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 30 | 30 | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 90 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 120 |
| தக்காளி | 120 | 160 | 140 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 40 |
| கோவா | 100 | 120 | 140 |
| கரட் | 100 | 140 | 160 |
| பூசணி | 50 | 50 | 50 |
| புடோல் | 40 | 60 | 60 |
| வாழைக்காய் | 40 | 60 | 50 |
| சின்ன வெங்காயம் | 200 | 160-200 | 130-200 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 90 |
| பாகற்காய் | 100 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 100 | 60 | 60 |
| கருணைக் கிழங்கு | 100 | — | 10 |
| பயற்றங்காய் | 40 | 60 | 60 |
| லீக்ஸ் | 100 | 160 | 150 |
| பீற்றூட் | 80 | 100 | 100 |
| கறிமிளகாய் | 100 | 140 | 160 |
| முருங்கைக்காய் | 100 | 300 | 160 |
| போஞ்சி | 100 | 140 | 120 |
| கத்தரிதம்புள்ள | 20 | 20 | — |
| கீரை – 1 பிடி | 20 | 30 | 20 |
| தேசிக்காய் | 100 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-35 | 35-40 |
| இராசவள்ளி | 100 | 120 | 120 |

# இராசி பலன்

03.07.2013
(ஆனி 19, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு
ஏகாதசி பின்னிரவு 5.53 மணிவரை
பரணி முன்னிரவு 11.33 மணிவரை
இராகுகாலம் 11.57-1.27 மணிவரை
சுபநேரம் 4.27-5.57 மணிவரை
ஏகாதசி விரதம், சித்தாமிர்தம்

**மேடம்** நண்பரின் உதவியுண்டு, கனவு பலிதமுண்டு, பணியில் சிறு மன உளைச்சல்கள் ஏற்படலாம், எதிர் பார்க்காமல் செய்த வேலையொன்றில் கணிசமான ஆதாயம் கிடைக்கலாம்.

**இடபம்** விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபடவேண்டிய நாள், சேமிப்பில் சிறிது கரையலாம், காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், தேவையற்ற சஞ்சலங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையும்.

**மிதுனம்** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், தன வரவுகள் திருப்திகரமாக அமையும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**கடகம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, உங்கள் யோசனைக்கு நல்ல பாராட்டுக்கள் கிடைக்கும்.

**சிங்கம்** வருங்கால நலன் கருதி புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள்.

**கன்னி** குடும்ப பெரியார்கள் உங்கள் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், எடுத்த காரியங்களில் சில தாமதங்கள் ஏற்படலாம், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம்.

**துலாம்** எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், திட்டமிட்ட பயணங்கள் நன்மைதரும், வருமானம் திருப்தி தரும், தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

**விருச்சிகம்** மனக்குழப்பம் அகலும், தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், சுவாரஸ்யமான நாள், போசன சுகமுண்டு, எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும்.

**தனுசு** வாய்ப்புக்கள் தேடி வரலாம், கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு, நெடு நாளைய கனவுகள் நனவாகலாம்.

**மகரம்** சுப செய்திகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, நண்பர்கள் சந்திப்புண்டு, செய்தொழில் மேன்மையுண்டு, போசன சுகமுண்டு, வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும்.

**கும்பம்** முயற்சியால் முத்தான வெற்றி கிடைக்கும், பகைவர்கள் விலகுவர், போசன சுகமுண்டு, உறவினர் வருகையால் உற்சாகம் அதிகரிக்கும், நீண்ட நாளைய பிரச்சினையொன்று நல்ல விதமாக முடியும்.

**மீனம்** வாக்கு மேன்மையுண்டு, தனவரவுகள் திருப்தி தரும், பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை கூடும், சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகி மன நிம்மதியைக் கொடுக்கும்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பழைய பூங்காவினுள் புதிதாக சிறுவர் பூங்கா

## வடக்கு மாகாணசபை நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். பழைய பூங்கா வளாகத்தினுள் 13 மில்லியன் ரூபா செலவில் சிறுவர் பூங்கா ஒன்றை அமைக்க வடக்கு மாகாண சபை நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது.




யாழ்.மாவட்ட செயலகம் முன்பாக கண்டி வீதியிலுள்ள மேற்படி பழைய பூங்கா வளாகம் வடக்கு மாகாண சபையினரால் அபிவிருத்தி செய்யப்பட்டுவரும் நிலையில், இந்த சிறுவர் பூங்காவை அமைப்பதற்கான 13 மில்லியன் ரூபாவை வடக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஒதுக்கீடு செய்துள்ளார்.


யாழ். மாநகரசபையுடன் இணைந்து வடக்கு மாகாண சபையினரால் இந்த சிறுவர் பூங்காவை அமைப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)




நன்றி:மிரர்

# முதலமைச்சருக்கான வேட்பாளரை கூட்டமைப்பே முடிவு செய்யும்

## அங்கத்துவ கட்சிக்கு ஏன் அவசரம்?




(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சார்பாக வடக்கு மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக யாரை நிறுத்த வேண்டும் என்பதை தமிழ்த் தேசிய கூட்டமைப்பே முடிவு செய்ய வேண்டும்.

மாறாக அதில் அங்கம் வகிக்கும் ஒரு கட்சி தீர்மானிக்க முடியாது எனத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும் யாழ். மாவட்டநாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன், ஒரு கட்சியினர் எடுக்கும் தனிப்பட்ட முடிவு ஆரோக்கியமான சூழலை ஏற்படுத்தாது எனவும் சுட்டிக் காட்டியுள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் கூட்டமைப்பு சார்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜாவை முதலமைச்சர் வேட்பாளராக நிறுத்த வேண்டும் என தமது விருப்பத்தை தீர்மானமாக எடுத்து இலங்கை தமிழரசு கட்சியின் யாழ். மாவட்ட கிளையினர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா ஆகியோருக்கு கடிதம் மூலம் அனுப்பி வைத்துள்ளனர் என்பதை ஊடகங்களில் வெளியான செய்திகள் மூலம் அறிந்து கொண்டேன்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும்இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்ட கிளையினர் முதலமைச்சர் வேட்பாளரை தெரிவு செய்து அனுப்பியமை ஆரோக்கியமான சூழலை ஏற்படுத்தும் என நான் கருதவில்லை.மாறாக பல முரண்பாடுகளை இந்த நடவடிக்கை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் ஏற்படுத்திவிடும்.

காரணம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் அங்கம் வகிக்கும் தமிழரசு கட்சி தவிர்ந்த ஏனைய நான்கு கட்சிகளுக்கும் மாவட்டங்களில் கிளைக் காரியாலங்கள் உள்ளன.

அவற்றின் ஊடாக ஒவ்வொரு கட்சியினரும் தம்மைச் சார்ந்தவர்களையும், தாம் முதலமைச்சர் வேட்பாளராக யார் வரவேண்டும் என விரும்புபவர்களையும் தெரிவு செய்து கடிதம் மூலம் தமது விருப்பத்தை வெளிப்படுத்தினால் அது ஆரோக்கியமான சூழலை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்குள் ஏற்படுத்தாது.

வடக்கு மாகாண சபைத் தேர்தல் எதிர்வரும் மாதங்களில் நடைபெறக்கூடும் என எதிர்பார்த்திருக்கும் நிலையில் இவ்வாறு உட்கட்சி முரண்பாட்டை ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கைகளில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்.மாவட்டக் கிளையினர் ஈடுபட்டுள்ளனர் எனவும், அவர் குற்றம் சாட்டியதோடு வடக்கு மாகாணத் சபைத் தேர்தலில் தான் போட்டியிட போவதில்லை எனவும் தெரிவித்தார்.

மேலும் இலங்கை இந்திய ஒப்பந்தத்தை அடிப்படையாகக் கொண்ட 13ஆவது திருத்த சட்டத்தின் மாகாண சபை முறைமையானது தமிழ் மக்கள் எதிர்பார்க்கும் நிரந்தர அரசியல் தீர்வினைப் பெற்றுத் தரக்கூடியதல்ல எனவும் தெரிவித்தார்.

ஆனால் வடக்கு மாகாண சபையில் போட்டியிடுவதன் மூலம் தமிழ் மக்களின் ஆதரவை மீண்டும் ஒருமுறை சர்வதேசத்திற்கு தெரியப்படுத்த முடியும் எனவும், இதில் வெற்றி பெறுவதன் ஊடாக குறைந்தபட்ச அதிகாரங்களை வைத்துக்கொண்டு யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு மக்களுக்கான வாழ்வாதார உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதோடு தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளையும் தடுத்து நிறுத்த முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-6)

# சமயத்தின் வரையறைக்குள் நின்று எமது சமூகம் செயற்படவேண்டும்

## ஆளுநரின் செயலாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களாகிய நாம் எமது காலத்தில் பல இடைவெளிகளை சந்தித்துள்ளோம்.

அந்த இடைவெளிகளை தற்போது நிரப்ப வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். இதனை எமது மக்கள் உணர்ந்து செயற்பட வேண்டுமென வட மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் தெரிவித்தார்.

ஆனைக்கோட்டை ஸ்ரீ கண்ணகை அம்மன் என வழங்கும் ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி அம்பாள் தேவஸ்தான மஹோற்சவத்தினை முன்னிட்டு ஆலய இந்து இளைஞர் மகளிர் மன்றத்தினரால் நடத்தப்படும் வருடாந்த சைவசமய போட்டிப் பரீட்சையில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் நேற்று முன்தினம் ஆலய முன்றலில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

எமது சமூகம் எப்படி வாழ்கின்றது, எப்படி வாழும் என்பதை எமது சமயம் வரையறை செய்து வைத்துள்ளது.

சைவ சமயத்தில் மிகவும் எளிமையான கருத்துக்கள் உள்ளமையால்தான் அதனை அதிகளவானோர் பின்பற்றி வருகின்றனர்.

ஆலயங்களில் இவ்வாறான பாரம்பரிய கலை நிகழ்வுகள், பரிசளிப்பு நிகழ்வுகள் நடைபெறுவதனால் மாணவர்களின் அறிவுத்திறன் வளர்க்கப்பட்டு வருகின்றது.

இதன்மூலம் எமது இரு கண்கள் என போற்றப்படும் சைவமும் தமிழும் வளர்க்கப்பட்டு வருகின்றன.

ஒரு கிராமத்தில் நல்லதொரு இளைஞர் சமுதாயத்தை உருவாக்குவதன் மூலம் அந்த கிராமத்தில் மட்டுமல்ல, அந்த நாட்டிற்கே பெருமை சேர்க்கப்படுகின்றது.

அம்பாளின் அருளுடன் இந்த ஆனைக்கோட்டை கிராமத்தில் இவ்வாறான நிகழ்வுகளை இளைஞர்கள் ஒன்று கூடி எதிர்வரும் காலங்களில் வெகு சிறப்பாக நடத்தி சைவத்தையும்தமிழையும் வளர்க்க வேண்டும்.

எதிர்காலத்தில் இவ் இளைஞர்கள் நல்ல தலைவர்களாக வந்து இந்த கிராமத்திற்கு மட்டுமல்ல இந்த நாட்டுக்கும் பெருமை சேர்க்க வேண்டும்.

இளைஞர்கள் பொறுப்புணர்ச்சியுடன் செயற்பட்டால் எமது பண்பாடு, கலாசாரம் பாதுகாக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-4)



கரணவாய் ஜே/350 கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நேற்றையதினம் டெங்கு விழிப்புணர்வு நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. இதன்போது கரவெட்டி பிரதேச செயலர், கரவெட்டி சுகாதார உத்தியோகத்தர்கள், கரணவாய் ஜே/350 பிரிவு கிராம சேவையாளர் சுகாதார வைத்திய அதிகாரி, நெல்லியடி பொலிஸார் உள்ளிட்டோர் கலந்து கொண்டு வீடுவீடாக சென்று விழிப்புணர்வு நடவடிக்கையில் ஈடுபட்டதோடு டெங்கு நுளம்பு பெருகக்கூடியதாக சூழலை வைத்திருந்தோர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேற்படி டெங்கு ஒழிப்பு நடவடிக்கை இடம்பெறுவதைப் படங்களில் காணலாம். *(படங்கள்: கரணவாய் செய்தியாளர்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைத் தரம் உயர்ந்தவர்களின் நிவாரணங்கள் நிறுத்தப்படுகின்றன

## ஏனைய பயனாளிகளுக்கு வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். காரைநகர் பிரதேச செயலாளர் பிரிவில் வாழ்க்கைத் தரம் உயர்ந்த சமுர்த்திப் பயனாளிகளின் சமுர்த்தி நிவாரண முத்திரைகள் நிறுத்தப்படுவதற்கான நடவடிக்கைகளை அப்பிரதேச செயலகம் மேற்கொண்டு வருவதாக தெரியவந்துள்ளது.

காரைநகர் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள சமுர்த்தி பயனாளிகளின் முத்திரைகளை மீளாய்வு செய்யும் செயற்பாடுகள் கடந்த வாரம் முதற்கட்டமாக மேற்கொள்ளப்பட்டன.

கிராம அலுவலகர் பிரிவு ரீதியாக இந்த மீளாய்வு நடவடிக்கையை உதவித் திட்டப் பணிப்பாளர் மற்றும் சமுர்த்தி அலுவலர்கள், சமுர்த்தி முகாமையாளர்களை உள்ளடக்கிய குழு மேற்கொண்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் காரைநகர் பிரதேச செயலாளர் பிரிவில் மட்டும் ஆயிரத்து 881 சமுர்த்திப் பயனாளிகள் சமுர்த்தி முத்திரைகளைப் பெற்றுவருகின்றனர்.

இவர்களில் கடந்த காலத்தில் அரசாங்கத் தொழிலைப் பெற்றவர்கள், குடும்ப மட்டத்தில் வருமானம் அதிகரித்தவர்கள், வெளிநாடுகளுக்குச் சென்றவர்களென பலருடைய வருமான மட்டம் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, மறுபக்கம் தொழில் இழந்தவர்கள், குடும்பத் தலைவனை இழந்து வருமானமின்றியுள்ளவர்கள் காணப்படும் நிலையில் இத்தகைய மீளாய்வின் மூலம் பாதிக்கப்பட்டவர்கள் நன்மையடையக் கூடிய வாய்ப்புகள் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் வாழ்க்கைத் தரம் உயர்ந்தவர்களின் சமுர்த்தி நிவாரண முத்திரைகளை நிறுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரியவந்துள்ளது. (செ-6)


கிராபிக்ஸ், அனிமேஷன், மல்டிமீடியா பயிற்சிகளுக்கான புலமைப்பரிசில்

Win 65% Scholarship



மல்டிமீடியா புலமைப்பரிசில்
பரீட்சை அனுமதி முற்றிலும் இலவசம்
விரும்பிய மொழியில் பரீட்சை
அடிப்படைத் தகைமை Grade 10
வினாத்தாள் 30 நிமிடங்கள் மட்டுமே
கலை, சினிமா, பொது அறிவு வினாக்கள்
இலவச பாடநூல்கள் (இந்தியா)
பயிற்சி முடிவில் இந்திய சான்றிதழ்கள்
தவணைமுறை கட்டண வசதி

இலவச புலமைப்பரிசில் பரீட்சை July 6th & 7th

100% PRACTICAL

Softview MULTIMEDIA SPECIALIST PROGRAM
Digital Pre-press
Digital Video Production
Graphics Design
AutoCAD ( 2D & 3D)
Mastering Multimedia

Softview ANIMATION SPECIALIST PROGRAM
2D & 3D Animation
Cartoon Animation
Web Animation
MAYA Animation
Graphics & Animation

இலவச அனுமதிகளை அருகிலுள்ள பயிற்சி மையங்களில் பெற்றுக்கொள்ளுங்கள்.

(சி-3848)

CSC-ASIAN COMPUTER EDUCATION

| யாழ்.நகரில் | சாவகச்சேரியில் | வவுனியா |
|---|---|---|
| 2G, ஸ்ரான்லி வீதி, T.P : 021-222 5677 | கட்டுக்காணி வீதி T.P : 021-2270267 | குருமண்காடு சந்தி மன்னார் வீதி T.P : 021-2262399 |


### பேருந்து-லொறி விபத்து; 14 பேர் காயம்!

வாகன விபத்தில் 14 பேர் காயமடைந்துள்ளனர்.

கொழும்பு - கண்டி வீதியில் தித்தவெல் மங்கட பிரதேசத்தில் பேருந்தும் லொறியும் மோதிக் கொண்டதில் இவ்விபத்து நேர்ந்துள்ளது.

இவ்விபத்து சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது காயமடைந்தவர்கள் வதுபிட்டிய மற்றும் வரக்காபொல வைத்திய சாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பிலிருந்து கந்துருவெல நோக்கி பயணித்த பேருந்தே இவ்வாறு விபத்துக்குள்ளானதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (2)


இன்று (03.07.2013)
புதன்கிழமை 25 ஆவது
திருமண நிறைவு நாளை
காணும்

**யோகேஸ்வரன்
மதிவதனி**

தம்பதியினரை பல்லாண்டு
காலம் சீரும் சிறப்புடன்
இவ்வுலகில் வளமோடு
வாழ்கவென
வாழ்த்துகின்றோம்.

**வாழ்த்துவோர்:**
பிள்ளைகளான
யோ.ஜனனி,
யோ.சதீஸ்சன் (பிரான்ஸ்)
யோ.ஜனார்த்தனி,
யோ.பஜீதன்

கரம்பைக்குறிச்சி கிழக்கு,
வரணி.



(சி-3841)

# சைவசமய அறிவுப் பரீட்சையும் செயன்முறை போட்டியும்

(யாழ்ப்பாணம்)

வண்ணை-சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகத்தினால் வருடாந்தம் நடத்தப்படும் பாடசாலை மாணவர்களுக்கிடையிலான சைவ சமய அறிவுப்பரீட்சை செயன்முறைப் போட்டி என்பன நடைபெறவுள்ள நிலையில் இப்போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இரு பிரிவுகளாக இடம்பெறவுள்ள இப் போட்டிகளில் தரம் 1-2 மாணவர்களுக்கு நீதி நூல் மனனப் போட்டியும் தரம் 3 தொடக்கம் தரம் 13 வரையிலான மாணவர்களுக்கு சைவ சமய அறிவுப் பரீட்சை, கோலம் போடுதல், மாலை கட்டுதல், தோரணம் பின்னுதல் ஆகிய செயன்முறைப் போட்டிகளும் நடைபெறவுள்ளன.

இதன்படி சைவசமய அறிவுப் பரீட்சை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 6 ஆம் திகதியும் நீதிநூல் மனனப் போட்டி ஒக்டோபர் மாதம் 13 ஆம் திகதியும் செயன்முறைப்போட்டி ஒக்டோபர் மாதம் 18 ஆம் திகதியும் நடைபெறவுள்ளன.

மேற்படி பரீட்சையிலும் போட்டிகளிலும் பங்குபற்ற விரும்புபவர்கள் எதிர்வரும் 19 ஆம் திகதிக்கு முன்பாக சைவசமய அபிவிருத்திக் கழக அறிவகம் ,இல 82 , நாவலர் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் எனும் முகவரியுடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

அத்துடன் ஒரு பாடசாலையில் இருந்து சைவ சமய அறிவுப் பரீட்சைக்கு 100 பரீட்சார்த்திகள் தோற்றுவார்களாயின் அப்பாடசாலையை ஒரு பரீட்சை நிலையமாக அமைத்துக் கொள்ளலாம் என்றும் விண்ணப்பப்படிவங்கள் யாவும் பாடசாலைகளுக்கு தபால்மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றும் சைவசமய அபிவிருத்திக்கழகத்தின் சமய பிரசாரகரும் உதவிப் பரீட்சை செயலருமான சு.சிறீகாந்தன் அறிவித்துள்ளார். (செ)


**கேள்வி விண்ணப்பம் கோரல்**


*பழைய கட்டடத்தில் இருந்து அகற்றப்பட்ட தீராந்திகள் (பாலை), நிலை, ஜன்னல், மரம் என்பன விற்பனைக்குண்டு.*
*பார்வையிடும் நேரம் காலை 9-3.30 மணிவரை*
**தொடர்புக்கு :** *499, கே.கே.எஸ்வீதி, யாழ்ப்பாணம்.*
*தொ.பே: 021 222 5072*
*(சி-3849)*


## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1969 இந்து(KO)<br>நட்சத்திரம்: பூரட்டாதி 3<br>கி.பா : 32.5<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L ஒப்புநோக்குநர்<br>தொ.இ:B640 | பிறப்பு: 1977 RC(Mu)<br>உயரம்: 5' 4"<br>தகைமை/தொழில்: A/LAdmin& FinanceNGO<br>தொ.இ:G884 |
| பிறப்பு: 1985 இந்து(விஸ்வகுலம்)<br>நட்சத்திரம்: பூரட்டாதி 3<br>கி.பா : 16<br>உயரம்: 5' 6"<br>தகைமை/தொழில்: O/Lநகை தொழில்<br>தொ.இ:B647 | பிறப்பு: 1985 இந்து(V)<br>நட்சத்திரம்: கேட்டை 4<br>கி.பா :34.25 உயரம்: 5'3 "<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ:G8885 |
| பிறப்பு: 1983 RC(Na)<br>நட்சத்திரம்: மகம் 4<br>கி.பா : 43.75 செவ் 12<br>தகைமை/தொழில்: O/L<br>தொ.இ:B648 | பிறப்பு: 1973 இந்து(V)<br>நட்சத்திரம்: மகம் 3<br>கி.பா : 4.5 உயரம்: 5' 3"<br>தகைமை/தொழில்: A/Lகணனி அச்சக வேலை<br>தொ.இ:G886 |
| பிறப்பு: 1980 RC(Na)<br>நட்சத்திரம்: உத்தராடம் 1<br>கி.பா : 54.5<br>உயரம்: 5' 7"<br>தகைமை/தொழில்:A/Lஅரச கட்டிட ஒப்பந்தக்காரர்<br>தொ.இ:B649 | பிறப்பு: 1989 இந்து(V)<br>நட்சத்திரம்: பூசம் 2<br>கி.பா: 54<br>உயரம்: 5' 3"<br>தகைமை/தொழில் A/L<br>தொ.இ: G888 |


சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் துவிச்சக்கர வண்டிகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் யாழ்ப்பாணத்திலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது. இதன்போது 50 பொதுமக்களுக்கு துவிச்சகரவண்டிகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, வடமாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ், ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் ஆகியோர் இணைந்து பயனாளி ஒருவருக்கு துவிச்சக்கர வண்டி வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

# இலங்கையின் 13 ஆவது சட்டதிருத்தம் ஈழப் போராட்டத்துக்கு எதிரானது

## சீமான் கண்டனம்

இலங்கை ஒற்றையாட்சி அரசமைப்பிற்குட்பட்ட ஒரு தீர்வை தமிழ் தேசியக் கூட்டமைப்பு கட்சியினர் ஏற்றுக்கொள்ள முடிவு செய்திருப்பது ஈழத் தமிழினம் அரை நூற்றாண்டு காலமாக நடத்தி வரும் அரசி யல் விடுதலைப் போராட்டத்திற்கு முரணானதும் எதிரானதும் ஆகும் என நாம் தமிழர்கட்சி தலைவர் சீமான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, ஈழத் தமிழர்களின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் இலங்கை அரசமைப்புச் சட்டத்திற்கு உட்பட்ட ஒரு ஏற்பாட்டை உறுதி செய்ய இலங்கையின் பொருளாதார அமைச்சரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தம்பியுமான பசில் ராஜபக்ஷ நாளை டில்லிக்கு வரவிருப்பது தெரியவந்துள்ளது.

கடந்த சில மாதங்களாகவே ஈழத் தமிழர் பிரச்சினைக்கு ராஜீவ் காந்தி-ஜெயவர்த்தன இடையே 1987 ஆம் ஆண்டு கையெழுத்தான இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கை நாட்டு அரசமைப்புச் சட்டத்தில் செய்யப்பட்ட 13 ஆவது திருத்தத்தின் கீழ் தீர்வு காணும் பேச்சுக்கள் நடந்து வருகின்றன.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் அந்நாட்டு நாடாளுமன்ற தமிழர் பிரதிநிதிகள் டில்லிக்கு சென்று பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்திவிட்டு சென்றுள்ளனர்.

இப்போது அந்நாட்டின் செல்வாக்குமிக்க அமைச்சர் பசில் ராஜபக்ஷ வருகிறார் என்றால் ஈழத் தமிழர்கள் மீது ஒரு தீர்வுத் திட்டத்தைத் திணிக்க முடிவெடுக்கப்பட்டுள்ளமை நன்கு புலனாகிறது.

இலங்கை ஒற்றையாட்சி அரசமைப்புச் சட்டத்தை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று அறிவித்த தமிழ் ஐக்கிய விடுதலை முன்னணியின் அங்கமாக இருந்த தலைவர்கள்தான் இன்றைக்கு தமிழ்தேசியக் கூட்டமைப்பாக இயங்கி வருகின்றனர்.

ஆனால், இப்போது அவர்கள் இலங்கை ஒற்றையாட்சி அரசமைப்பிற்குட்பட்ட ஒரு தீர்வை ஏற்றுக்கொள்ள முடிவு செய்திருப்பது ஈழத் தமிழினம் அரை நூற்றாண்டு காலமாக நடத்தி வரும் அரசியல் விடுதலைப் போராட்டத்திற்கு முரணானதும் எதிரானதுமாகும்.

13 ஆவது திருத்தத்தின்படி தமிழ் மாகாணங்களுக்கு கிடைக்கும் அதிகாரம் அனைத்தும் மாகாண சபைகளுக்கு கிடைக்கப் போவதில்லை. 1987 ஆம் ஆண்டு ராஜீவ் காந்தியும் ஜெயவர்த்தனவும் இணைந்து திணித்த ஒப்பந்தம் ஈழத்தமிழினத்திற்கு எந்தத் தீர்வையும் தராது என்று அப்போது சுதுமலையில் நடந்த பொதுக்கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் கூறினார்.

அப்போது அவர் கூறிய வார்த்தைகள் வருமாறு, இந்த ஒப்பந்தத்தால் தமிழரின் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படுமென நாம் நினைக்கவில்லை. இலங்கை அரசு இந்த ஒப்பந் தத்தை விழுங்கிவிடும் காலம் வெகு தூர த்தில் இல்லை. தமிழீழத் தனியரசே தமிழீழ மக்களின் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வை அளிக்கும் என்பதில் எனக்கு அசையாத நம்பிக்கை உண்டு.

தமிழீழ இலட்சியத்திற்காகவே நான் தொடர்ந்து போராடுவேன் என்பதையும் இங்கு திட்டவட்டமாக உங்களுக்கு எடுத்துக்கூற விரும்புகிறேன். போராட்ட வடிவங்கள் மாறலாம். ஆனால், எமது போராட்ட இலட்சியம் மாறப் போவதில்லை என்று தெளிவாக பிரபாகரன் பேசியுள்ளார்.

அது இன்றளவும் வரலாறாக தமிழர் நெஞ்சங்களில் உள்ளது. உண்மை இவ்வாறிருக்க ஈழத் தமிழினத்தின் மீது அவர்களுக்கு எவ்வித அரசியல் பொருளாதார அதிகாரத்தையும் வழங்காத 13 ஆவது திருத்தத்தைக் காட்டி ஒரு தீர்வைத் திணிக்க இலங்கை , இந்திய அரசுகள் முயற்சிப்பதைத் தமிழர்கள் கடுமையாக எதிர்க்க வேண்டும்.ஈழத் தமிழினத்தின் அரசியல் சம உரிமைப் போராட்டத்தின் இலக்கு தனித் தமிழ் ஈழமே.

எனவே, உலகெங்கிலும் வாழும் தமிழர்கள் அந்த உன்னத இலக்கை அடையும் போராட்டத்தில் தொடர்ந்து ஈடுபட வேண்டும் என சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (செ-2)

# அரச நியமிப்பு குழுக்கள் பயனற்ற விதத்தில் குவிப்பு

## ஐ.தே.க.எம்.பி.கருத்து

(கொழும்பு)

மீனவர்கள் கடலுக்கு பலியானதன் பின்னர் அவர்களது குடும்பங்கள் தற்போது அநாதரவான நிலையில் உள்ளதாகவும் அந்த பிரச்சினைக்கு தீர்வுகாண அரசாங்கம் குழுவொன்றை நியமித்து விட்டு மௌனமாக இருப்பதாகவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க குற்றஞ்சாட்டியுள்ளார். கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கம் மக்களின் பிரச்சினைகளைப் புறந்தள்ளிவிட்டு 13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பான பிரச்சினையைப் பூதாகரமாக்கி வருவதாக அவர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

அனைத்துப் பிரச்சினைகளுக்கும் குழுவொன்றை நியமித்துவிட்டு அரசாங்கம் மௌனமாக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட குழுக்கள் புலுமெண்டல் குப்பை மேட்டைப் போல் குவிந்துள்ளதாக கயந்த கருணாதிலக்க கூறினார். பிரச்சினைகளைக் தீர்க்க அரசில் இரைச்சல் மட்டுமே எழுப்பப்படுவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (செ-2)

## வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப் போட்டி

மாகாண கல்வித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான தடகளப் போட்டி-2013 இற்கான ஆரம்பநாள் விழா நாளை வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் வடமாகாண கல்வி, கலாசார பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.அத்துடன் நிறைவு நாள் விழா எதிர்வரும் 8 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்கு வடமாகாண கல்வி, கலாசார பண்பாட்ட அலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினறாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, சிறப்பு விருந்தினராக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் ஆகியோர் கலந்து கொள்ள வுள்ளனர். (2)

# வலி.கிழக்கு பிரதேச சபை - புத்தூர் கேள்வி அறிவித்தல் - 2013

*கீழ்க்குறிப்பிடப்படும் வேலைகளுக்கு இக்ராட் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.*

*கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி :*
*03.07.2013 தொடக்கம் 23.07.2013 மு.ப. 11.00 மணிவரை*
*கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி:*
*24.07.2013 நண்பகல் 12.00 மணிவரை*
*கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி:*
*24.07.2013 பி.ப.2.00 மணி*
*(கேள்விகள் திறந்து பரிசீலிக்கும்போது கேள்விப்பத்திரதாரரும் சமுகமளிக்கலாம்)*

*கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை தவிசாளர், வலி.கிழக்கு பிரதேசசபை, புத்தூர் என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப்பெட்டியில் நேரடியாகவோ எதிர்வரும் 24.07.2013ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைப்பதுடன் இணைப்பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பிவைக்கப்படல்வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் வேலையின் பெயர் எழுதப்படல்வேண்டும்.*

*குறிப்பு: கீழ்க்குறிப்பிடப்பட்ட வீதி வேலைகளுக்குரிய தார் பிரதேச சபையால் வழங்கப்படும்.*

| இல | வேலையின் பெயர் | ஆகக் குறைந்த இக்ராட் தரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணம் | VAT 12% NBT 2% |
|---|---|---|---|---|---|
| 01 | புதிய செம்மணி வீதி திருத்தம்- இருபாலை | C- 10 | 10,000.00 | 1,000.00 | 142.40 |
| 02 | செம்பாட்டு பிள்ளையார் வீதி திருத்தம்- நீர்வேலி | C- 10 | 10,000.00 | 1,000.00 | 142.40 |
| 03 | கலை ஒளி வீதி திருத்தம்- சிறுப்பிட்டி | C- 10 | 10,000.00 | 1,000.00 | 142.40 |
| 04 | பூதத்தம்பி வீதி திருத்தம்- அச்சுவேலி | C- 10 | 10,000.00 | 1,000.00 | 142.40 |

மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**வலி.கிழக்கு பிரதேசசபை,**
**தலைமை அலுவலகம், புத்தூர்.**
**03.07.2013**

(சி-3651)

**திரு.அ.உதயகுமார்,**
**தவிசாளர்.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தை மாதத்தில் பிறந்தவர்களின் குணாதிசயங்கள்

(கடந்த வாரத் தொடர்ச்சி)

சுய முயற்சியும் சொந்த அனுபவ பயிற்சியும் கொண்ட நீங்கள் தன் இலட்சியத்தின் வெற்றியை நோக்கி உறுதியுடன் உழைப்பீர்கள்.

எழுத்துத்துறை, விஞ்ஞானத்துறை, மெஞ்ஞானத்துறை, பொறியியல் (இஞ்சினியறிங்) ஆகியவற்றில் ஏதாவது ஒரு துறையில் நீங்கள் ஈடுபட்டால் நல்ல முன்னேற்றமடைய வழிபிறக்கும்.

நீங்கள் உங்கள் சொந்த முயற்சியாலும் உழைப்பாலும் நிறைய நிலபுலங்களையும் அரிய செல்வங்களையும் அடைந்து பெருமை பெற்று விளங்க முடியும். வாழ்வின் ஆரம்பத்தில் பலர் கஷ்டப்படும்படி நேரிட்டாலும் வாழ்வின் பிற்பகுதியில் வளமையாகும் சுகமாகவும் வாழ்வீர்கள். இது பொது விடயம்.

தை மகர மாதத்தில் பிறந்த நீங்கள் இலட்சியவாதிகள், மன உறுதி மிக்கவர்கள். உங்கள் வாழ்க்கையே இத்தகைய குணநலன்களால்தான் சிறப்பு பெற முடியும். வியாபாரங்கள், தத்துவ ரீதியான சிந்தனைகள் ஆகியவற்றை உங்களில் பலர் நம்பமாட்டார்கள். ஒப்புக்கொள்ளத்தக்க உண்மைகள், செயல்முறைகள், அவற்றின் விளைவுகள் ஆகியவற்றைக் குறித்து சில சமயங்களில் புத்தி பேதனப் படவும் நேரலாம். நிகழ்ச்சிகளின் அமைப்புகள், சந்தர்ப்ப சூழல்கள், சூழல்கள், சூழ்நிலை உண்மைகள் ஆகியவை உங்கள் செயல்களுக்கு சவால் விடுவதாக அமையும்.

நீங்கள் எதையும் வீணாக்க விரும்ப மாட்டீர்கள். வீணாகும் பொருட்கள், காலம், உழைப்பு ஆகிய அனைத்துமே காரணமில்லாமல் வீணாக்கப்படுவதில்லை என்று வாதிப்பீர்கள். இலட்சியத்தில் வெறியுணர்வோடு செயற்படும் நீங்கள் மற்றவர்களால் நினைத்தாலும் செய்ய முடியாத, செய்தாலும் முடிக்க முடியாதவற்றை தீவிரமாக செயல் புரிந்து முடித்து வெற்றி காண்பீர்கள். நீங்கள் சூரியன் நிற்கும் மகர ஸ்தானத்தில் பிறந்தவர்களாகையால் புகழ்,பொருளாதார அதிர்ஷ்ட வாய்ப்புக்கள்,பதவி உயர்வுகள் ஆகியவற்றை உங்கள் தனிப்பட்ட ஜாதக கிரகநிலைக்கேற்ப அடைவீர்கள்.

நீங்கள் மிகவும் உயர்ந்தவற்றையே அடையவும் அதையே இலட்சியமாகவும் கொண்டு உழைத்து, முயன்று உலகம் புகழத்தக்க பெருமைக்குரிய நிலையையும் அடைய முடியும்.

ஆனால், இடையில் மனச்சோர்வு அடைந்து முயற்சியில் தளர்ந்து விடக்கூடாது. வாழ்வின் கீழ் படியில் இருந்தாலும் வழமையான வாழ்வை அடைய படிப்படியாகத் தான் முன்னேறுவீர்களே தவிர ஜிவ் என்று பறந்து சென்று உங்கள் இலட்சியத்தை அடையமாட்டீர்கள்.

ஏனென்றால் பிடிப்பும் பிணைப்பும் ஏற்படுவதற்கு நிதானம் தேவை என்பதை உங்கள் அனுபவத்தால் நன்குணர்ந்திருப்பீர்கள். உங்களில் சிலர் உண்மையிலேயே உங்களுக்கு உதவக்கூடிய சந்தர்ப்பங்களை அவை நிச்சயமானவையல்ல என்று நினைத்துவிட்டு பின்னர் உங்கள் முடிபு சரியல்ல என்பதை உணர்ந்துகொள்ளவும் நேரும்!

நீங்கள் பெரும்பாலும் சூதாட்டங்களில் ஈடுபடமாட்டீர்கள். அப்படியே ஆட நேரிட்டாலும் எச்சரிக்கை உணர்வோடு நடந்துகொள்வீர்கள். நீங்கள் முன்னேறிவிட்டால் அதன் பின்னர் சரிவு என்பதோ வழுக்கி விழுவதென்பதோ ஏற்படாது. நீங்கள் தோல்விகள் அடைய நேரிட்டாலும் அந்த தோல்விகள் தற்காலிகமானவையாகவே இருக்கும்.

அத்தோல்விகளே பெரிய தொரு வெற்றிக்கு படிக் கட்டாகவும் அனுபவமாகவும் உங்களுக்கு அமையக் கூடும். நீங்கள் சம்பாதிக்கும் சம்பாதனையில் ஒரு பகுதியை சேமிப்பதற்கு முயல்வீர்கள். நீங்கள் உலக வாழ்க்கையில் அடையக்கூடிய இலாபங்களையும் பயன்களையும் தான் பெரிதாக கருதுவீர்களே தவிர அடுத்த பிறவியிலோ அடுத்த உலகிலோ வருகின்ற பெரும் பயன்களையோ பெருந் தீங்குகளையோ நஷ்டங்களையோ பெரிதாக நம்பமாட்டீர்கள்.

மகர ஸ்தானத்திற்கு அதிபதியான சனிக்கிரகமே ஆட்சியும் ஆதிபத்திய அதிகாரமும் உடையதாகையால் எவ்வளவு தைரியமுடையவர்களாக இருந்தாலும் உங்களில் பலருக்கு சில சமயங்களில் பயமும் கட்டுப்பாடுகளும் இயற்கையாகவே ஏற்படும்.

## ஜோதிடக்களம்

வாழ்வில் ஏற்படும் சந்தர்ப்ப சூழல்கள், நிகழ்ச்சிகள் முதலியவற்றில் சில உங்களைப் பயமுறுத்தும். தங்கள் அறிவுக்கு புலனாகாத ஏதோ ஒன்றுக்கு பயப்படுவார்கள். நண்டு பிடிக்குள் ஆன்மாவின் ஆதாரமே அகப்பட்டுக் கொண்டதைப் போல சில சமயங்களில் அவதிப்படுவீர்கள். ஆனால், உங்களுக்கு தெரிந்தவைகள் உங்கள் அனுபவத்தில் அறிந்தவைகள் ஆகியவற்றைத்தான் நம்பிக்கொண்டு உங்கள் செயல்களுக்கு வழிவகுத்துக்கொள்வீர்கள்.

நீங்கள் சோர்வடையாமலும் முணுமுணுக்காமலும் சோகமடையாமலும் இருக்க வேண்டுமானால் ஏதோ சிறிதளவு வெற்றியாவது அடைய வேண்டியிருக்கும். அதாவது நீங்கள் செய்யும் தொழிலில் வெற்றி வாய்ப்புக்குரிய அம்சங்கள் அமையவில்லை என்றால் நீங்கள் அதைரியப்பட்டு அதை விட்டு விடுவீர்கள். நீங்கள் எத்தகைய நெருக்கடியான சந்தர்ப்பங்களிலும் நேர்மையான தீர்ப்புகளை வழங்க வல்லவர்களாகவும் நிலைமையின் இக்கட்டான தன்மையை எளிதில் மாற்றக் கூடியவர்களாகவும் சிறந்து விளங்குவீர்கள்.

(முற்றும்)

# செயற்கை அவயவங்கள் வழங்குவதற்கான நடமாடும் சேவை

அவயவங்களை இழந்தவர்களுக்கு செயற்கை அவயவங்களை வழங்குவதற்கான நடமாடும் சேவையொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மன்னார் மெத்தா பவுண்டேஷன் நிறுவனத்தின் தொடர்பு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேற்படி நிறுவனத்தின் ஏற்பாட்டில் நாளை மறுநாள் வெள்ளிக்கிழமை மாங்குளம் தமிழ் மகா வித்தியாலயத்திலும் 6, 7 ஆம் திகதிகளில் முல்லைத்தீவு மணற்குடியிருப்பு மீனவர் அபிவிருத்திக் கட்டடத்திலும் இந்நடமாடும் சேவை நடைபெறவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். செயற்கை அவயவங்களுக்கான தேவைப்பாடுடையவர்கள் இந்நடமாடும் சேவையில் பங்குபற்றி பயனடைய முடியுமெனவும் அவர் கூறியுள்ளார்.

இந்நடமாடும் சேவையின்போது ஏற்கனவே செயற்கை அவயவங்களைப் பொருத்தியவர்களின் செயற்கை அவயவங்களுக்கான திருத்தப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

மேலும் புதிதாக செயற்கை அவயவங்களைப் பொருத்த வேண்டியவர்களுக்கு மருத்துவப் பரிசோதனையின் பின்னர் அளவுகள் எடுக்கப்பட்டு செயற்கை அவயவங்களைப் பொருத்துவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென மெத்தா பவுண்டேஷன் நிறுவனத்தின் தொடர்பு அதிகாரி தெரிவித்தார். (2)

# பாதாள உலகக் கோஷ்டியினர் மூவர் ஆயுதங்களுடன் கைது

(கொழும்பு)

கொழும்பு மாளிகாவத்தை பிரதேசத்தைச் சேர்ந்த பிரபல பாதாள உலகக் கோஷ்டித் தலைவனான மாமாஸ்மியின் நெருங்கிய இரண்டு சகாக்கள் உட்பட மூன்று பேரை பொலிஸார் கைது செய்ததுடன் 38 மி.மி. கைத்துப்பாக்கிகள் இரண்டுடன் கைக்குண்டுகள் இரண்டையும் மீட்டுள்ளனர்.

குறித்த சந்தேக நபரைத் தடுத்து வைத்து தொடர்ந்து தீவிர விசாரணைக்குட்படுத்திய போது கம்பஹா , வியாங்கொட பிரதேசத்தில் வைத்து ஏனைய சந்தேக நபர்களையும் கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மாளிகாவத்தை பிரதேசத்தில் போதைவஸ்து வியாபாரியும் பிரபல பாதாள உலக கோஷ்டி தலைவனுமான மாமாஸ்மியின் போதைவஸ்து பொருட்களை விநியோகிப்பவர்கள் என விசாரணையின் போது தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை எதிர்வரும் 6 திகதிவரை தடுத்து வைத்து விசாரணை செய்ய நீதிமன்றத்தில் உத்தரவு பெற்று மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (2)

# இந்திய வீடமைப்பு திட்டம் குறித்து இந்தியா திருப்தி

(கொழும்பு)

இலங்கையில் முன்னெடுக்கப் பட்டு வரும் வீடமைப்புத் திட்டம் குறித்து இந்தியா திருப்தி வெளி யிட்டுள்ளது. யுத்தம் காரணமாக வடக்கு, கிழக்கில் இடம்பெயர்ந்த மக்களுக்கு ஆயிரம் வீடுகள் அமைத்துக் கொடுக்கும் திட்டத்தின் இரண்டாம் கட்டம் சிறந்த முறையில் முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அபிவிருத்தி தொடர்பான விசேட செயலாளர் வீ.எஸ்.ராகவன் தலைமையிலான இந்திய பிரதிநிதிகள் குழுவொன்று வீடமைப்பு திட்டத்தை நேரில் பார்வையிட்டுள்ளது.

பயனாளிகள் இந்தத் திட்டத்தின் மூலம் நன்மை அடைந்துள்ளதாக குறிப்பிடப்படுகிறது. யுத்தத்தில் இடம்பெயர்ந்த தமிழ் மக்களுக்கு அநீதி இழைக்கப்படுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள போதிலும் தமிழர்களுக்கு மட்டுமே வீடுகள் வழங்கப்பட்டு வருவதாக இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (2)




உலக குருதிக் கொடையாளர் தினத்தை முன்னிட்டு குருதிக் கொடையாளர்கள், ஒழுங்கமைப்பாளர்கள் மற்றும் அனுசரணையாளர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் அலரி மாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது. தேசிய ரீதியில் 101 பேருக்கு விசேட விருதுகள் வழங்கப்பட்ட இந்நிகழ்வில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த மூவர் கௌரவிக்கப்பட்டுள்ளனர். இதன்படி வல்வெட்டித்துறையை சேர்ந்த குருதிக்கொடையாளரும் சிறந்த ஒழுங்கமைப்பாளருமான துரைசாமி சக்திவேல்- ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினாலும் கொக்குவிலைச் சேர்ந்த குருதிக் கொடையாளர் விஜயரட்ணம் ஜதுசன்- சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனாவினாலும் கொக்குவிலைச் சோந்த குருதிக் கொடையாளர் துரைமணி ரமணன் -பிரதி சுகாதார அமைச்சர் லலித் திசாநாயக்காவினாலும் விருது வழங்கி கௌரவிக்கப்படுவதை படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் நிலைமைகள் தொடர்பாக இந்திய தலைவர்களுக்கு எடுத்துரைப்போம்

## அமைச்சர் பசில் தெரிவிப்பு

13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தில் தேவையான மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு இலங்கை அரசாங்கம் எடுத்திருக்கும் தீர்மானம் மற்றும் அந்த தீர்மானத்தை எடுத்தமைக்கான நியாயப்பாடுகள் பற்றி இந்தியாவுக்கு தெளிவாக விளக்கமளிக்கப்படும் என்று அமைச்சரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற தெரிவுக்குழுவில் பங்கேற்காமல் இருப்பதென எடுத்திருக்கும் தீர்மானம், அதனால் ஏற்படக்கூடிய விளைவுகள் பற்றியும் இந்தியாவுக்கு விரிவாக எடுத்துரைக்கப்படும் என்றும் பசில் ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

நாளை வியாழக்கிழமை இலங்கை அரசை பிரதிநிதித்துவப்படுத்தி இந்தியா செல்லவுள்ள நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இவ்விஜயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 3 வருடங்களாக இந்தியா செல்வதற்கு எனக்கு சந்தர்ப்பம் கிடைக்கிவில்லை. இவ்வாறான நிலைமையிலேயே புதுடில்லி சென்று இலங்கையின் தற்போதைய நிலவரங்கள் பற்றி இந்திய தலைவர்களுக்கு எடுத்துக் கூறுவதற்கு ஏற்பாடாகியுள்ளது.

வடக்கில் வீடமைப்புத்திட்டம், மீனவர் விவகாரம், தமிழ்நாட்டில் இருந்து இலங்கைக்கும் இலங்கையிலிருந்து தமிழ்நாட்டுக்கும் பயணிக்கும் சுற்றுலாப் பயணிகளில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி போன்ற விடயங்கள் பற்றி இந்த விஜயத்தின் போது ஆராயப்படும்.

அதுமட்டுமல்லாது வடமாகாண சபைத் தேர்தல் குறிப்பாக அரசியலமைப்பு திருத்தம் பற்றி ஏற்பட்டுள்ள பல்வேறு அபிப்பிராயங்கள் மற்றும் எதிர்வரும் 9 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ள தெரிவுக்குழு நடவடிக்கைகள் பற்றியும் இந்த விஜயத்தில் புதுடில்லிக்கு விளக்கமளிக்கப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அண்மைக்காலங்களில் பல அரசியல் கட்சிகள் இங்கிருந்து இந்தியா சென்று வந்துள்ளார்கள். அவர்கள் அங்கு எதைச் சொல்லி வைத்தார்கள் என்று தெரியவில்லை.

இவ்வாறான நிலைமையில் இலங்கையின் தற்போதைய நிலவரம் குறித்து புதுடில்லிக்கு தெளிவான விளக்கத்தை வழங்குவதற்காகவே இந்த பயணம் அமைந்திருக்கும்



என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

13 ஆவது திருத்தத்தில் மாற்றங்களை ஏற்படுத்தப் போவதாக அரசிடமிருந்து அறிவிப்பு வந்ததையடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அண்மையில் புதுடில்லி சென்று இந்திய பிரதமர் உள்ளிட்ட அந்நாட்டு முக்கிய தலைவர்களை சந்தித்து இலங்கையின் நிலவரம் பற்றி விளக்கமளித்திருந்தனர். இதன் தொடர்ச்சியாகவே அமைச்சர் பசில் ராஜபக்ஷ இலங்கை அரசைப் பிரதிநிதித்துவப்படுத்தி நாளை வியாழக்கிழமை புதுடில்லி செல்லவிருக்கின்றார் என தெரிவிக்கப்படுகிறது. (2-5)

# பொலிஸார் தாக்கப்படும் சம்பவங்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

பொலிஸார் பிரதேச அரசியல்வாதிகளின் தாக்குதல்களுக்கு உள்ளாவது அதிகரித்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு குறிப் பிட்டுள்ளது.

இதனூடாக மக்கள் பொலிஸார் மீது கொண்டுள்ள நம்பிக்கைக்கு பங்கம் விளைவிக்கப்படுவதாக ஆணைக்குழுவின் செயலாளர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில்மனிதஉரிமைகள்ஆணைக்குழு பொலிஸ்மா அதிபருக்கு எழுத்து மூலம் அறிவித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பொலிஸ் உத்தியோகத்தர்கள் தமது கடமைகளில் ஈடுபட்டிருந்த சந்தர்ப்பங்களில் இவ்வாறான தாக்குதல்களுக்கு இலக்காகியுள்ளமை பதிவாகியுள்ளதாக அவர் கூறினார்.

பொலிஸார் மீதான நம்பிக்கை குறைவடையும் பட்சத்தில் எதிர்காலத்தில் மக்கள் சட்டத்தின் மீது கொண்டுள்ள நம்பிக்கைக்கும் பாதிப்பு ஏற்படக் கூடுமென சட்டத்தரணிநிமல்புஞ்சிஹேவாதெரிவித்தார். (2)

# வற்புறுத்தி வெளியேற்றும் வரை அரசியலில் இருந்து விலக மாட்டேன்

## அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

(கொழும்பு)

முஸ்லிம் காங்கிரஸ் என்பது அதிகாரத்துக்கு எதிரான சதிகார கட்சியல்ல. அரசுக்கு விசுவாசமான ஒரு பங்காளிக்கட்சி. பிடரியில் பிடித்து வெளியே தள்ளும் வரை அரசில் இருந்து கொண்டே சமுதாய நலனுக்காக நான் போராடிக் கொண்டு இருப்பேன். இவ்வாறு அக்கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கண்டி மாவட்ட அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் உரையாற்றிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒரு சிறந்த அரசியல் இராஜதந்திரி. தெளிவான சிந்தனை கொண்டவர். சுயமாக சிந்தித்து செயலாற்றும் திறன் படைத்தவர்.

என்வே, அவரது அரசாங்கத்தைப் பலவீனப்படுத்தும் நோக்கம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கு இல்லை.

முஸ்லிம் காங்கிரஸ் என்பது அதிகாரத்துக்கு எதிரான சதிகார கட்சியல்ல. அரசுக்கு விசுவாசமான ஒரு பங்காளிக் கட்சி. உள்நாட்டு சக்திகளுக்கு உடந்தையாக இருந்தோ அல்லது சர்வதேச சதிகளின் பக்கம் சார்ந்திருந்தோ நாட்டைக் காட்டிக்கொடுத்து பலவீனப்படுத்த வேண்டிய அவசியம் எமது கட்சிக்கு இல்லை.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வற்புறுத்தல்களுக்கு அடிபணிந்து கொள்கையை விட்டுக் கொடுக்கும் கட்சியோ தலைசாய்க்கும் கட்சியோ அல்ல.

பதின்மூன்றை பூதாகாரமாக்கி சிலர் பயமுறுத்த நினைக்கிறார்கள். இரு மாகாணங்களின் இணைப்பை மாகாண சபைகளால் மேற்கொள்ள முடியாது. பாராளுமன்றத்தின் அங்கீகாரம் அதற்கு அவசியம்.

பெரும்பான்மை இனத்தவரையே பெரும்பான்மையாகக் கொண்ட பாராளுமன்ற அதிகாரம் ஒருபோதும் அதற்கு இடமளிக்கப் போவதில்லை.

நாற்பது வருட கால அரசியல் அனுபவம் வாய்ந்த ஜனாதிபதியின் கைகளைப் பலப்படுத்தினால்தான் சிறுபான்மையினர் உரிமைகளைப் பேண வழி ஏற்படும்.

எவரின் தேவைக்கும் எவரின் கொந்தராத்துகளுக்கும் சதிகளுக்கும் பணிந்து நான் அரசைவிட்டு வெளியேறத் தயார் இல்லை.

பிடரியில் பிடித்து வெளியே தள்ளும் வரை அரசில் இருந்து கொண்டே சமுதாய நலனுக்காக நான் போராடிக் கொண்டே இருப்பேன் என்றார். (2)

# சுற்றுலாப் பயணிகள் குறித்து அமெ.தூதுவரிடம் விளக்கம் கோரல்

(கொழும்பு)

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மிச்சேல் ஜே சிசன் இலங்கை வெளியுறவு அமைச்சினால் விளக்கம் கோரலுக்காக அழைக்கப்பட்டுள்ளார்.

அமெரிக்க சுற்றுலாப் பயணிகளுக்கு அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் விடுத்துள்ள பயண எச்சரிக்கை தொடர்பில் விளக்கம் கோரலுக்காகவே அவர் அழைக்கப்பட்டுள்ளார்.

இதன்போது மிச்சேல் சிசனிடம் குறித்த எச்சரிக்கை விடுத்தமை தொடர்பில் விளக்கம் கோரப்படும் என்று தெரிவிக்கப்படுள்ளது.

இலங்கைக்குப் பயணம் செய்யும் அமெரிக்கர்கள் உட்பட்ட வெளிநாட்டவர்கள் வாய் மூலமாகவும் உடல் ரீதியாக பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

எனவே வெளிநாட்டவர்கள் குறிப்பாக பெண்கள் இலங்கையின் ஏனைய பயணிகளுடன் பேருந்து பயணம் செய்யும் போது கவனமாகப் பயணிக்க வேண்டுமென அமெரிக்க எச்சரிக்கையில் கூறப்பட்டிருந்தது. (2)

# பாதுகாப்பற்ற புகையிரத கடவைகளில் வேலிகளை அமைக்கும் நடவடிக்கை

நாற்பத்தைந்து அத்தியாவசிய பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகளில் பாதுகாப்பு வேலிகளை அமைக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக புகையிரதத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.


முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய மேலும் பல பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகளில் வேலிகளை அமைப்பதற்கான விலை மனுகோரும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக புகையிரதப் போக்குவரத்து அத்தியட்சகர் எல்.ஏ.ஆர்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

கடவைகளில் இடம்பெறும் விபத்துக்களை தடுக்கும் நோக்கிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக புகையிரதத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை ஒலியெழுப்பி மற்றும் மின் விளக்கு முறையின் ஊடாக பாதுகாப்பு நடைமுறையொன்றை ஏற்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளதாக புகையிரதப் போக்குவரத்து அத்தியட்சகர் குறிப்பிட்டார்.

200 கடவைகளில் இவற்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக புகையிரத திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (2)








தேசிய சேமிப்பு வங்கி மானிப்பாய் கிளையினால் நடத்தப்பட்ட தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கான கௌரவிப்பு விழா அண்மையில் நவாலி வீதி துரைஜயா மண்டபத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வங்கியின் வடபிராந்திய முகாமையாளர் வி.அருளானந்தம் உரையாற்றுவதையும் நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வங்கியின் செயற்பாட்டு உதவிப் பொது முகாமையாளர் ஈ.எம்.எம்.ஜி ஏக்கநாயக்க மாணவர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் கௌரவிக்கப்பட்ட மாணவர்கள் வங்கி உத்தியோகத்தர்களுடன் நிற்பதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தரிடம் எனது ஆன்மீகப் பயணம்



ஆன்மீகம் 50

அன்னை சித்தர்
இராஜ்குமார் குருஜி

...திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தேன்! ஆச்சிரமம் அமைதியாக இருந்தது. கண்டது கனவா? எதற்கு புலிப்பாணி முனிவர் சிலையை மட்டும் அந்த மஞ்சள் ஒளி குறிப்பிட்டுக் காட்டியது. ஒன்றும் புரியவில்லை. பிறகு என்னிடம் நித்திரா தேவி நெருங்கவே மறுத்துவிட்டாள்.

கதிரவனுக்கு முன்னெழுந்து காலைக் கடன்களைக் குறைவில்லாமல் முடித்தபின் சமயத்துக்கு காத்திருந்த நான் தக்கநேரம் கிடைத்தபோது சித்தரிடம் கண்ட கனவு பற்றியும் புத்தகத்திலே என் பெயரில்லை என்பதையும் குறைவாக கூறினேன்.

அதற்கு லேசாக சிரித்தவாறே காலம் வரும் காத்திரு! புரிய வேண்டியது அப்போது தானாக புரியும் என்று கூறிவிட்டு அரசமரத்தடி நோக்கி நடக்கலானார்.

எனக்கோ கண்ணைக் காட்டில் விட்டாற்போல் ஆயிற்று சிந்தித்தேன். சிந்தை குழம்பியது. குழம்பிய குட்டையில் மீன்பிடிக்க முயன்றேன். மீனும் சிக்கியது. அதுவோ தங்க மீன். இதை வெளியில் சொல்ல முடியுமா? ஞானத்தை அடைய நான் எனும் ஆங்காரத்தை அடக்க வேண்டும். ஓங்காரத்தை எழுப்ப வேண்டும். ஞானிகள் எக்காரணத்தைக் கொண்டும் சுய விளம்பரம் செய்தல் கூடாது. அது அவர்களை அதல பாதாளத்தில் ஆழ்த்திவிடும். சில ஞானிகள் சில சந்தர்ப்ப சூழ்நிலைகளால் தம்மை வெளிப்படுத்திக் கொள்ள நேரிடும். அப்படி சூழ்நிலைக் கைதிகளானவர்கள் தம் கை விலங்கை ஒடித்தெறிய ஒரே ஒரு வழிதான் உண்டு. அதுதான் அன்னதானம், தம்மை தேடி வருவோர் வயிறு குளிர அன்னதானம் செய்தால் அவர்கள் தீவினை, தீச்சுவாலை குறையும் சொத்துக்களை வாங்கிச் செல்வம் சேர்த்து சுக வாழ்வு வாழும் எவரும் துறவியாக மாட்டார்கள். ஞானிகள் வகையில் சேரமாட்டார்கள் என்று ஆசான் அவர்கள் திரும்ப திரும்பச் சொல்லக் கேட்ட போதெல்லாம் பொருள் புரியாதவர்கள், சித்தர் வாக்கினை சிந்தித்து பார்த்தபோது தான் தெளிந்தேன். மௌனமானேன்.



அமைதி என்னைத் தேடி வந்தது. ஆம் கண்டவர் விண்டிலர்! விண்டவர் கண்டிலர் இது எவ்வளவு பெரிய உண்மைக் கூற்று.

**ஐய்யா போட்ட அரசாங்க உத்தரவு!**

சித்தர்பெருமானைப் பற்றிக் கேள்விப்பட்டோ அல்லது அவரின் பக்தர்கள் மூலமாகவோ பல தரப்பினர் சுவாமிகளைத் தேடி வருவது வழக்கம். விளம்பரம் விரும்பாத ஒருவரை இப்படி ஏழைமுதல், செல்வந்தர்வரை, படிக்காதவர்களிலிருந்து பெரிய படிப்பாளிகள் வரை தேடி வருகிறார்கள்! என்று அதிசயமாயிருக்கும்.

பூக்களை தேடி வரும் வண்டுகளுக்கு யார் போய் சொன்னார்கள் மலரைப் பற்றி. அது இருக்குமிடத்தைப் பற்றி. இது எப்படி இயற்கையோ! அதைப் போல அய்யனைக் காண வருவதும் இயற்கை தானே! என்று என்மனம் எனக்கு பாடம் நடத்தியது. அப்படி வருபவர்களில் திரு.வி.ராமதாஸ் அவர்கள் சாமிகளில் அளவிலா பக்தி கொண்டவர். அடிக்கடி சுவாமிகளைக்காண வருவார். இதனால் அவர் எனக்கு பழக்கமானார். அன்னதானத்திற்கு போஷகர் தேடி அலையும் நான் ஒரு நாள் அவரிடம் என் கடமையை செய்தேன். தாங்கள் ஆபிஸர் அரசாங்கத்தில் பெரும் பதவி வகிப்பவர். தாங்கள் சொன்னால் பலர் இசைவார்களே! அன்னதானத்திற்கு அது உதவியாக இருக்குமே என்றேன்.

இதைக்கேட்ட அவர் அதற்கென்ன செஞ்சிடலாம். தர்மகாரியமாயிற்றே! என்றவர் சற்று தயங்கி இப்போது வகிக்கும் பதவி என் டிப்பார்ட்மெண்ட் மூலமாக உங்களுக்கு நான் எந்த வகையிலும் உதவிட முடியாது. இந்த அன்னதானம் போன்ற விடயங்களுக்கு பக்தியான பணக்காரர்கள் தான் உபயோகப்படுவார்கள்.

தொடரும்

# இந்தியா கச்சதீவைக் கொடுத்துவிட்டு, கைமாறாக அடியை வாங்குகிறது

கச்சதீவை இந்தியா இலங்கையிடம் ஒப்படைத்து 39 ஆண்டுகள் கழிந்துவிட்டன. கச்சதீவில் தமிழக மீனவர்கள் மீன்பிடிக்கும் உரிமையும் தங்கத்தட்டில் வைத்து தாரை வார்த்து 37 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன. அன்று முதல் இன்றுவரை தமிழக மீனவர்கள் கண்ணீர்க் கடலில் மிதந்து கொண்டிருக்கிறார்கள். கச்சதீவு அருகே மீன்பிடிக்கப் போகவே அச்சப்படுகிறார்கள். போனால் உயிரோடு திரும்ப முடியுமா என்று கேட்கிறார்கள்.

இராமநாதபுரம், புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம் ஆகிய கடலோர மாவட்டங்களில் வாழும் தமிழக மீனவர்கள் தொன்று தொட்டு கச்சத்தீவைச்சுற்றியுள்ள கடலில் மீன்பிடித்து அன்றாட வாழ்க்கையை நடத்தி வந்தனர். சோழபாண்டியர் காலத்தில் இந்தக் கடலில் முத்துக் குளித்தல், சங்கு குளித்தல் இடம் பெற்றது.

ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாத இறுதியில் கிழமைக் கணக்கில் நடக்கும் சமய விழாவில் கலந்து கொள்வதற்காக இந்த தீவிற்கு தமிழக மீனவர்கள் தொழுகை நடத்துவதற்காக இராமேஸ்வரத்துக்கு அருகில் உள்ள தங்கச்சிமடத்தை சேர்ந்த கத்தோலிக்க மதகுரு கச்சதீவிற்கு செல்வது வழக்கம் என்று வரலாற்றுப் பதிவேடுகள் தெரிவிக்கின்றன. வட இலங்கையில் இருந்தும் - குறிப்பாக பாசையூர், குருநகர்- கத்தோலிக்கத் தமிழர்கள் தோணிகள் மூலம் இந்த சமய விழாவுக்குச் சென்று கலந்துகொண்டார்கள்.

1974 எழுதிய உடன்படிக்கையின்படி இரு நாடுகளும் பரம்பரை பரம்பரையாகத் தங்கள் நாட்டிற்குச் சொந்தமான கடல் எல்லைகளில் எந்தெந்த உரிமைகளை அனுபவித்து வந்தனவோ அந்தந்த உரிமைகளைத் தொடர்ந்து அனுபவிக்கலாம் என்று பொதுவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

1976 ஆம் ஆண்டு எழுதப்பட்ட உடன்படிக்கையின்படி கச்சதீவுப் பகுதிக்கு தமிழக மீனவர்கள் செல்லக் கூடாது. மீன்பிடிக்கவும் கூடாது. கச்சதீவு அந்தோனியார் திருவிழாவிற்கு அடியார்கள் போகக் கூடாது என இந்திய அரசு அறிவித்தது. அப்போது தமிழகத்தில் ஆளுநர் ஆட்சி நடந்து கொண்டிருந்தது. கச்சதீவைத் தாரைவார்த்துக் கொடுத்தது குறித்து அப்போது கருத்து தெரிவித்த இராமநாதபுரம் மன்னர் இராமநாத சேதுபதி மத்திய அரசின் இந்த முடிவு துக்ககரமானது. கண்ணீர் விட்டு அழுவதைத் தவிர வேறு வழியில்லை என்றார்.

1976 ஆம் ஆண்டு எழுதப்பட்ட உடன்படிக்கையைத் தொடர்ந்து 1983 இல் தமிழ்நாடு கடல்வள மீனவர் சட்டம் கொண்டுவரப்பட்டபோது கச்சதீவு எல்லை மாற்றி அமைக்கப்பட்டது. இப்போதைய சிக்கலுக்கு இந்தச் சட்டம் இன்னொரு காரணமாகும்.

கச்சதீவு தமிழக மீனவர்கள் மீன்பிடிக்கும் உரிமையும் தாரை வார்த்ததைத் தொடர்ந்து தமிழ்நாட்டு மீனவர்களை சனி பிடித்துக்கொண்டது. 1983 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 13 இல் தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை தொடங்கிய தாக்குதல் இன்று வரை 30 ஆண்டுகளாக நீடித்துக் கொண்டிருக்கிறது.

இந்தியாவுக்கு சொந்தமான கச்சதீவை பிரதமர் இந்திரா காந்தி யாரையும் கலந்து கொள்ளலாம் நாடாளுமன்றத்தின் ஒப்புதல் பெறாமல் ஏதோ தனது சீதனச் சொத்து என்று நினைத்து பிரதமர் சீறிமாவோ பண்டாநாயக்காவோடு உடன்படிக்கை எழுதிக் கையளித்துவிட்டார். அன்று முதல் தடியைக் கொடுத்து அடிவாங்கின கதைதான். வைகோவின் கணக்கின்படி 578 மீனவர்கள் இலங்கைக் கடற்படையின் துப்பாக்கிச் சூட்டுக்கு அல்லது அவர்களது படகுகள் மூழ்கடிக்கப்பட்டதால் பலியாகியுள்ளார்கள்.



1974 இல் கச்சதீவு பற்றிய உடன்படிக்கை எழுதப்பட்ட போது தி.மு.க தான் ஆட்சிக் கட்டிலில் இருந்தது. முதல்வர் கருணாநிதி ஒப்புக்கு இந்தியப் பிரதமர் இந்திரா காந்திக்கு கடிதம் எழுதித் தனது எதிர்ப்பைத் தெரிவித்தார். ஜூன் 29, 1974 அன்று அனைத்துக் கட்சிகளது மாநாட்டைக் கூட்டி தீர்மானம் நிறைவேற்றி மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தார். ஆனால் தீர்மானத்தில் கையெழுத்திட அதிமுக மறுத்துவிட்டது.

அதன் பின் மாறி மாறி ஆட்சிக்கு வந்த திமுகவும் அதிமுகவும் கண்ணாமூச்சி பிடித்து விளையாடின. கலைஞர் கருணாநிதியை செல்வி ஜெயலலிதாவும் ஜெயலலிதாவை கலைஞர் கருணாநிதியும் மாறி மாறி திட்டிக்கொண்டு வருகிறார்கள்.

2006 இல் திமுக அரசு மீண்டும் பதவிக்கு வந்த போது இந்தியா கச்சதீவை மீளப்பெற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டு மீண்டும் சட்டசபையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால், அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த ஜெயலலிதா பிரதமர் வாஜ்பாய்யி அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் கச்சதீவுச் சிக்கலுக்கு அதனையும் அதனை அண்டிய கடற்பகுதியையும் மீன்பிடிக்கவும் வலைகளை உலர்த்தவும் யாத்திரை போகவும் முடிவில்லாத குத்தகைக்கு எடுக்க வேண்டும் என்றும் ஆலோசனை கூறினார். அதற்கு முன்னர் 1994 ஆம் ஆண்டு பிரதமர் பி.வி.நரசிம்மராவுக்கு எழுதி கடிதத்தில் கச்சதீவு இலங்கைக்குக் கையளிக்கப்பட்டதை நியாயப்படுத்தினார். இந்தக் குறுணித் தீவை இலங்கைத் தீவுக்கு இந்தியா கையளித்தது இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவின் நன்மை கருதியே எனக் கூறினார்.

தொடரும்

நக்கீரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

504

## ராணியும் வேலைக்காரியும்



வைசாலி நகரில் ஹீரா என்ற பணக்கார வியாபாரிக்குப் பல ஆண்டுகளாக குழந்தை பாக்கியம் இல்லாமலிருந்தது. இறுதியில் அவர் நாற்பது வயதை எட்டியபோது ஒரு பெண் குழந்தை பிறந்தது. பல ஆண்டுகள் கழித்துப் பிறந்த குழந்தையை ஹீரா கண்ணும் கருத்துமாய் வளர்த்து வந்தார். ஒரு நாள் அவர் குழந்தையுடன் தனது மாளிகைத் தோட்டத்தில் பொழுதுபோக்கிக் கொண்டிருந்தார். குழந்தையைப் புல்த் தரையின் மீது ஒரு பட்டுத் துணியை விரித்து அதன் மீது கிடத்தியிருந்தார். அந்த சமயம் வானில் பறந்து வந்த ஒரு ராட்சசக்கழுகு குழந்தையை தன் கால்களால் பற்றிக் கொண்டு வானில் பறந்து சென்று விட்டது. "ஐயோ! என்குழந்தை! என் குழந்தை!!" என்று அலறி ஹீரா தன்ஆட்களைக் கூவி அழைத்தார். ஆனால் குழந்தையை அலேக்காகத் தூக்கிக் கொண்டு வானில் பறந்துவிட்ட கழுகை யாராலும் ஒன்றும் செய்ய முடியவில்லை உண்மையில், அது சாதாரணக் கழுகல்ல! அது பூர்வ ஜென்மத்தில் ஒரு யட்சனியாக இருந்தது. ஒரு முனிவர் இட்ட சாபத்


அம்புலிமாமா கதைகள்

தினால் அது கழுகாகமாறியது. மீண்டும் சுய உருவம் அடைதற்குப் பல ஆண்டுகள் ஆகும் என்று முனிவர் கூறியிருந்தார். வானில் பறந்து வந்த யட்சிணிக் கழுகு, ஹீராவின் அழகான பெண் குழந்தையைக் கண்டதும் தான் எடுத்து வளர்க்க விரும்பியது. ஆகையால் அது குழந்தையை தூக்கிக் கொண்டு தான் வசித்து வந்த காட்டினை அடைந்தது. குழந்தைக்கு சகுந்தலா என்று பெயரிட்ட கழுகு, அதை மிகுந்த பாசத்துடன் வளர்த்தது. குழந்தை சிறுமியான பிறகு, தானே குருவாக இருந்து அவளுக்கும் பல விடயங்களைக் கற்பித்தது.

பல கலைகளிலும் அவளை வல்லாளாக்கியது. கழுகின் அரவணைப்பில் வளர்ந்த சகுந்தலா சில ஆண்டுகளில் அழகான மங்கையாக மாறினாள். ஒரு நாள் அது சகுந்தலாவிடம், மகளே! முன்னமே கூறியது போல், நான் ஒரு யட்சிணி. என்னுடைய சாபம் இன்னும் சில நாட்களில் தீர்ந்து நான் சுய உருவம் பெற்று யட்சலோகம் சென்று விடுவேன். மானிடப் பெண்ணான உன்னை நான் அழைத்துச் செல்லமுடியாது. ஆகவே, இனி நீ , உன் சொந்தத் தாய், தகப்பனிடம் போய்ச் சேர்ந்து விடு!" என்றது. சில நாள்களிலேயே, கழுகு யட்சிணியாக மாறி தன்னுடைய உலகத்திற்குச் சென்றுவிட்டது. சகுந்தலா கழுகிடம் பிரியாவிடை பெற்றபின், தன் பிறந்தகமான வைசாலி நகரை நோக்கிச் செல்லத் தொடங்கினாள். செல்லும் வழியில் ஒரு அடர்ந்த காடு குறுக்கிட்டது. காட்டின் நடுவே ஒரு அரண்மனையைக் கண்டதும் அவள் ஆச்சரியமடைந்தாள். ஆர்வம் மேலிட, அவள் அந்த அரண்மனைக்குள் நுழைந்தாள். அங்கு அனைவரும் ஆழ்ந்த உறக்கத்




தில் இருந்தனர். ஏதோ மயக்கத்தில் ஆழ்ந்து கட்டைகளாகக் கிடந்தனர் என்று அவளுக்கு புரிந்தது. அரண்மனையின் படுக்கை அறையில் அவள் நுழைந்த போது அங்கு மிக அழகான



இளவரசன் ஒருவனும் மஞ்சத்தில் மயங்கிக் கிடந்தான். படுக்கை அறையில், அவனு டைய ஓவியம் ஒன்று வரையப்பட்டிருந்தது. அந்த ஓவியத்தில், இளவரசன் ஒரு நகை அணிந்து காணப்பட்டான். ஆனால், மஞ்சத்தில் மயங்கி இரந்த இளவரசன் கழுத்தில் நகை காணப் படவில்லை. இளவரசன் இருப் பதற்கும் ஏதோ சம்மந்தம் இருப்பதாக அவள் உணர்ந்தாள். அவனுடைய கால டியில் ஒரு பெட்டியில் அந்த நகை காணப் பட்டது. ஏதோ ஓர் உள்ளுணர் வால் தூண்டப்பட்ட அவள், அந்த நகையை எடுத்து அவனுடைய காலடியில் ஒரு பெட்டியில் அந்த நகை காணப் பட்டது. ஏதோ ஓர் உள்ளுணர் வால் தூண்டப்பட்ட அவள், அந்த நகையை எடுத்து அவனுடைய கழுத்தில் அணிவித்தாள். உடனே இளவரசன் மயக்கத்திலிருந்து விடுபட லானான். அப்போதுதான், சகுந்தலா விற்கு தன்னைப் பற்றியஉணர்வு வந்தது. காட்டிலேயே வாழ்ந்ததனால், அவள் எளிய ஆடை அணிந்திருந்தாள். இளவரசன் முன் அந்த ஆடையில் தோன்ற விரும்பாமல் அங்கிருந்த நல்ல ஒரு ஆடையை எடுத்துக் கொண்டு, நந்தவனத்திலிருந்த ஓடையில் குளிக்கச் சென்றாள். நகையை இளவரசன் கழுத்திலிருந்து அகற்றிப் பெட்டியில் வைத்த பிறகே அவள் குளிக்கச் சென்றாள். அவள் குளித்துக் கொண்டு இருக்கையில், அங்கு ஒரு விகாரமான உருவம் கொண்ட கூனி அழுது கொண்டே சென்றாள்.

அவளை அழைத்த சகுந்தலா அவள் அழுவதற்கான காரணத்தைக் கேட்டாள். தான் விகாரமான கூனியாக இருப்பதால், தன் கணவன் தன்னைப் புறக்கணித்து விட்டார் என்றும், தான் அதனால் தற்கொலை செய்து கொள்ளப்போவதாகவும் கூறினாள். அவளை சமாதா னப் படுத்திய சகுந்தலா அவளை அரண்மனைக்குச் செல்லுமாறும், தான் சற்று நேரத்தில் அங்கே வருவதாகவும், அவளுடைய வசதியான வாழ்க்கைக்குத் தான் உதவி செய்வதாகவும் கூறினாள். கூனி அவ்வாறே அரண் மனைக்குச் சென்றவள், ஒவ்வோர் அறையாக ஆராய்ந்த பின், இளவரசன் அறையை அடைந்தாள். சகுந்தலாவிற்குத் தோன்றியது போல் அவளுக்கும் தோன்ற, உடனே அவள் அந்த நகையை எடுத்து இவரசனின் கழுத்தில் அணிவித்தாள். மயக்கத்தில் இருந்து விடுபட்ட இளவரசனிடம் கூனி தான் ஒரு ராஜகுமாரி என்றும், அவனை மயக்கத்திலிருந்து மீட்டது தான்என்றும் கூற இளவரசனும் அதை நம்பி விட்டான். அதற்குள் அரண்மனையிலிருந்த அனைவரும் மயக்கத்தில் இருந்து மீண்டனர். சகுந்தலா குளித்து



விட்டு , அரண் மனைக்குள் நுழைந்து, இளவரசனின் அறையை அடைந்த போது அங்கு ஏற்கனவே இருந்த கூனி, சகுந்தலாவை இளவரசினிடம் காட்டி, "அதோ! அவள்தான் என் வேலைக் காரி!" என்றாள். கோபமுற்ற சகுந்தலா, கூனியைத் திட்டினாள். பிறகு, இளவரசனிடம் உண்மையை எடுத்துரைத்தாள். ஆனால், கூனி தான் சொல்வதுதான் உண்மை என்று சாதித்தாள். அவர்கள் இருவரில் யார் கூறுவது உண்மை என்று இளவரசனால் புரிந்து கொள்ள முடியவில்லை.

இதற்குள் சகுந்தலா "இளவரசே! கடவுள் முன் சீட்டு எழுதிப்போடுகிறேன். சில சீட்டுகளில் "சகுந்தலா ராஜகுமாரி" என்றும் சில சீட்டுக்களில் "சகுந்தலா வேலைக்காரி" என்றும் எழுதியிருக்கும். பிறகு, கண்களை மூடிக்கொண்டு அதில் சீட்டுக்களை நான் எடுப்பேன். அவற்றில் எல்லாம் "சகுந்தலா ராஜகுமாரி" என்று எழுதப் பட்டிருக்கும். அப்படி நிகழ்ந்தால் நான் தான் ராஜகுமாரி என்று ஒப்புக் கொள்வீர்களா?" என்று கேட்டதும், இளவரசன் ஒப்புக்கொண்டான். அதன் படியே, பல சீட்டுக்களைத் தயாரித்த சகுந்தாலா அம்மன் படத்திற்கு முன் அவற்றை வைத்து, தன் கண்களை மூடிக்கொண்டு, அவற்றில் பாதியைப் பொறுக்கினாள். அவை யாவற்றிலும் "சகுந்தலா ராஜகுமாரி" என்றே எழுதப் பட்டிருந்தது. ஆகையால், இளவரசன் சகுந்தலா கூறியதையே உண்மை என்று ஒப்புக் கொண்டு, கூனியை விரட்டி விட்டான். சகுந்தலாவை இளவரசன் திருமணம் செய்து கொண்டான். திருமணத்தின் போது வந்த விருந்தினர்களில், சகுந்தலா தன் தந்தை ஹீராவை சந்தித்து, மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தாள். திருமணம் கோலாகலமாக நடந்து முடிந்தது. ஆனால், சகுந்தலாவின் தந்தை ஹீரா சீட்டுக் குலுக்கலில் தன் மகள் ஏதோ சாமர்த்தியமாகச் செய்து தான் நினைத்ததை சாதித்திருக்கிறாள் என்று தோன்றியது. அவர் சகுந்தலா வைத் தனிமையில் விசாரித்த போது, அவள், "ஆம்!" அதில் என் சாமர்த்தியம் அடங்கியுள்ளது. நான் நான்கு காகிதங்களை எடுத்துக் கொண்டேன். ஒவ்வொன்றையும் மூன்றாக மடித்தேன். மேல் படிப்பிலும், கீழ் மடிப்பிலும் "சகுந்தலா வேலைக் காரி" என்று எழுதிய பின், நடு மடிப்பில், "சகுந்தலா ராஜகுமாரி" என்று எழுதிவிட்டேன். பிறகு அவற்றை மூன்றாகக் கிழித்தேன். மேல் மடிப்பிலும் கீழ் மடிப்பிலும் ஒரு பக்கம் மட்டுமே கிழித்திருந்ததால், அந்தப் பக்கம் சொறசொறப்பாக இருக்கும். நடு மடிப்பில் இரண்டு பக்கமும் கிழிக்கப் பட்டதால், இரண்டு பக்கமும் சொறசொறப்பாக இருக்கும். கண்களை மூடிக் கொண்டு சீட்டுக்களை எடுக்கையில், இரு பக்கமும் சொறசொறப்பாக இருக்கும். நான்கு சீட்டுக்களை மட்டும் பொறுக்கி எடுத்தேன். விரல்களால் தடவிப் பார்த்ததில் அது தெரிந்துவிட்டது. அவற்றில் சகுந்தலா ராஜகுமாரி என்று எழுதப் பட்டிருந்தது. இதுதான் எனது வெற்றியின் ரகசியம்!" என்றாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய ஊடகங்கள் செயற்படுகின்றன-ஐ.தே.க.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைய ஊடகங்கள் செயற்பட்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

ஊடகங்களில் எவை பிரசுரிக்கப்பட வேண்டும் எவை பிரசுரிக்கப்படக் கூடாது என்பதை ஜனாதிபதியே நிர்ணயிக்கின்றார் என மேல் மாகாண சபையின் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மாதாந்தம் ஊடக நிறுவனங்களின் பிரதானிகளை அழைத்து அரசியல் நிலைமைகள் குறித்து கலந்துரையாடுவதுடன் எவற்றை பிரசுரிக்க வேண்டும் என்ற ஆலோசனைகளையும் வழங்கி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி ஜனாதிபதி ஊடகங்களின் மீது அழுத்தங்களை பிரயோகித்து வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அடிப்படைவாதிகளினால் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து ஊடகங்கள் தகவல்களை வெளியிடுவதில்லை எனவும் இது ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமைவாகவே நடைபெறுகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனை தாம் மக்களின் தகவல் அறிந்து கொள்ளும் உரிமையை முடக்கும் செயலாகவே தாம் நோக்குவதாக தெரிவித்துள்ளார். கடும்போக்கு அமைப்புக்களின் நடவடிக்கைகளினால் சர்வதேச ரீதியில் ஏற்படக் கூடிய அபகீர்த்தியைக் கருத்திற்கொண்டு இவ்வாறு ஊடகங்களில் தகவல்கள் வெளியிடப்படுவதில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2)

# இலங்கைக்கு சர்வதேச சமூகம் ஆதரவை வழங்க வேண்டும்

## கார்ல் ரைட் தெரிவிப்பு

யுத்தத்தின் பின்னரான இலங்கைக்கு சர்வதேச சமூகம் போதியளவு ஆதரவை வழங்க வேண்டுமென பொதுநலவாய நாடுகள் உள்ளூராட்சி அமைப்பின் செயலாளர் நாயகம் கார்ல் ரைட் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் பின்னரான பயணத்திற்கு இவ்வாறு ஒத்துழைப்பு வழங்க வேண்டியது அவசியமானது என குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை தொடர்பில் ஆக்கபூர்வமான விமர்சனங்களை வெளியிட்டு போதியளவு உதவிகளை வழங்க வேண்டியது மிக அவசியமானது எனவும் பல தசாப்த யுத்தத்தினால் ஏற்பட்டுள்ள வடுக்களை ஆற்றுவதற்கு உதவிகள் வழங்கப்பட வேண்டுமெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உரிமை மீறல் பிரச்சினைகள் குறித்து சுட்டிக்காட்டுவதில் தவறில்லை என்ற போதிலும் இலங்கையைப் புறக்கணிப்பதன் மூலம் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (2)

# வெலிக்கடை இந்திய கைதிகள் தமிழக சிறைகளுக்கு மாற்றம்

வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய கைதிகள் சொந்த நாடுகளுக்கு மாற்றம் செய்யப்பட வுள்ளனர்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இந்திய கைதிகள் அவர்களது நாட்டு சிறைகளுக்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

பதினொரு தமிழக கைதிகள் இவ்வாறு இந்தியாவிற்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளனரென கூறப்படுகின்றது.

போதைப் பொருள் கடத்திய குற்றத்திற்காக குறித்த தமிழக பிரஜைகளுக்கு இலங்கையில் கடந்த 2010 ஆம் ஆண்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. இலங்கையில் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபடுவோருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்படுகின்றது.

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையில் கைதிகளைப் பரிமாறிக் கொள்ளக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

குறித்த தமிழக கைதிகளுக்கான தண்டனை குறைக்கப்படாது என்ற போதிலும் தமிழக சிறைகளில் தண்டனை அனுபவித்தால் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் அவர்களைப் பார்வையிட சந்தர்ப்பம் கிட்டும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழக அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் குறித்த கைதிகளை இடமாற்றம் செய்ய முடியும் என தெரிவிக்கப்படுகின்றது. (2)

# சூதாட்ட விடுதி முற்றுகை

தர்மபால மாவத்த பிரதேசத்தில் சட்டவிரோத சூதாட்ட விடுதி ஒன்று சுற்றிவளைக்கப்பட்டு 83 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். குற்றத்தடுப்பு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் இச்சுற்றிவளைப்பு நேற்று முன்தினமிரவு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது சூதாட்டத்தில் ஈடுபட்ட 80 பேர் மற்றும் அவ்விடுதியை நடத்திவரும் மூவர் உட்பட 83 பேர் கைது செய்யப்பட்டதோடு இங்கிருந்து 95 ஆயிரம் ரூபா பணமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மருதானை பொலிஸாரினால் மாளிகாகந்த நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (2)




❖ 324 - ஏட்றியனோப்பில் நகரில் இடம்பெற்ற சமரில் உரோமை பேரரசன் முதலாம் கொன்ஸ்டன்டீன் லிசீனியசை வென்றான்.

❖ 987 - ஹியூ காப்பெட் என்பவன் பிரான்சின் மன்னன் ஆனான். இவனது வம்சத்தினர் 1792 இல் பிரெஞ்சுப் புரட்சி இடம்பெறும் வரை பிரான்சை ஆண்டனர்.

❖ 1250 - பிரான்சின் ஒன்பதாம் லூயி எகிப்தில் ஏழாவது சிலுவைப் போரில் ஈடுபட்டிருந்தபோது பாய்பர்களால் பிடிபட்டான்.

❖ 1608 - கியூபெக் நகரம் உருவாக்கப்பட்டது.

❖ 1754 - ஏழாண்டுப் போர்: ஜோர்ஜ் வோஷிங்டனின் படைகள் நெசசிட்டி கோட்டையை பிரெஞ்சுப் படைகளிடம் இழந்தன.

❖ 1775-அமெரிக்கப் புரட்சிப் போர்: ஜோர்ஜ் வோஷிங்டன் மசாசுசெட்சில் இராணுவத்துக்குத் தலைமை வகித்தார்.

❖ 1778 - அமெரிக்கப் புரட்சிப் போர்: பென்சில்வேனியாவில் பிரித்தானிய இராணுவத்தினர் பெண்கள், குழந்தைகள் உட்பட 360 பேரைக் கொலை செய்தனர்.

❖ 1778-புரூசியா ஆஸ்திரியாவின் மேல் படையெடுத்தது.

❖ **1844-ஐஸ்லாந்தில் கடைசிச் சோடி பெரிய ஓக் பறவைகள் கொல்லப்பட்டன.**

❖ 1848 - அமெரிக்கக் கன்னித் தீவுகளில் பீட்டர் வொன் ஸ்கொல்ட்டன் என்பவரால் அடிமைகள் விடுவிக்கப்பட்டனர்.

❖ 1867 -தமிழ்நாடு விழுப்புரம் வளவனூர் பகுதியில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

❖ 1866 -புரூசியாவின் வெற்றியுடன் ஆஸ்திரிய-புரூசியப் போர் முடிவுக்கு வந்தது.

❖ 1872 -வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆரம்பிக்கப்ப ட்டது.

❖ 1890 -ஐடஹோ ஐக்கிய அமெரிக்காவின் 43ஆவது மாநிலமாக இணைந்தது.

❖ 1944 - இரண்டாம் உலகப் போர்: பெலரஸ்சின் தலைநகர் மின்ஸ்க் சோவியத் படையினரால் நாசி ஜேர்மனியிடம் இருந்து விடுவிக்கப்பட்டது.

❖ 1962-பிரான்சுக்கு எதிரான அல்ஜீரிய விடுதலைப் போர் நிறைவு பெற்றது.

❖ 1969 -சோவியத்தின் என் 1 என்ற ஏவுகணை ஏவுதளத்திலேயே வெடித்துச் சிதறியது.

❖ 1988-அமெரிக்க போர்க் கப்பல் பாரசிக வளைகுடா மீது பறந்த ஈரானிய பயணி கள் விமானம் ஒன்றை சுட்டு வீழ்த்தியதில் அதில் பயணம் செய்த 290 பேரும் உயிரிழந்தனர்.

❖ 2006-பூமியில் இருந்து 432,308 கி.மீ. தூரத்தில் 2004 ஓ 14 என்ற சிறு கோள் பறந்தது அவதானிக்கப்பட்டது.

### பிறப்புகள்

❖ 1883 - பிரான்ஸ் காஃப்கா, எழுத்தாளர் (இ. 1924)


❖ 1924 -எஸ். ஆர். நாதன், சிங்கப்பூர் ஜனாதிபதி

❖ 1942 - அடூர் கோபாலகிருஷ்ணன், கேரளத் திரைப்பட இயக்குநர்

❖ 1962 - டாம் க்ரூஸ், அமெரிக்க நடிகர்

❖ 1980 - ஹர்பஜன் சிங், இந்தியக் கிரிக்கெட் வீரர்

### பெரிய ஓக் பறவை



75 சதம மீற்றர் நீளமுள்ள, பறக்காத, பெரிய ஓக் (Great Auk) பெங்குயினஸ் இம்பென்னிஸ் அல்லது அல்கா இம்பென்னிஸ்), எல்லா ஓக்குகளிலும் பெரியதாகும். பெரிய ஓக்குகள் வெல்ஷ் மொழியில், அவற்றின் தலையிலுள்ள வெள்ளை நிறத்தை வைத்து, "வெண் தலை" எனப் பொருள்படும் பென்க்வின் என அழைக்கப்பட்டன. இதுவே "பென்குயின்" என்ற பெயருக்கு அடிப்படையாகும். தென்னரைக் கோளத்தில் பெரிய ஓக்கை ஒத்த பறவைகளைக் கண்ட பயணிகள் அவற்றையும் அதே பெயரிலேயே அழைத்தனர்.

பெரிய ஓக்குகள் ஒரு வருடத்தில் ஒரு முட்டையை மாத்திரமே இடுகின்றன. இவை நன்றாக நீந்தக் கூடியவை. தங்கள் சிறகுகளை உபயோகித்து நீருக்கடியில் நீந்த வல்லவை. பெரிய ஓக்குகள் ஒரு காலத்தில், கனடாவுக்கு அப்பாலுள்ள தீவுகளிலும், கிறீன்லாந்து, ஐஸ்லாந்து, நோர்வே, அயர்லாந்து மற்றும் பிரித்தானியா போன்ற இடங்களிலும் பெரும் எண்ணிக்கையில் காணப்பட்டன.

ஏனைய ஓக்குகளைப் போல, பெரிய ஓக்குகளால் பறக்க முடியாது. இதனால்தான் இப்பறவைகள் மனிதருக்கு இலக்காகக்கூடியனவாக இருந்தன. கி.பி. 8 ஆம் நூற்றாண்டிலிருந்து இப் பறவைகள், உணவுக்காகவும், மெத்தைகள் செய்வதற்காகவும் வேட்டையாடப்பட்டன. காலப்போக்கில் இப்பறவைகள் அழிந்து போகும் வரை வேட்டையாடப்பட்டன. இவ்வினத்தின் கடைசி இணைகள், 1844, ஜூலை 3இல் ஐஸ்லாந்துக்கு அப்பாலுள்ள ஒரு தீவில் வைத்துக் கொல்லப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசிடம் தமது தரப்பு இழப்புகள் பற்றிய தகவல்களும் துல்லியமானதாக இல்லை!



கடற்படை தரப்பில், ஈழப்போர்-4 இல், 210 பேர் கொல்லப்பட்டனர். மேலும், 56 கடற்படையினர் காணாமற் போயினர். காணாமற் போனவர்கள் உயிருடன் இல்லை என்று தீமானிக்கப் பட்டதால், கடற்படை தரப்பில், நான்காவது கட்ட ஈழப்போரில், 266 பேர் இழக்கப்பட்டனர். இதைவிட, இந்தப்போரில் 64 கடற்படையினர் படுகாயமடைந்தனர். இவர்களில் 54 பேரும் ஓய்வுபெற்றுச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது.

நான்காவது கட்ட ஈழப்போரில், விமானப்படை தரப்பில், 37 படையினர் கொல்லப்பட்டனர், 36 பேர் படுகாயமடைந்தனர். இந்தப்புள்ளி விபரத்தின் படி, ஈழப்போர்-4 இல் கொல்லப்பட்ட, காணாமற்போன முப்படையினரதும் எண்ணிக்கை 6ஆயிரத்து 150 ஆகும். அதேவேளை, முப்படைகளையும் சேர்த்து 18ஆயிரத்து 738 பேர் நான்காவது கட்ட ஈழப்போரில் படுகாமடைந்தனர். இந்த மூன்றாண்டு காலப்போரில் படைத்தரப்பில் மரணமானோர் தொகைக்கும், படுகாயமடைந்தோர் தொகைக்கும் இடையிலான விகிதாசாரம் கடுமையாக மாற்றமடைந்திருந்ததை அவதானிக்கலாம்.

சரியாக 1:3 என்ற விகிதத்தில் இது இருந்தது. முதலாம் கட்ட ஈழப்போரில், படுகாயமுற்ற படையினரை விட மரணமானோர் எண்ணிக்கை 6 மடங்கு அதிகமாக இருந்தது.

இரண்டாம் கட்ட ஈழப்போரில், கொல்லப்பட்ட படையினரை விட படுகாயமுற்ற படையினர் தொகை, கிட்டத்தட்ட பாதியாக இருந்தது.

மூன்றாம் கட்ட ஈழப்போரில், கொல்லப்பட்ட படையினரின் எண்ணிக்கையும், படுகாயமுற்ற படையினரின் எண்ணிக்கையும் கிட்டத்தட்ட சமமாகவே இருந்தன.

ஆனால், நான்காவது கட்ட ஈழப் போரில் கொல்லப்பட்ட படையினரை விட மூன்று மடங்கு அதிகாமான படையினர் படுகாயமடைந்தனர். இந்தப் புள்ளிவிபரங்களில் படுகாயம் என்று கூறப்பட்டது, பெரும்பாலும் செயற்பாட்டு நிலையை இழந்த- உடல் உறுப்புக்களை நிரந்தரமாக இழந்த படையினரைத்தான்.

கடந்தவாரம் நாரஹேன் பிட்டியாவில் உள்ள இராணுவ மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த, வாசல முதியான்சலாகே ஞானசிறி என்ற இராணுவச்சிப்பாய், மரணமானார். இவர் 1997 ஜுன் 19 ஆம் திகதி ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையின் போது ஓமந்தைப் பகுதியில் விடுதலைப்புலிகளின் தாக்குதலில் படுகாயமடைந்தவர். முதுகுத்தண்டில் ஏற்பட்ட காயத்தின் விளைவாக அவர், கிட்டத்தட்ட 16 ஆண்டுகளுக்குப் பின்னர் மரணமாகியுள்ளார். போரில் படுகாயமடைந்த படையினரில் கணிசமானோர் இவ்வாறு செயலற்ற நிலைக்குச் சென்றுள்ளனர். இங்கு படுகாயமடைந்ததாக கணக்கிடப்பட்டுள்ளவர்கள் பெரும்பாலும் மீளவும் போர் முனைக்குத் திரும்ப முடியாதவர்கள் தான். நான்காவதுகட்ட ஈழப் போரில், மரணமான படையினரை விட காயமுற்ற படையினரின் எண்ணிக்கை அதிகமாக இருந்ததற்குக் காரணம், விடுதலைப் புலிகளின் ஆட்லரிப்பலம் தான்.

நான்காவது கட்ட ஈழப்போரில் பயன்படுத்திய கனரக ஆயுதங்கள் படையினருக்கு கணிசமான ஆளணி இழப்பை ஏற்படுத்தியது. நான்கு கட்ட ஈழப்போர்களிலே, படைத்தரப்புக்கு மோசமான உயிர் இழப்புகளை ஏற்படுத்தியது. ஈழப்போர்-3 தான். ஆனால், கொல்லப்பட்ட, காயமுற்ற, காணமற்போன படையினரின் மொத்த தொகை என்று வரும்போது, ஈழப் போர்-3 இற்கும், ஈழப்போர்-4 இற்கும் பெரிய வித்தியாசம் இருக்கவில்லை. சமமாகவே உள்ளது. (ஈழப்போர்-3இல், 25ஆயிரத்து 732 படையினர் களத்திலிருந்து அப்புறப்படுத்தப்பட்டனர், ஈழப் போர்-4 இல் 24 ஆயிரத்து 888 பேர் களத்திலிருந்து அப்புறப்படுத் தப்பட்டனர்)

ஆனால், முன்றாவது கட்ட ஈழப் போர் 7 ஆண்டுகள் வரை நீடித்தது.

நான்காவது கட்ட ஈழப்போர் மூன்று ஆண்டுகள் கூட நீடிக்கவில்லை.

சரியாகச் சொல்வதானால், 2 ஆண்டுகளும் 10 மாதங்களும் தான் இந்தப் போர் நடந்தது.

போர் நடந்த காலப்பகுதியை வைத்து ஒப்பிட்டால், ஈழப்போர்-4 மோசமானது. அழிவுகள் நிறைந்தது என்பதை உறுதியாகக் கூறலாம்.

அதேவேளை, போர் முடிவுக்கு வந்தபின்னர், 2009 மே மாதம், 22 ஆம் திகதி பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராபக்ச அளித்த பேட்டி ஒன்றில், 2006 ஜூலையில் மாவிலாற்றில் போர் தொடங்கியதில் இருந்து முள்ளிவாய்க்காலில் முடிவுக்கு வந்தது வரையான காலப்பகுதியில், இராணுவம், விமானப் படை, கடற்படை, பொலிஸ், சிவில் பாதுகாப்புப் படை என மொத்தம் 6 ஆயிரத்து 261 படையினர் கொல்லப்பட்டதாகவும், 29ஆயிரத்து 551 படையினர் காயமடைந்ததாகவும் குறிப்பிட்டிருந்தார். இதன்படி, நான்காவது கட்ட ஈழப்போரில் 1:5 என்ற விகிதத்தில் படையினரின் மரணத்துக்கும், காயத்துக்கும் இடையிலான விகிதாசாரம் இருப்பது குறிப்பிடத்தக்கது. அதேவேளை, இராணுவத் தலைமையகம் அண்மையில் கொடுத்திருந்த புள்ளிவிபரங்களின்படி நான்கு கட்ட ஈழப்போர்களிலும், 829 அதிகாரிகளும், 18 ஆயிரத்து 835 படையினருமாக மொத்தம், 19 ஆயிரத்து 664 படையினர் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. மேலும்123 அதிகாரிகளும், 3ஆயரத்து 308 படையினருமாக, மொத்தம் 3 ஆயிரத்து 431 இராணுவத்தினர் இந்தக் காலப்பகுதியில் காணாமற் போயினர்.

ஆக, விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில், இலங்கை இராணுவம் மட்டும் 23 ஆயிரத்து 95 பேரை இழந்தது. மேலும் இந்தக் காலப்பகுதியில், ஆயிரத்து 96 அதிகாரிகளும், 32 ஆயிரத்து 627 படையினருமாக மொத்தம் 33 ஆயிரத்து 723 இராணுவத்தனர் படுகாயமடைந்தனர்.

கடற்படை தரப்பில் ஒட்டுமொத்தப் போரிலும், கொல்லப்பட்டவர்கள் 717 பேர், காணாமற்போனவர்கள் 446 பேர், ஆக மொத்தம், 1163 கடற்படையினரை விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில் அரசதரப்பு இழந்துள்ளது. மேலும் 441 கடற்படையினர் படுகாயமடைந்தனர். இவர்களில் 352 பேர் தொடர்ந்து சேவையாற்ற முடியாதளவுக்கு காயமுற்றதால், ஓய்வில் அனுப்பப்பட்டனர். இலங்கை விமானப்படை, விடுதலைப் புலிகளுக்கு எதிரான ஒட்டுமொத்தப் போரிலும், 435 பேரை இழந்த அதேவேளை, 334 விமானப்படையினர் படுகாயமடைந்தனர். இதன்படி, முப்படையினர் தரப்பிலுமாக, நான்கு கட்ட ஈழப்போர்களிலும், 24ஆயிரத்து 693 படையினர் கொல்லப்பட்டனர், காணாமற்போயினர். மேலும் முப்படைகளையும் சேர்ந்த 34 ஆயிரத்து 398 படையினர் படுகாயமடைந்தனர். இராணுவத் தலைமையகம் கொடுத்த இந்தப் புள்ளிவிபரங்கள் முற்றிலும் சரியானது என்று கூறமுடியாது. ஏனெனில், போர் முடிவுக்கு வந்த பின்னர், அரச தரப்பில் வெளியிடப்பட்ட மேலும் பல புள்ளி விபரங்களுடன் ஒப்பிடுகையில், இதில் வேறுபாடுகள் உள்ளதை அவதானிக்க முடிகிறது. அதேவேளை, போர் முடிவடைந்த பின்னர், பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச அளித்துள்ள பேட்டியில், 1981 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 மே 19 வரை, விடுதலைப் புலிகளுக்கு எதிரான முழுப்போரிலும் 23 ஆயிரத்து 790 படையினர் கொல்லப்பட்டதாக் குறிப்பிட்டிருந்தார்.

இந்தப் புள்ளி விபரத்துக்கும், இராணுவத் தலைமையகம் கொடுத்த புள்ளி விபரத்துக்கும் இடையில் உள்ள வேறுபாட்டின் மொத்த எண்ணிக்கை சுமார் 900 பேராகும். அதேவேளை, பாதுகாப்புச் செயலர், முப்படைகள், பொலிஸ், சிவில் பாதுகாப்புப் படை என்பவற்றைச் சேர்ந்தவர்களை உள்ளடக்கியிருந்தார். ஆனால், இராணுவத் தலைமையக புள்ளிவிபரம் தனியே முப்படைகளையும் தான் உள்ளடக்கியது.

போரில் இறந்த பொலிஸ், சிவில் பாதுகாப்புப் படையினரையும் இராணுவத் தலைமையக கணக்குடன் சேர்த்தால், கொல்லப்பட்ட படைத்தரப்பினரின் எண்ணிக்கை அதிகமாகும்: ஏனென்றால், போரில் பொலிஸ் தரப்பு கணிசமான இழப்புகளை சந்தித்துள்ளது. பொலீஸ் பிரிவு, பொலிஸ் விசேட அதிரடிப்படை மட்டும், 462 பேரை இழந்துள்ளதாகவும், 792 அதிரடிபடையினர் படுகாயமுற்றதாகவும் அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. இவை இராணுவத் தரப்பு புள்ளிவிபரங்களில் உள்ளடக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இதற்கிடையே, போர் முடிவுக்கு வந்த பின்னர், அப்போதைய இராணவத் தளபதி சரத் பொன்சேகா வெளியிட்ட ஒரு புள்ளிவிபரத்தின்படி இலங்கை இராணுவம் 2008 இல் 2 ஆயிரத்து 174 பேரையும், 2009 இல், 2 ஆயிரத்து 350 பேரையும் போரில் இழந்துள்ளதாக குறிப்பிட்டிருந்தார். மேலும் 113 பேர் காணாமற் போனதாகவும் அவர் கூறியிருந்தார்.

சரத் பொன்சேகாவின் இந்தப் புள்ளி விபரத்தின்படி 2009 இல் வெறும் நான்கரை மாதங்களில், 235 படையினர் கொல்லப்பட்டுள்ளர். இது போரின் இறுதிக்கட்டம் எந்தளவுக்குக் கடினமானதாகவும், இழப்புகள் நிறைந்தாவும் இருந்துள்ளது என்பதை உறுதிப்படுத்துகிறது. அதாவது, 2008 இல் மாதம் ஒன்றிற்கு 181 படையனர் வீதம் கொல்லப்பட்ட அதேவேளை, 2009 ஆம் ஆண்டில், மாதமொன்றிற்கு 522 படையினர் வீதம் கொல்லப்பட்டுள்ளனர். இதன்படி 2009 ஆம் ஆண்டில், போரின் கடைசி 138நாட்களில், நாளொன்றிற்கு சராசரியாக 17 இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர்.

போர் முடிந்து இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர், பாதுகாப்பு அமைச்சு ஹியுமனிற்றேறியன் ஒப்பரேசன்- பஃக்சுவல் அனலைஸிஸ் என்ற அறிக்கையை 2011 ஜூலையில் வெளியிட்டது. அதில், ஒட்டுமொத்தப் போரிலும், 19ஆயிரத்து 282 படையினர் கொல்லப்பட்டதாகவும், 2 ஆயிரத்து 609 படையினர் காணமாற்போனதாகவும், குறிப்பிடப்பட்டுள்ளது. இதன்படி ஒட்டுமொத்தப் போரிலும் கொல்லப்பட்ட படையினர், 21 ஆயிரத்து 891 பேர்தான். இது இலங்கைப் பாதுகாப்புச் செயலர் கூறிய கணக்கை விடவும், சுமார் 1900 குறைவாகும். அதேவேளை, இந்த அறிக்கையில், ஒட்டுமொத்தப் போரிலும், 82 ஆயிரத்து 104 படையினர் காயமுற்றதாகக் கூறப்பட்டுள்ளதும் கவனிக்கத்தக்கது. இந்த எண்ணிக்கை, காயங்கள் தொடர்பாக அரசு அல்லது படைத் தரப்பு வெளியிட்ட எந்தவொரு அறிக்கையைவிடவும் மிகப்பெரிய வேறுபாட்டைக் கொண்டுள்ளது.

மொத்தத்தில், மூன்று தசாப்த காலப்போரில் அரசபடைகள் மிகப் பெரியளவு இழப்புகளை சந்தித்தன. இதேவேளை விடுதலைப்புலிகளும், கடுமையான சேதங்களை எதிர்கொண்டனர். ஆனால், இறுதிப்போரில், விடுதலைப்புலிகள் முற்றாகத் தோற்கடிக்கப்பட்டதால், அவர்களுடனேயே அதுபற்றிய விபரங்கள் ஆழிந்து போனதால், விடுதலைப்புலிகள் தரப்பு இழப்பு என்ன என்ற துல்லிமான விபரங்கள் இல்லை. அரசதரப்பு, எல்லா வகையிலும் துல்லியமான போர் இழப்பு விபரத்தைக் கொடுக்கக் கூடிய நிலையில் இருந்தாலும், அதைச் சரியாக செய்யவில்லை என்பதை, அவ்வப் போது வெளியான மாறுபட்ட புள்ளி விபரங்கள் உறுதிப்படுத்துகின்றன. போர் முடிந்து நான்கு ஆண்டுகள் ஆகிவிட்ட போதும் இந்தப்போர் தொடர்பான சேதங்கள் குறித்து வெளிப்படையாகப் பேச அரசதரப்புத் தயாரக இல்லை என்பதையே, இந்த மாறுபட்ட புள்ளிவிபரங்கள் உணர்த்தி நிற்கின்றன.

-சுபத்ரா-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### 13ஆவது திருத்தத்தில் இருந்து

# காணி, பொலிஸ் அதிகாரங்கள் நீக்குவது குறித்து 12 ஆம் திகதி நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் 17(அ) அத்தியாயத்தின் ஏற்பாடுகளை முழுமையாக நீக்குமாறு கோரும் 21 ஆவது திருத்தம் என தலைப்பிடப்பட்ட தனிநபர் சட்டமூலம் அரசியலமைப்புக்கு உட்பட்டதா? இல்லையா? என்பது தொடர்பில் 12 ஆம் திகதி தீர்ப்பளிக்கப்படும் என்று உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை அறிவித்துள்ளது.

ஜாதிகஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள இந்த தனிநபர் சட்டமூலத்தை மாகாண சபைகளின் அனுமதியை பெற்றுக்கொள்வதற்கு அனுப்புவதா? இல்லையா? என்பது தொடர்பிலும் ஜனாதிபதிக்கும் சபாநாயகருக்கும் அறிவிப்பது குறித்தும் அன்றைய தினமே தீர்மானிக்கப்படும் என்றும் உயர்நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இந்த தனிநபர் சட்டமூலத்திற்கு எதிராக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை நேற்றுமுன்தினம் ஆராய்ந்த போதே உயர்நீதிமன்றம் மேற்கண்டவாறு அறிவித்தல்களை விடுத்துள்ளது.

பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ், நீதியரசர்களான சந்திரா ஏக்கநாயக்க மற்றும் சந்தியா ஹெட்டிகே ஆகிய நீதியரசர்கள் குழாமின் முன்னிலையிலே மனு ஆராயப்பட்டது.

இதன்போது ஜாதிக ஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினரான அத்துரலிய ரத்ன தேரரின் தனிநபர் சட்டமூலம், மாகாண சபைகளின் அனுமதியின்றி தவறான முறையில் நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அதனை தெளிவுபடுத்துமாறும் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் தனது மனுவில் குறிப்பிட்டிருந்தது.

அரசியலமைப்பின் மூன்று உறுப்புரைகளை நீக்குவதாக இந்த தனிநபர் சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவை மூன்றையும் நீக்குவது அரசியலமைப்பின் அத்தியாயம் 17 (அ) ஐ நீக்குவதற்கு சமமானதாகும் என்றும் மனுதாரர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்த சட்டமூலம் அரசியமைப்பின் உறுப்புரை 154 ஜி(2)இற்கு ஏற்புடையதல்ல என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த உறுப்புரைக்கு அமைய ஒரு சட்டமூலம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படின் அது நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் உள்ளடக்கப்படுவதற்கு முன்னர் சட்டமூலம் தொடர்பிலான அபிப்பிராயத்தை அறிவதற்காக ஜனாதிபதி அதனை சகல மாகாண சபைகளுக்கும் அனுப்பிவைக்க வேண்டும் எனவும் அரசியலமைப்பின் ஊடாக மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை சாதாரண சட்டத்தின் மூலம் மாற்றுவதற்கு நாடாளுமன்றம் முனையக் கூடாது என்றும் மனுதாரர் மேலும் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதேவேளை, ஒழுங்கு முறைப் பிரகாரம் இந்த சட்டமூலம் ஒழுங்கு பத்திரத்தில் உள்ளக்கப்படாமையினால் இதனை சட்டமூலமாக்க முடியாது என்றும் மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

இதனையடுத்தே, 21 ஆவது திருத்தம் என தலைப்பிடப்பட்ட தனிநபர் சட்டமூலமானது அரசியலமைப்புக்கு உட்பட்டதா? இல்லையா? என்பது தொடர்பில் எதிர்வரும் 12 ஆம் திகதி தீர்ப்பளிக்கப்படும் என்று உயர் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் அறிவித்துள்ளது. (2-5)

# நான் தவறு செய்திருந்தால் பதவி விலக்கட்டும்

(கொழும்பு)

நிதி அமைச்சின் செயலாளர் என்ற வகையில் தனது செயற்பாடுகள் தவறானவை எனின், தன்னைப் பதவியிலிருந்து விலக்குமாறு நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி பீ.பி. ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

ரிவி தெரணவின் 360 அரசியல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அரசாங்கத்தின் அமைச்சர்கள் எடுக்கும் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதே தனது பொறுப்பு என அவர் இதன்போது கூறினார்.

உலக பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து செல்லும் நிலையில், இலங்கை பொருளாதாரத்தை உயர்த்திச் செல்வது தொடர்பிலும் அவர் இங்கு விளக்கமளித்தார்.

இந்நிலையில் 400கோடி ரூபா வற்வரி மோசடி வழக்கு தொடர்பில் பீ.பி.ஜயசுந் தரவை இம் மாதம் 23 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவு பிறப் பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# 13ஆவது திருத்தத்தை பாதுகாக்க கொழும்பில் போராட்டம் இன்று

(கொழும்பு)

13ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை பாதுகாப்பதற்காக மக்கள் போராட்டம் ஒன்று இன்று புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்கு புறக்கோட்டை ரயில் நிலையம் முன்பாக ஆரம்பிக்கப்படவுள்ளதாக நவசமசமாஜக்கட்சியின் பொது செயலாளர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

அதிகாரத்தைப்பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவோம் என்ற அமைப்பு நேற்றுமுன்தினம் பிற்பகல் கொழும்பில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு பேசுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.


அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,


கிழக்கில் அசாத்சாலியை கௌரவிக்கும் முகமாக நடைபெற்ற கூட்டங்களில் அதிகாரத்தை பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவோம் அமைப்பிலுள்ள கட்சிகளும் பங்கெடுத்தன.

அந்த வகையில் நாம் தேசிய இனப் பிரச்சினை தொடர்பிலும் 13 ஆவது திருத்தம் பாதுகாக்கப்பட வேண்டுமென்பது குறித்தும் பேசினோம். இந்நிலையில் எமது கூட்டங்களை குழப்புவதற்கு செயற்பாடுகள் இடம் பெற்றன. இவ்வாறான விடயங்களுக்கு மத்தியில் கல்முனையில் இடம் பெற்ற கூட்டத்தில் ஆயிரத்து 500 பேருக்கு மேல் கலந்து கொண்ட னர்.

13 ஆவது திருத்தத்தை பாதுகாப்பதற்கான மக்கள் போராட்டம் இன்று புதன்கிழமை புறக்கோட்டை புகையிரத நிலையம் முன்பாக மாலை 3 மணிக்கு ஆரம்பிக்கப் படவுள்ளது.

மக்களிடம் கையெழுத்து பெறும் இப்போராட்டத்தில் 13 ஐ பாதுகாக்க வேண்டுமென எண்ணம் கொண்ட அனைத்து தரப்பினரும் பங்கெடுக்குமாறு அழைப்பு விடுக்கின்றேன். இன ஐக்கியத்தை பாதுகாக்கும் போராட்டத்தில் அனைவரும் பங்கு பற்றாவிடில் இலங்கையில் மிஞ்சப் போவது ஒன்றுமில்லை என தெரிவித்துள்ளார். (2-5)






காந்திய சிந்தனையாளர் மு.மாரியப்பன் அஞ்சலி நிகழ்வும் காந்திய சிந்தனை கற்கை நெறி சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் அகில இலங்கை காந்திசேவா சங்க சிரேஷ்ட தலைவர் உரையாற்றுவதையும் அருகில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட மூதறிஞர் ஆ.சபாரத்தினம் மாணவி ஒருவருக்கு சான்றிதழ் வழங்குவதையும் படங்களில் காணலாம்...

# பொலிஸ் அதிகாரங்கள் குறித்து பொலிஸ்மா அதிபர் விளக்கம்

மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்கினால் ஏற்படும் பின்விளைவுகள் குறித்து பொலிஸ்மா அதிபர் நளின் இலங்ககோன் பாதுகாப்புச் சபையில் நடைபெற்ற விசேட கருத்தரங்கில் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற இந்த விசேட கருத்தரங்கில் அமைச்சர்கள் டியூ.குணசேகர, வாசுதேவ நாணயக்கார ஆகியோரும் கலந்து கொண்டுள்ளனர்.

மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதால் ஏற்படும் ஆபத்தான நிலைமை குறித்து பொலிஸ்மா அதிபர் தனது உரையின் போது தெளிவுபடுத்தியுள்ளார்.

அதேவேளை பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படுவது குறித்து கருத்து வெளியிட்டுள்ள சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் பொலிஸ் அதிகாரம் என்பது வாகன விபத்து தவறுகளுக்காக சாரதி அனுமதிப்பத்திரங்களை பெற்றுக்கொண்டு அபராதம் விதிக்கப் படும் அதிகாரம் அல்ல என வும் அதற்கும் மேற்பட்ட அதிகாரங்களைக் கொண்டது எனவும் கூறியுள்ளார்.

முதலமைச்சர் ஒருவர் தவறு செய்தால் அவரது பொலிஸார் அவரை விசாரணை நடத்துவர். (2)

# பிரிட்டன் விசா நடைமுறைக்கு இலங்கை ஆட்சேபம் தெரிவிப்பு

(கொழும்பு)

பிரிட்டனுக்கு உல்லாசப் பயண விசாவில் செல்ல மூவாயிரம் ஸ்ரேலிங் பவுண்களை பிணைமுறியாகச் செலுத்த வேண்டுமென்ற அந்நாட்டு அரசாங்கத்தின் தீர்மானத்தை இலங்கை ஆட்சேபித்துள்ளது.

இந் நடைமுறை காரணமாக மேற்படிப்பு உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக பிரிட்டன் செல்வோர் பாரிய அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கவேண்டி ஏற்பட்டிருப்பதாக சுட்டிக்காட்டிய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக்க அமுனுகம இவ்விவகாரம் தொடர்பிலான இலங்கை அரசாங்கத்தின் ஆட்சேபனையை பிரிட்டனுக்கு தெரியப்படுத்தியிருப்பதாக கூறியுள்ளார்.

மேலும் கொழும்பிலுள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகரிடம் இந் நடைமுறையை உடனடியாக இரத்து செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கோரியிருப்பதாகவும் அமைச்சின் செயல்ாளர் குறிப்பிட்டுள்ளார்.

பிரிட்டிஷ் அரசாங்கம் இலங்கை உள்ளிட்ட ஆறு நாடுகளுக்கு பிணைமுறி செலுத்த வேண்டிய நடைமுறையை அறிமுகப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-5)

# உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் புத்தூர் எவரெஸ்ட் விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 34 அணிகள் மோதுகின்றன.


"எ", "பி" என இரு பிரிவுகளாக நடைபெறும் இப்போட்டியில் ஒரு பிரிவில் 17 அணிகள் வீதம் பங்குபற்று கின்றன.

இப்போட்டியில் இன்று புதன் கிழமை மாலை சென்நீக்கலஸ் அணியும் பூமகள் (கொற்றா) அணியும் மோதுகின்றன. (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராளுமன்ற தெரிவுக்குழுவில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கலந்துகொள்ளாமை வேதனைக்குரிய விடயமாகும்

## அமைச்சர் வாசுதேவ தெரிவிப்பு



(கொழும்பு)

**அரசியலமைப்புத் திருத்தங்கள் குறித்து ஆராய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கலந்துகொள்ளாமை கவலையளிக்கும் விடயமாகும். எவ்வாறெனினும் தமிழ்க் கூட்டமைப்பை இதில் இணைத்துக் கொள்ளும் பொருட்டு அவர்களுடன் தொடர்ந்து பேச்சுவார்த்தைகளை நடத்த இடதுசாரிக் கட்சிகள் எதிர்பார்க்கின்றன என தேசிய மொழிகள் மற்றும் ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

தெரிவுக்குள் வராவிடினும் வெளியில் இருந்தாவது தமது யோசனைகளை இந்தக் கட்சிகள் வழங்கவேண்டும் என்று கோருவோம். இந்தவிடயத்தில் எதிர்க்கட்சிகள் பொறுப்பைத் தட்டிக்கழித்து செயற்படுவதாகவே தெரிகின்றது என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

மேலும் அமைச்சர்களான திஸ்ஸ விதாரண மற்றும் ரவூப் ஹக்கீம் ஆகியோர் தெரிவுக்குழுவில் இணைத்துக் கொள்ளப்படாமை கவலைக்குரிய விடயமாகும். ரவூப் ஹக்கீம் கட்டாயம் தெரிவுக்குழுவில் இருந்திருக்க வேண்டியவர் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண அரசியலமைப்பு திருத்தம் குறித்த பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் உள்ளடக்கப்படாமை குறித்து நான் கவலையடைகின்றேன். அவர் கடந்த பல வருடங்களாக தேசிய பிரச்சினை தீர்வு விடயத்தில் கஷ்டப்பட்டு செயற்பட்டவர். அதனால்தான் அவரின் சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் அறிக்கையை தற்போதைய பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் பிரதான கருவியாக எடுப்பதற்கு நாங்கள் தீர்மானித்துள்ளோம்.

எனவே அவர்களை ஆளும் கட்சியின் ஊடாக தெரிவுக்குழுவுக்குள் சேர்ப்பதில் சிக்கல் உள்ளது. தற்போதைய நிலைமையில் ஐக் கிய தேசியக் கட்சியும் தெரிவுக்குழுவில் இடம் பெறாத நிலைமை உள்ளது.

அந்தவகையில் முஸ்லிம் காங்கிரஸ் தெரிவுக்குழுவில் இடம்பெறும் சந்தர்ப்பத்தை இழக்கின்றது. இது கவலைக்குரிய விடயமாகும். எவ்வாறாவது ஹக்கீமை இதில் இணைத்துக்கொள்ளவேண்டும் என்பதில் நாங்கள் உறுதியுடன் இருக்கின்றோம்.

இது இவ்வாறிருக்க தற்போது தமிழ்த் தேசியக்கூட்டமைப்பும் ஐக்கிய தேசியக் கட்சியும் மக்கள் விடுதலை முன்னணியும் குறித்த பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் இடம் பெறமாட்டோம் என்று அறிவித்துள்ளன. உண்மையிலேயே இது கவலைக்குரிய விடயமாகும். இந்தக் கட்சிகள் தங்கள் பொறுப்பைத் தட்டிக்கழிப்பதாகவே நாங்கள் உணர்கின்றோம். பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு வர ஏன் விரும்பவில்லை எனத் தெரியவில்லை. பாராளுமன்றத் தெரிவுக்குழு என்பது பாராளுமன்றத்தின் ஒரு அங்கமாகும்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பினால் பாராளுமன்றத்துக்கு வந்து விடயங்களை முன்வைக்கமுடியுமானால் பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு மட்டும் ஏன் வரமுடியாது.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் கூறுகின்ற அனைத்தையும் ஆளும் கட்சி கேட்பதில்லையே அதற்காக அவர்கள் வராமல் இருப்பதில்லையே அப்படியாயின் பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு வந்து தங்கள் யோசனையை முன்வைக்கலாம்தானே?

அது எவ்வாறான யோசனையாக இருந்தாலும் பரவாயில்லை. அவற்றை வெளிப்படுத்தமுடியும்? எதிர்க்கட்சிகள் இவ்வாறு இந்த பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் இடம் பெறாமல் இருப்பது கவலைக்குரிய விடயமாகும். இது பாரிய தவறு என்பதுடன் தமக்கு வாக்களித்த வாக்காளர்களை ஏமாற்றும் விடயம் என்பதையும் குறிப்பிடுகின்றோம்.

இதேவேளை கூட்டமைப்பினரை பாராளுமன்றத் தெரிவுக்குழுவில் உள்ளீர்ப்பது குறித்து அவர்களுடன் அண்மைக்காலமாக இடதுசாரிக்கட்சிகள் பேச்சு நடத்தி வந்தன. மேலும் தொடர்ந்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்புடன் இடதுசாரி கட்சிகள் பேச்சுக்களை நடத்த திட்டமிட்டுள்ளன.

எதிர்க்கட்சிகள் வராதுவிடின் இருக்கின்ற பிரதிநிதிகளைக் கொண்டு பாராளுமன்றத் தெரிவுக்குழுவை முன்னெடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும் என்றார். (2)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை



## ஆவாரை

Botanical Name- Cassia auricu lata
Family- Leguminosae
Engl- tanner's cassia
Sinh- Ranawara

பூக்கும் இருவித்திலைத் தாவரம். புதர்ப் பெருஞ் செடியாகும். அடியிலும் முடியிலும் குறுகிய 8-12 சிற்றிலைகளைக் கொண்ட பசிய கூட்டிலை. இலையடிக் காம்பின் இரு புறத்திலும் அகன்ற காதுவடிவான பசிய இலைய்யடிச் செதில்கள் காணப்படும். கிளை நுனியில் ஆனால் இலைக்கோணத்தில் நுனி வளராப் பூந்துணர் கொத்தாகத் தோன்றும். மலர்கள் மஞ்சள் நிறமானவை. அகவிதழ்கள் விரிந்து காணப்படும். இரு சூலக ஓரறைச் சூலகம். பல சூல்கள் உலர்கனி காம்புடையது. 10-15 செ.மீ.நீளமானது.

விதைகள் மூலமும் வேர்க்கன்றுகள் மூலமும் இனவிருத்தி செய்யலாம். யாழ்ப்பாணத்தில் கைவிடப்பட்ட தரிசுநிலங்களில் இதன் பரம்பல் அதிகமாகக் காணப்படும்.

இதன் இலை, பூ, பட்டை, விதை, பிசின் ஆகிய அனைத்தும் மருத்துவ குணங்கள் மிகுந்தவை. இதன் இலைகளுக்கு குளிர்ச்சியுண்டாக்கும் தன்மையிருப்பதால் புராதன மக்கள் வெயிலில் வெகுதூரம் நடப்பவர்கள் இவ்விலைகளை தலையின் மீது பரப்பி அதன் மீது தலைப்பாகையிட்டு நடக்க வெப்பம் தாக்காது.


மற்றும் முற்காலத்தில் நெல்வயல்கள் செய்யும்போது ஆவாரம்செடிகளைக் கொண்டு நிலத்தை பண்படுத்தி பின்பு நெல் விதைப்பார்கள். இவ்வாறு இயற்கை மூலிகை பசளை பாவனையால் பயிர்ச்செய்கை மேற் கொள்ளப்பட்டதால் அங்கு உரங்கள் பயன்படுத்த வேண்டிய அவசியம் இருக்கவில்லை. சேதன பசளைகள் மூலமே பயிர்ச் செய்கையும் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் பூக்களை சமைத்துச் சாப்பிடுவதால் உடல் வெப்பம் தணிந்து நீரிழிவையும் கட்டுப்படுத்தும். ஆவாரச் செடியின் இலையை நீர் சேர்த்து அரைத்து சிரங்குகள் மீது போட்டு ஊறவைத்து பின்பு கழுவினால் அவை விரைவில் குணமாகும்.

ஆவாரம்பூக்களை நிழலில் உலர்த்தி பொடி செய்து கடலை மாவில் கலந்து தண்ணீரில் குழைத்து உடல் முழுவதும் தேய்த்து குளித்து வந்தால் உடல் வழவழப்புடன் பளபளப்பாகவும் ஆகும்.

ஆவாரம் பூ, பச்சைப்பயறு இரண்டையும் சேர்த்து அரைத்து நமைச்சல் (சொறி) உள்ள இடத்தில் தேய்த்து குளித்து வந்தால் சொறி நீங்கும்.

ஆவாரம் இலை, பூ, காய், பட்டை, வேர் இவை ஒரே நிறையாக எடுத்து சிறுக வெட்டி அரிந்து 4 மடங்கு நீர் விட்டு 1/4 பங்காக சுண்டக்காய்ச்சி 60 மில்லி காலை, மாலை அருந்த நீரிழிவு குணமாகும். அல்லது ஆவாரம் இலை, பூ, காய், பட்டை, வேர் இவைகளை ஒரே



நிறையாக எடுத்து சுத்தம் செய்து உலர்த்தி அரவல் நொருவலாக இடித்து தேயிலைப் பொடிபோல் செய்து 8 கிராம் ஆவாரம் தேயிலைப் பொடிகள் 120 மில்லி கொதிநீரில் போட்டு கலக்கி 15 நிமிடங்கள் ஊறவிட்டு தேநீர் போல் அருந்தி வரவும் நீரிழிவு நோய் குணமாகும். பக்க விளைவுகளும் ஏற்பட



மாட்டாது.

✦ ஆவாரம் பூ, றோஜாமொட்டு, ஆனை நெருஞ்சில் மூன்றையும் சம அளவாக எடுத்து நிழலில் உலர்த்தி பொடித்து அரித்து வைத்துக் கொள்ளவும். 2 கிராம் அளவு காலை, மாலை வெந்நீரில் எடுக்க நீரிழிவு கட்டுப்படும்.

✦ ஆவாரம் பூக்களை சுத்தம் செய்து கழுவி துவரம் பருப்புடன் சேர்த்து சமைத்து சாப்பிட்டால் மலச்சிக்கல் குணமாகும்.

✦ ஆவாரம் வேர், பட்டை, கொழுந்து ஆகியவற்றை சமஅளவு எடுத்து பொடி செய்து பசுநெய் மற்றும் பனை வெல்லத்துடன் சேர்த்து சாப்பிட்டு வந்தால் மாறாத தோல் நோய்கள் படிப்படியாக குறையும்.

✦ ஆவாரம் பட்டை, வேர்க்கொம்பு இரண்டையும் சம அளவு எடுத்து தண்ணீரில் (200 மில்லி) போட்டுக் காய்ச்சி ஆறவைத்து தினமும் இரு வேளையும் குடித்து வந்தால் கை, கால் வீக்கம் குணமாகும்.

✦ ஆவாரம் பிசினை காயவைத்து பொடி செய்து தினமும் 2 கிராம் அளவு சாப்பிட்டு வந்தால் உடற்சூடு குறைந்து நீரிழிவு கட்டுப்படும்.

✦ ஆவாரம் பிசின், கருவேலம் பிசின் இரண்டையும் நெய் சேர்த்து வறுத்து பொடி செய்து தினமும் 2 கிராம் அளவுக்கு சாப்பிட்டு வந்தால் தாது விருத்தி உண்டாகி உடற் பலவீனம் நீங்கும்.

✦ ஆவாரம் இலை, பொன்னாவரசு இலை இரண்டையும் சேர்த்து அரைத்து வீக்கங்களில் பற்றுப் போட்டால் வீக்கம் விரைவில் குறையும்.

✦ ஆவாரம் விதைகளை எரித்து கரியாக்கி பொடிசெய்து கரிசாலைச் சாற்றில் கலந்து தலையில் தடவி வந்தால் இளநரை மறையும்.

திருமதி விவியன் சத்தியசீலன்(M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்,
கைதடி.

✦ ஆவாரம் பூ, நாவல்விதை, சிறு குறிஞ்சா மூன்றையும் சம அளவு எடுத்து பொடிசெய்து தினமும் சாப்பிட்டு வந்தால் சர்க்கரை நோய் (நீரிழிவு), சிறுநீர் அடிக்கடி கழிதல் குணமாகும்.

✦ ஆவாரை பட்டை, கொன்றை பட்டை, நாவல்விதை, கடன்ராதிபட்டை, மருதம் பட்டை இவற்றை ஒரே அளவில் கூட்டி அத



ற்கு 8 பங்கு நீர்விட்டு 1/8 ஆக காய்ச்சி 60 மில்லி காலை, மதியம், மாலை அருந்தினாலும் நீரிழிவு குணமாகும்.

எனவே, நீரிழிவுநோயுள்ளவர்கள் ஆவாரை மூலிகையை ஏதோ ஒரு விதத்தில் பயன்படுத்தி வர நீரிழிவை கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும்.

✦ ஆவாரம்பட்டையை குடித்துவிட்டு வாய் கொப்பளித்து வந்தால் வாய்த் துர்நாற்றம், வாய்ப்புண் நீங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயகத்தின் பெயரால் ஆட்சிக்கு வந்தவர்கள் தமிழ் மக்களின் வாழ்வுரிமையை பறிக்கின்றனர்

## மாவை எம்.பி. குற்றச்சாட்டு

(கிளிநொச்சி)

எண்ணற்ற தியாகங்கள், எத்தனையோ உயிர்ப்பலிகள் இந்த மண்ணிற்காக மேற்கொள்ளப்பட்ட போதும் ஜனநாயகத்தின் பெயரால் ஆட்சிக்கு வந்தோராலும் இராணுவத்தாலும் தமிழ் மக்கள் பாரம்பரியமாக உரிமை கொண்டாடிய காணிகள் கையகப்படுத்தப்பட்டு வருகின்றன என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரு மான மாவை சேனாதிராஜா குற்றம் சாட்டியுள்ளார்.

சமகால அரசியல் பற்றிய கருத்தமர்வு ஒன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகமான அறிவகத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தலைமையில் அண்மையில் இடம் பெற்றது. இந்த கருத்தமர்வில் கலந்து கொண்டு தனது கருத்துரையை வழங்கிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எண்ணற்ற தியாகங்கள், எத்தனையோ உயிர்ப்பலிகள் இந்த மண்ணிற்காக மேற்கொள்ளப்படிருக்கின்றன. எந்த நிலத்தில் வாழ வேண்டுமென்று இத்தனை தியாகங்கள் மேற்கொள்ளப்பட்டனவோ அந்த மண் எங்கள் மக்களிடத்தில் இல்லை.

ஜனநாயகத்தின் பெயரால் ஆட்சிக்கு வந்தோரால் எம் மக்களின் வாழ்வுரிமை பறிக்கப்பட்டுவிட்டது. எமது மக்கள் பாரம்பரியமாக உரிமை கொண்டாடிய காணிகள் இப்பொழுது அரசாலும் இராணுவத்தாலும் அவை சார்ந்தோராலும் கையகப்படுத்தப்பட்டு வருகின்றன.

தகுதியற்ற முறையில் அரச நியமனங்கள் வழங்கப்பட்டு அக்குடும்பங்கள் தமிழ் தேசியத்திலிருந்து திட்டமிடப்பட்டு அந்நியப்படுத்தப்பட்டு வருகின்றன.

புனர்வாழ்வென்ற பெயரில் தடுத்து வைக்கப்படிருந்த முக்கிய போராளிகள் வரப் போகும் தேர்தலை முன்னிட்டு விடுதலை செய்யப்படுகிறார்கள்.

இப்படி பல எதிர்பார்ப்புகளை அனைத்துத் தரப்பினருக்கும் விதைத்திருக்கும் மாகாணசபைத் தேர்தல் இத்தனை காலமும் எம் மக்கள் மேற்கொண்ட தியாகங்களுக்கு முடிவாகுமா என்றால் நிச்சயமாக இல்லை. மாகாண சபையினை வெற்றி கொண்ட பின் எந்த நிலத்தில் நாம் வாழப் போகிறோம்? தேர்தலுக் கான போராட்டத்தை விட எங்கள் நில மீட்பும் வாழ்வுரிமைக்கான போராட்டமுமே மிக முக்கியமானது. இது பற்றி நாம் அனைவரும் சிந்திக்க வேண்டிய தருணம் இது.

தமிழ் மக்களது ஏக பிரதிநிதிகள் என்ற வகையில் மாகாணசபை எமது மக்களுக்கான தீர்வு என நாம் ஒருபோதும் கூறவில்லை.

13ஆம் திருத்தம் பற்றி எந்த ஒரு இடத்திலும் நாம் பிரஸ்தாபிக்கவில்லை. சொல்லப்போனால் இலங்கை அரசாங்கம் தான் 13 ஆம் திருத்தம் பற்றியும் அதற்கு மேலாகவும் போய் தமிழ் மக்களுக்கான தீர்வினை வழங்க அரசு தயாராக இருப்பதாக தமிழரையும் சர்வதேசத்தையும் ஏமாற்றி வந்திருக்கிறது.



இம் மாகாண சபை எதனையும் தமிழருக்கு வழங்காத போதிலும் எமது மக்கள் எமக்கு வழங்கும் ஆணையினை சர்வதேசத்துக்கு உணர்த்த வேண்டியதேவை எமக்குள்ளது.

தோற்கடிக்கப்பட்ட சமூகம் என்ற பேரினவாதிகளின் கூற்றினை ஜனநாயக முறையில் நாம் வென்று காட்டுவதற்காகக் கிடைத்த இத் தருணத்தை உரிய முறையில் கட்டமைத்து அறிவுபூர்வமாகவும் உணர்வு பூர்வமாகவும் இத்தேர்தலைச் சந்திக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இக்கருத்தமர்வில் இலங்கை தமிழரசுக் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர் சீ.வீ.கே.சிவஞானம், கரைச்சிப் பிரதேச சபை உபதவிசாளர் வ.நகுலேஸ்வரன், பிரதேசசபை உறுப்பினர்கள், கட்சி அங்கத்தவர்கள், அமைப்பாளர்கள், செயற்குழு உறுப்பினர்கள், செயற்பாட்டாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு தமது கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். (ம-6)




## தொண்டர்களும் பதிவு செய்யலாம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திற்குட்பட்ட தொண்டர் ஆசிரியர்கள், சுகாதார தொண்டர்கள், முன்பள்ளி ஆசிரியர்கள் ஆகியவர்களில் இதுவரை நிரந்தர நியமனம் கிடைக்கப் பெறாதவர்கள் இன்று புதன்கிழமை பதிவு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்டவர்கள் முல்லைத்தீவு அலம்பில் வீதி உப்புமா வெளியில் அமைந்துள்ள ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அலுவலகத்திற்கு சென்று பதிவுகளை மேற்கொள்ளுமாறும் மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் 0772852886 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறும் அந்தோனிப்பிள்ளை ஜெயராஜ் (கிருபன்) அறிவித்துள்ளார். (அ-9-267)

## தப்பிச் சென்ற கொள்ளையர்கள் பொலிஸாரால் மடக்கிப்பிடிப்பு

(பூநகரி)

மல்லாவி பிரதேசத்தில் வீட்டில் தனிமையிலிருந்த பெண்ணை அதட்டி நகைகளைக் கொள்ளையடித்த சந்தேக நபர்கள் பூநகரி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது, கடந்த 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை காரில் வந்த கொள்ளையர்கள், மல்லாவிப் பகுதியில் வீடொன்றில் தனிமையில் இருந்த பெண்ணை அதட்டி அங்கிருந்து ஒரு இலட்சத்து 50 ஆயிரம் பெறுமதியான தங்க நகைகளை அபகரித்துச் சென்றுள்ளனர்.

பொலிஸாருக்கு மேற்படி காரின் இலக்கம் வழங்கப்பட்டதையடுத்து, நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் சங்குப்பிட்டி தடை முகாம் ஊடாக யாழ்ப்பாணம் செல்ல முற்பட்ட போது கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய கார் பிடிபட்டது. காரைப் பரிசோதனை செய்த பொலிஸார், நகைகளையும், சந்தேக நபர்களையும் கைது செய்தனர்.

அத்தோடு, கைது செய்யப்பட்ட இரு நபர்களையும் பூநகரி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் அவர்களை மல்லாவி பொலிஸ் நிலையத்தினரிடம் ஒப்படைத்து காரையும், நகைகளையும் பாரப்படுத்தியுள்ளதாக பூநகரி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-84)

# குமுழமுனை கிராமத்திற்கு அரச பேருந்து சேவை இல்லை

## பயணிகள் விசனம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட கரை துறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட குமுழமுனைக் கிராமத்தில் நீண்டகாலமாக அரச பேருந்து சேவை இல்லை என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குமுழமுனைக் கிராமம் கிழக்கு, மேற்கு, மத்தி என மூன்று உப கிராமங்களைக் கொண்டுள்ளது.

இக்கிராம மக்கள் கடந்த 2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்றப்பட்டுள்ள நிலையில், தற்போது சுமார் அயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன.

1983 ஆம் ஆண்டுக்கு முன்னர் இப்பிரதேசத்தில் அரச பேருந்து, சேவையில் ஈடுபட்டு வந்தது. அதன் பின்னர் நீண்டகாலமாக பேருந்து சேவை இல்லாது இருந்த நிலையில், 2012 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி அன்று அரச பேருந்து சேவை அமுலுக்கு வந்தது. இருந்தும் இச்சேவை வருமானம் போதாமையுள்ளதாகக் காரணம் காட்டி ஒருவாரத்திலேயே மீண்டும் இடைநிறுத்துப்பட்டு இதுவரை சேவை இடம் பெறவில்லை என மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இந்நிலையில், தற்போது ஓரிரு தனியார் பேருந்துகள் மட்டும் சேவையில் ஈடுபடுவதால் அவற்றின் சேவை மக்களுக்கு போதுமானதாக இல்லை.

இவ்வாறு பேருந்து சேவை இன்மையால் மாணவர்கள், உத்தியோகத்தர்கள், பொதுமக்கள், விவசாயிகள் என பலதரப்பட்டோர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எனவே, இப்பகுதிக்கென தனியாக அரசபேருந்து சேவை முல்லைத்தீவு சாலையிலிருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும் என மக்கள் வலியுறுத்தியுள்ளனர்.

அத்துடன் சேவையில் ஈடுபடத் தொடங்கும் அரச பேருந்து முல்லைத்தீவு சாலையிலிருந்து, குமுழமுனைக்கு காலை 6.30, நண்பகல் 12.30, மாலை 4.30 ஆகிய நேரங்களில் பணியைத் தொடரவேண்டும் எனவும் மக்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (ம-9-267)

## பாதசாரிக்கடவைகள் இன்மையால் பயணிப் போர் அசௌகரியம்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள கள்ளப்பாடு அ.த.க.பாடசாலையின் முன்னால் பாதசாரிக்கடவை இல்லாமையினால் மாணவர்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கள்ளப்பாடு அ.த.க.பாடசாலை முல்லைத்தீவுதிருகோணமலை செல்லும் B-297 வீதியில் அமைந்துள்ளது. இவ் வீதியினால் தினமும் அதிகமான வாகனங்கள் போக்குவரத்தில் ஈடுபடுகின்றன. இப்பாடசாலை 2010 ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வருவதுடன் இங்கு தரம் ஒன்று தொடக்கம் 9 ஆம் தரம் வரையான மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர்.


மேற்படி வீதி காப்பெற் இடப்பட்டுள்ளதுடன், இவ்வீதியிலுள்ள முல்லை.றோ.க.த.க.பாடசாலை, உப்புகுளம் தமிழ் வித்தியாலயம், சிலாவத்தை தமிழ் வித்தியாலயம், செம்மலை மகாவித்தியாலயம், அலம்பில் றோ.க.வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கு முன்பாக மஞ்சள் கோடுகள் இடப்பட்டுள்ளன.

இந்நிலையில் கள்ளப்பாடு அ.த.க.பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு பாதசாரிக் கடவையை அமைத்துக் கொடுக்க சம்பந்தப்பட்டவர்கள் முன்வரவேண்டும். (ம-9-267)

## மஹோற்சவம்

பூநகரி முழங்காவில் ஸ்ரீ செல்வ யோக சித்தி விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத் திருவிழா நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் நடைபெறவுள்ளன.

மஹோற்சவத்தின் எட்டாம் நாளான 11 ஆம் திகதி வியாழக்கிழமை வேட்டைத்திருவிழாவும் மறுநாள் வெள்ளிக்கிழமை சப்பறமும் இடம்பெறவுள்ளது. தொடர்ந்து தேர்த் திருவிழா சனிக்கிழமையும் தீர்த்தம் மறுநாள் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறும். அத்தோடு திருவிழா நாட்களில் தினமும் மாலை சமய சொற்பொழிவுகளும் இடம்பெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (ம-9)





பாடசாலை மட்டத்திலான "அனர்த்த முகாமைத்துவம்" தொடர்பான விழிப்பூட்டல் கருத்தரங்கு அண்மையில் மு/விசுவமடு மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அனர்த்த முகாமைத்துவம் தொடர்பாக அறிமுக உரையை பிரதி அதிபர் ம.றோமியல் நிகழ்த்துவதையும் அருகில் வளவாளர்கள் அமர்ந்திருப்பதையும் கலந்து கொண்ட மாணவர்களின் ஒரு தொகுதியினரையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திர தேவி சிலை மீண்டும் புதுப்பொலிவுடன்



அமெரிக்காவை தாக்கிய சாண்டி புயலை அடுத்து, நியூயோர்க் நகரில் உள்ள வரலாற்று சிறப்பு வாய்ந்த சுதந்திரதேவி சிலையை பார்வையிட சுற்றுலா பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டது.

இதற்கு முன்னர் வரை ஆண்டுதோறும் சுமார் 35 இலட்சம் பார்வையாளர்கள் சுதந்திரதேவி சிலையையும், அதன் அருகாமையில் உள்ள பூங்காவையும் கண்டுகளித்து வந்தனர். இந்த சிலையின் தலைப்பகுதியில் உள்ள கிரீடத்தில் நின்று நியூயோர்க் நகர துறைமுகத்தின் எழில்மிகு காட்சியை பார்த்து ரசிக்க முடியும்.

கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 22ஆம்திகதி தொடங்கி 31ஆம் திகதி வரை அமெரிக் காவை உலுக்கி எடுத்த சாண்டி புயலின் கோரத்தாண்டவத்தால் சுதந்திரதேவி சிலையை ஒட்டியுள்ள பகுதிகள் வெள்ளக் காடாக மாறின.

அந்த சிலை அருகே இருந்த நடைபாதைகள், மின் சாதனங்கள், நீரிறைக்கும் இயந்திரங்கள் போன்றவை பழுதடைந்ததால் கடந்த 8 மாதங்களாக அவற்றை சீர்படுத்தும் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வந்தன.

இந்நிலையில், நாளை அமெரிக்காவின் சுதந்திர தினம் கொண்டாடப் படுகிறது.

சுதந்திர தேவி சிலையின் சீரமைப்பு பணிகளும் நிறைவடைந்துவிட்டமையால் புதுப்பொலிவுடன் காட்சியளிக்கும் சுதந்திர தேவி சிலையை நாளையிலிருந்து பொது மக்கள் பார்வையிடலாம் என நியூயோர்க் அரசு நிர்வாகம் அறிவித்துள்ளது. இதனையடுத்து, ஏராளமான அமெரிக்கர்கள் "ஒன் லைன்" மூலம் கட்டணத்தை செலுத்தி டிக்கெட்டுகளை முன்பதிவு செய்து வருகின்றனர். (செ-2)

# பெற்றோருக்கு பாதுகாப்பு; சீனாவில் புதிய சட்டம்

சீனாவில் பெற்றோரை தவிக்க விட்டுச் செல்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இதனால், பெற்றோரையும், குடும்பத்தில் உள்ள மூத்த உறுப்பினர்களையும் வாரிசுகள் கவனித்து கொள்ள வேண்டும் என்ற புதிய சட்டம் சீனாவில் நேற்று முன்தினம் முதல் அமுலுக்கு வந்துள்ளது.

சீனாவில் ஒரு குழந்தை திட்டம் 1970ஆம் ஆண்டுகளில் அமுலுக்கு வந்தது. இதனால், பெரும்பாலான குடும்பங்கள் ஒரேயொரு குழந்தையை மட்டுமே கொண்டுள்ளனர். அவர்களும் இப்போது வேலைவாய்ப்பு தேடி வேறு நகரங்களுக்கு செல்கின்றனர். இதனால் பெரும்பாலான வீடுகளில் வயதான பெற்றோர்கள் தனியே தவித்து வருவது தெரியவந்துளளது. 100இல் 14 பெற்றோர்கள் இதுபோன்று கவனிப்பாரின்றி இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இதனால், குடும்பத்தில் உள்ள வயதான உறுப்பினர்களை பாதுகாப்பதற்காக சீனாவில் புதிய குடும்பச் சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இதன்படி, ஒவ்வொருவரும் தங்கள் குடும்பத்தில் உள்ள மூத்த உறுப்பினர்களை சராசரியான இடைவெளியில் சென்று சந்தித்து அவர்களை நன்றாக கவனித்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு கவனிக்கவில்லை என்று சம்பந்தப்பட்டவர்கள் புகார் அளிக்கும் பட்சத்தில், பொலிசார் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க முடியும். ஆனால், சீனாவில் சமூக இணையதளங்களில் இச்சட்டத்தை பலர் கேலி செய்துள்ளனர். சட்டம் போட்டு வயதானவர்களை கவனிக்கச் சொல்வது, தேசத்தை அவமதிப்பது போன்றதாகும் என்று இணைய தளங்களில் கருத்து தெரிவித்துள்ளனர். (செ-2)

# இந்தியர்கள் வெளியேற 4 மாதம் அவகாசம்-சவுதி


(ரியாத்)

சவுதிஅரேபிய அரசு நிதாகத் என்ற புதிய தொழிலாளர் அவசர சட்டத்தை பிறப்பித்தது. அதன்படி சவுதியில் செயற்படும் நிறுவனங்கள் 10 வெளிநாட்டு தொழிலாளர்களுக்கு, ஒரு உள்நாட்டு இளைஞர் என்ற விகிதத்தில் பணியமர்த்த வேண்டும்.

இந்த புதிய சட்டத்தால் சவுதி அரேபியாவில் உள்ள 75 ஆயிரம் இந்திய தொழிலாளர்கள் அங்கிருந்து வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. இன்றைக்குள் அவர்கள் சவுதியை விட்டு வெளியேற கெடு விதிக்கப்பட்டு இருக்கிறது.

இந்த நிலையில்இதற்கு மேலும் 4 மாதம் காலம் அவகாசம் வழங்குவதாக சவுதி அரேபிய அரசு நேற்று உத்தரவிட்டுள்ளது. (செ-2)

# இந்தியாவிடம் அடைக்கலம் கேட்கிறார் "ஸ்னோடென்"



(வோஷிங்டன்)

ஸ்னோடென் இந்தியாவிடம் அடைக்கலம் கேட்டுள்ளதாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது.

அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு நிறுவனம், இணைய நிறுவனங்களின் துணையுடன் உலக நாடுகளின் இணைய பயன்பாட்டாளர்களை உளவு பார்த்தது. இதன் விபரங்களை வெளியிட்டவர் எட்வர்ட் ஸ்னோடென். அமெரிக்காவின் கைது நடவடிக்கைகளில இருந்து தப்பிய அவர் ஹொங் கொங் சென்றார். அங்கிருந்து ரஷ்யாவுக்கு தப்பினார், தற்போது ஸ்னோடென் மொஸ்கோவில்உள்ள விமான நிலையத்தில் தங்கி இருக்கிறார்.

இவர் இந்தியாவிடம் அடைக்கலம் கேட்டுள்ளார். இது தவிர மேலும் 19 நாடுகளிடம் அடைக்கலம் கேட்டுள்ளதாகவும் விக்கிலீக்ஸ் தகவல் வெளிட்டுள்ளது, ஸ்னோடெனின் பிரச்சினைகளை கையாளும் விக்கிலீக்ஸின் வழக்கறிஞர் இந்த கோரிக்கைகளை அனுப்பியுள்ளதாகவும் அது தெரிவித்துள்ளது. சீனா, ஆஸ்திரியா, ஜேர்மனி, இத்தாலி, நோர்வே, போலந்து, ஸ்பெயின், வெனிசுலா, கியூபா ஆகியவை அவற்றுள் சில நாடுகளாகும். ஆனால் தனக்கு அடைக்கலம் கிடைக்கவிடாமல் அமெரிக்கா தடுத்து வருவதாக ஸ்னோடென் குற்றம் சாட்டியுள் ளார்.

இது குறித்து ஸ்னோடென் கூறுகையில், ' உலகின் சக்தி மிக்க நாடு இந்த மாதிரியான நடவடிக்கை கள் மேற் கொள்வது, நீதிக்குப் புறம்பானது. இது எனக்கு உதவ வரும் நாடுகளை பயமுறுத்தவே தவிர என்னை பயமுறுத்த அல்ல என்று கூறியதாக விக்கிலீக்ஸ் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே, உலக நாடுகள் ஸ்னோடெனுக்கு அடைக்கலம் வழங்கக் கூடாது என்று எச்சரித்த அமெரிக்கா, ஸ்னோடெனுக்கு அமெரிக்க குடிமகனுக்கு வழங்கப்படும் அனைத்து உரிமைகளுடன், நேர்மையான வழக்கு விசாரணை நடத்தப்படும் என்று நேற்றுமுன்தினம் அறிவித்துள்ளது. (செ-2)



இஸ்ரேலுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இத்தாலி பிரதமர் என்ரிகோ லெட்டா(இடது), டெல் அவிவ் நகரில் ஜனாதிபதி ஷிமோன் பெரேஸை சந்தித்து கலந்துரையாடியதைப் படத்தில் காணலாம்

## கலவரம் மூளும் அபாயம்

# இராணுவ இறுதி எச்சரிக்கையை எகிப்து ஜனாதிபதி நிராகரித்தார்

இராஜினாமா செய்யும்படி இராணுவம்விடுத்த இறுதிஎச்சரிக்கையை எகிப்து ஜனாதிபதி நிராகரித்ததால் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

எகிப்தில் கடந்த 2011 ஆம் ஆண்டில் ஜனாதிபதியாக இருந்த ஹோஸ்னி முபாரக்குக்கு எதிராக பொதுமக்கள் புரட்சி வெடித்தது. அதை தொடர்ந்து அவர் தனது பதவியை இராஜினாமா செய்தார். அதை தொடர்ந்து ஜனநாயக முறைப்படி நடந்த தேர்தலின்படி புதிய ஜனாதிபதியாக முகமது முர்சி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

முபாரக்குக்கு எதிரான மக்கள் புரட்சிக்கு தலைமை வகித்தவர் இவர் தான். ஜனாதிபதியாக பதவி ஏற்ற சில மாதங்களில் இவர் மறுசீரமைப்பு என்ற பெயரில் தனக்கு அளவில்லா அதிகாரம் அளிக்கும் புதிய சட்டங்களைக் கொண்டு வந்தார். இது பொதுமக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியது.

அதைத் தொடர்ந்து கலவரம் மூண்டது. எதிர்க்கட்சியினரும் ஜனாதிபதியின் சகோதரத்துவ கட்சியினரும் மோதலில் ஈடுபட்டு வருகின்றனர். அதில் அமெரிக்க மாணவர் உட்பட 8 பேர் பலியாகினர்.

இதற்கிடையே முர்சி பதவி ஏற்று ஓராண்டு நிறைவு பெற்ற கடந்த 30 ஆம் திகதி அவரை பதவி விலக வலியுறுத்தி எதிர்க்கட்சியினர் மிகப் பெரிய பேரணியையும் போராட்டத்தையும் நடத்தினர். அதில் இலட்சக்கணக்கான மக்கள் கெய்ரோ அலெக்சாண்டிரியா உள்ளிட்ட நகரங்களில் திரண்டனர். சகோதரத்துவ கட்சி அலுவலகங்களுக்கு தீ வைக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி மாளிகையையும் முற்றுகையிடப்பட்டது.

போராட்டத்தினர் மீது இராணுவம் தொடர்ந்து துப்பாக்கி சூடு நடத்தியது. அதில் 16 பேர் உயிரிழந்தனர். அதைத் தொடர்ந்து போராட்டம் தீவிரம் அடைந்தது. எனவே, ஜனாதிபதி முர்சி 48 மணி நேரத்துக்குள் அதாவது நேற்று மாலைக்குள் தனது பதவியை இராஜினாமா செய்ய வேண்டும்எனஎதிர்க்கட்சியினர்வலியுறுத்தினர்.

போராட்டக்காரர்களுக்கு ஆதரவாக வெளியுறவுத்துறை மந்திரி மொஹமது கமெல் ஆம்ர் உட்பட 4 மந்திரிகள் தங்களது பதவிகளை இராஜினாமா செய்தனர். இராணுவ அமைச்சர் ஜெனரல் அப்துல் பதேஎல்-சிஸ்சியும் ஜனாதிபதி முர்சி பதவியை இராஜினாமா செய்யும் படி இறுதி எச்சரிக்கை விடுத்தார். இந்த எச்சரிக்கையில் உள்நோக்கமோ பேரமோ எதுவும் இல்லை. நாட்டின் எதிர்காலத்தை உருவாக்கும் வாய்ப்பு இராணுவத்துக்கும் உள்ளது என கூறியுள்ளார்.

ஆனால், இராணுவத்தின் இந்த இறுதி எச்சரிக்கையை ஜனாதிபதி முகமது முர்சி நிராகரித்தார். இது குறித்து ஜனாதிபதி மாளிகை வெளியிட்டுள்ள அறிக்கையில் பொதுமக்களிடையே சமரசம் ஏற்படுத்த ஜனாதிபதி முர்சி தீவிரமாக உள்ளார். அதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

இன்னும் 48 மணி நேரத்தில் எதிர்க்கட்சித் தலைவர்கள் அரசுடன் உள்ள கருத்து வேறுபாடுகளை மறந்து ஜனாதிபதியுடன் ஒத்துழைக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் இந்த அறிவிப்பால் எகிப்தில் பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டுள்ளது. (செ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ பலமுள்ளவனாக இருக்க விரும்பினால் உன்னுடைய பலவீனங்களை தெரிந்துகொள்.
-ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## நேர்மைமிக்க புத்திஜீவிகள் களமிறங்க வேண்டும்

வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும் என்பது எங்களின் கோரிக்கை.

இந்தக் கோரிக்கையை சர்வதேச சமூகமும் ஏற்றுக் கொண்டுள்ள நிலையில், வடக்கு மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டிய கட்டாயத்திற்குள் இலங்கை அரசு தள்ளப்பட்டுள்ளது.

அவ்வாறான நிலைமையில் வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர் யார்? என்ற கேள்வி ஏற்படவே செய்யும்.

இந்தக் கேள்விக்கு சரியான பதில் கிடைக்கப் பெறாவிடின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உள்ளக ஒற்றுமை உடையக்கூடிய வாய்ப்பு உண்டு.

உண்மையில் வடக்கு-கிழக்கு இணைவு பற்றி நாம் பேசிக் கொண்டாலும் வடக்கு கிழக்கு என்ற பிரதேசவாதம் எங்கள் அரசியல் அமைப்புக்களிடம் இருக்கவே செய்கிறது.

அத்தகைய ஒரு நிலைப்பாட்டின் அடிப்படையில்தான் அரசியல் சாணக்கியம் மிக்க ஆனந்தசங்கரி போன்ற மூத்த தமிழ் அரசியல் தலைவர்களை ஓரங்கட்டும் முயற்சி நடந்தேறியது.

விடுதலைப்புலிகளை விமர்சித்தார் என்பதற்காக தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரியை ஓரங்கட்ட வேண்டும் என யாரும் குறிப்பிட்டால்,

விடுதலைப்புலிகளுடன் சேர்ந்திருந்தவர்கள் புலிகள் தோற்ற பின்னர் அவர்கள் பற்றி பாராளுமன்றத்திலும் வெளிநாடுகளிலும் கூறிய எதிர்மறைக் கருத்துக்களுக்காக அத்தகையவர்களை கூட்டமைப்பில் இருந்து அகற்றியிருக்க வேண்டும் அல்லவா?

ஆனால் அவ்வாறு நடக்கவில்லை.

உண்மையில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, விடுதலைப் புலிகளை நேரடியாக விமர்சித்தார்.

அந்த விமர்சனம் புலிகளின் தோல்விக்குப் பின்னர் புலிகளை விமர்சிப்பவர்களின் கோழைத்தனத்தைவிட எத்துணை உயர்வானது.

புலிகள் பலமாக இருந்த காலத்தில் அவர்கள் பற்றி அதிலும் தலைவர் பிரபாகரனுக்கு நேரடியாக கடிதம் எழுதியவர் ஆனந்தசங்கரி.

அத்தகைய விமர்சனம் ஆக்கபூர்வமானது.

எனவே அத்தகைய விமர்சனங்கள்தான் சங்கரிக்கு உரிய இடம் கொடுக்காததற்குக் காரணம் என்பதை எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது.

ஆனந்தசங்கரி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்தால், தாம் தன்னிச்சையாக நடந்து கொள்ள முடியாது என்பதும் வடக்கு மாகாணத்தின் அரசியல் தலைமை நீடிக்கும் என்பதும் குறித்த பதவிகளை தாங்கள் அடைய முடியாது என்பதுமே துணிச்சல்மிக்க தமிழ் அரசியல் தலைவர்களை ஓரங்கட்டச் செய்தது.

இப்போது கூட வடக்கு மாகாண சபைத் தேர்தல் என்பதைவிட, முதலமைச்சராக வருபவர் யார் என்பதைப் பொறுத்தே வடக்கு மாகாண சபையின் அனுகூலங்களை தமிழ் மக்கள் அனுபவிக்க முடியும்.

நாற்காலியை நிரப்பும் ஒருவர் என்பதாக முதலமைச்சர் இருந்தால் நிலைமை இருந்ததைவிட படுமோசமாக மாற்றமடையும்.

எனவே, வடக்கு மாகாண சபை தேர்தலில் ஒற்றுமையுடன்கூடிய பலம்மிக்க நேர்மையான புத்திஜீவிகள் களமிறங்க வேண்டும்.

இது வடக்கு மாகாண சபைத் தேர்தலில் எந்தக் கட்சி போட்டியிட்டாலும் அத்தனைக்கும் இருக்கவேண்டிய பொது நிபந்தனையாகும்.

நாங்கள்தான் போட்டியிடுவோம் என்று நினைத்துக் கொண்டால், வடக்கு மாகாண சபைத் தேர்தல் நடக்காமல் இருந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று நினைக்கும் சூழ்நிலை உருவாகும்.

# சர்வதேச தரத்தில் இலங்கை இராணுவத்தினர்

## ஜெனரல் ஜகத் ஜயசூரிய பெருமிதம்



இராணுவ ஜெனரல் தரத்திற்கு உயர்த்தப்பட்டுள்ள இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் ஜகத் ஜயசூரிய தமது பதவிக் காலத்தில் இலங்கை இராணுவத்தினருக்கு பாகிஸ்தானில் பயிற்சியளிப்பதற்கான வாய்ப்புக் கிட்டியதன் மூலம் இலங்கை இராணுவத்தினர் சர்வதேச தரத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் கடந்த மாதம் 17ஆம் திகதி இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய ஜெனரலாக தரமுயர்த்தப்பட்டுள்ளார்.

அத்துடன் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் ஜனாதிபதியால் ஜெனரல் ஜகத் ஜயசூரிய பாதுகாப்பு பிரதானியாக பதவியுயர்த்தப்பட்டுள்ளார்.

மேஜர் ஜெனரல் தயா ரத்நாயக்க லெப்டினன்ட் ஜெனரல் என்ற தரத்தோடு ஓகஸ்ட் முதலாம் திகதி இராணுவத் தளபதியாகப் பொறுப்பேற்றுக் கொள்ளும் வகையில் ஜனாதிபதியால் பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளார்.

இந்தநிலையில் வவுனியா ஆயுதப் படைகளின் தலைமையகத்திற்கு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை விஜயம் செய்த ஜெனரல் ஜகத் ஜயசூரிய இராணுவத்தினர் மத்தியில் உரையாற்றுகையில்,

நாட்டிலுள்ள இரண்டு இலட்சம் படையினருடைய நலன்களை மேம்படுத்துவதற்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அனுராதபுரம், குருநாகல் உள்ளிட்ட 3 இடங்களில் யுத்தத்தின்போது அவயவங்களை இழந்த படைச்சிப்பாய்களை வைத்துப் பராமரிப்பதற்கான நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

வன்னியில் படையினர் தங்க வைக்கப்பட்டுள்ள முகாம்களுக்கு காணிகள் வழங்கப்பட்டு வசதிகளுடன் கூடிய நிரந்தர முகாம்கள் அமைக்கப் பட்டுள்ளன. இராணுவ முகாம்களுக்குத் தேவையான கட்டிட வசதிகள் செய்து கொடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டிருக்கிறது.

இலங்கை இராணுவத்தினருக்கு பாகிஸ்தானில் பயிற்சியளிக்க வாய்ப்புக் கிட்டியதன்மூலம் இலங்கை இராணுவத்தினர் சர்வதேசதரத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளனர் என ஜெனரல் ஜகத் ஜயசூரிய கூறினார். (செ-1)

## அடிக்கல் நாட்டும் நிகழ்வு நாளை

யாழ். கல்வி வலயத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட மகிந்தோதய தொழில்நுட்பவியல் கட்டிட நிர்மாணத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரியில் வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தலைமையில் நடைபெறும்.

அதனை தொடர்ந்து இன்றைய தினமே யாழ்.புனித பெனடிற்க் வித்தியாலயத்தில் மாணவர்களுக்கு பால் விநியோகமும் அவர்களது நோய்நொடியற்ற வாழ்வை உறுதிப்படுத்தும் வகையில் பேரீச்சம்பழம், விற்றமின் மாத்திரைகள் வழங்கும் ஆரம்ப சேவைத்திட்ட நிகழ்வும் காலை 10 மணிக்கு வட மாகாண ஆளுநரினால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. இந்நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், வட மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், வட மாகாண கல்விப் பணிப்பாளர் ப.செல்வராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (செ-2)

♦ ♦ ♦ ♦ ♦ ♦

யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கான மகிந்தோதய தொழில்நுட்ப ஆய்வுகூட அடிக்கல் நாட்டு விழா வைபவம் இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கல்லூரி வளாகத்தில் பாடசாலை அதிபர் அ.கைலாயப்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி கலந்துகொள்ளவுள்ளார்.

இருதளங்களாக அமைக்கப்படவுள்ள இவ் ஆய்வுகூடத்திற்கு கல்வி அமைச்சினால் 11.13 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-5)

### வகுப்புத் தடை விதிக்கப்பட்ட

## மாணவர்களின் பெற்றோரை சந்திக்கிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

பரீட்சைத் தடை மற்றும் வகுப்புத் தடை விதிக்கப்பட்ட சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்களது பெற்றோரை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சந்திக்கவுள்ளார்.

இச்சந்திப்பு இன்று மாலை அலரி மாளிகையில் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சப்ரகமுவ மாணவர்கள் சிலருக்கு விதிக்கப்பட்ட வகுப்புத் தடை மற்றும் பரீட்சைத் தடையை நீக்குமாறு கோரி கடந்த மே மாதம் 28ஆம் திகதி 4 மாணவர்கள் உண்ணாவிரத போராட்டத்தை ஆரம்பித்தனர்.

இதன் பின்னதாக ஜூன் முதலாம் திகதி சப்ரகமுவ பல்கலைக்கழக மாணவர்கள் பலர் பதுளை- கொழும்பு பிரதான வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது பொலிஸாருக்கும் மாணவர்களுக்குமிடையில் அமைதியின்மை ஏற்பட்ட நிலையில் கண்ணீர்ப் புகைக்குண்டு வீசப்பட்டு மாணவர்கள் சிலர் கைது செய்யப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (செ-2)

## தடம்புரண்டது லொறி; 6 பேர் படுகாயம்

(கரவெட்டி)

வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் பகுதியில் லொறி ஒன்று தடம்புரண்டதில் 6 பேர் படுகாயமடைந்து சிகிச்சைக்காக பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை 4 மணியளவில் வடமராட்சியிலிருந்து சீமெந்தை ஏற்றிக் கொண்டு நாகர்கோவில் பகுதிக்கு சீமெந்தை இறக்கச் சென்றவேளை லொறி சாரதி வேகமாக லொறியை செலுத்தி வந்திருக்கிறார். அப்போது வேகக்கட்டுப்பாட்டை இழந்த லொறி தடம் புரண்டுள்ளது.

இவ் விபத்துச் சம்பவத்தில் லொறியில் பயணித்த 6 பேர் படுகாயங்களுக்கு உள்ளாகியதுடன் லொறிச் சாரதி அவ்விடத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளார்.

இவ்விபத்தில் படுகாயமடைந்த சிவலிங்கம் மதிவர்ணன் (வயது 40), சதீஸ்வரன் துஷ்யந்தன் (வயது 17), ஜெயந்திரன் ஜெயகாந்தன் (வயது 19), சற்குணநாதன் மதுஷன் (வயது 17), செல்வரட்ணம் கஜீபன் (வயது 19), மதிவர்ணன் நிஷாந்த் (வயது 17) ஆகியோர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைச் சிகிச்சைப் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-9-24)

## ஞானச் சுடர் நூல் வெளி வந்துள்ளது


(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவக் கலை பண்பாட்டு பேரவையினால் மாதந்தோறும் வெளியிடப்படும் ஞானச் சுடர் நூல் வெளி வந்துள்ளது.

ஆனி மாதத்திற்கான இந் நூலில் பல சமயக் கட்டுரைகள், சிறுவர்களுக்கான பகுதிகள், திருமந்திரக் கதைகள், காள மேகம் பாடல்கள், இந்துப் பண்புகள், சைவசமய வினா விடை ஆகியவற்றைத் தாங்கி வெளிவந்துள்ளது. (2)

## பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

### ஊரெல்லாம் தேடிய கதை



♦ஓம் என்பது பிரணவ மந்திரத்தை ஓசை அனைத்தும் அடங்கிய நிலையில் கேட்கமுடியும். யோகசாஸ்திரம் கூறும் மூச்சுப் பயிற்சியால் உண்டாகும் நற்பலனை பிரணவ மந்திரம் உச்சரிப்பதால் ஒருவன் பெற முடியும்.

♦மூச்சுப் பயிற்சியில் மூச்சை உள்ளே இழுத்து வெளி விடுவதைப் போன்று ஓம் என்று உச்சரிக்கும் போது நம் வயிற்றுத்தசை அனைத்தும் சுருங்கி உள்ளே செல்வதைப் பார்க்கலாம். இப்பிரணவ மந்திரத்தின் மகத்துவத்தை உணர்ந்து சொல்பவர்களுக்கு மனம் ஒரு நிலைப்படும்.

♦வேதங்கள் காயத்ரி மந்திரத்தில் ஒன்றி விடுகின்றன. காயத்ரி மந்திரம் ஓம் என்னும் பிரணவ மந்திரத்தில் கலந்து விடுகிறது. ஓம் கடைசியில் சமாதியில் சேர்ந்து விடுகிறது.

♦கடவுள் உனக்குள்ளேயே இருக்கிறார். ஆனால் நீ அவரைத்தேடி எங்கெல்லாமோ அலைகிறாய். இடுப்பில் பிள்ளையை வைத்துக்கொண்டு ஊரெல்லாம் தேடிய கதையாகத்தான் கடவுளை தேடுவது இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விம்பிள்டன் டெனிஸ் போட்டியில் முதற்தர வீராங்கனை செரீனாவை வீழ்த்திய தரப்படுத்தலில் 23 ஆம் இடத்திலுள்ள ஜேர்மனி வீராங்கனை சபைன் லிசிக்கி.

# சுற்றிலிருந்து விலகினார் தோனி

காயம் காரணமாக முக் கோணச் சுற்றின் எஞ்சிய ஆட்டங்களிலிருந்து இந்திய அணியின் தலைவர் தோனி விலகியுள்ளார்.

மேற்கிந்தியத் தீவுகள் சென்றுள்ள இந்திய அணி முக்கோண ஒருநாள் தொடரில் பங்கேற்கிறது. கிங்ஸ்டனில் நடந்த லீக் போட்டியில் மேற்கிந்தியத் தீவு அணி, இந்திய அணியை ஒரு விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

இப்போட்டியில், இந்திய அணி துடுப்பெடுத்தாடியபோது அணித் தலைவர் தோனிக்கு, வலது தொடைப் பகுதியில் காயம் ஏற்பட்டது. இதையடுத்து தொடரின் எஞ்சியுள்ள போட்டி களில் இருந்து விலகியுள் ளார். இவருக்கு மாற்று வீரராக அம்பதி ராயுடு தேர்வு செய்யப்பட் டுள்ளார்.

இதுகுறித்து பி.சி.சி.ஐ., செயலர் சஞ்சய் படேல் வெளியிட்ட அறிக்கையில்," காயமடைந்த தோனிக்கு பதிலாக அம்பதி ராயுடு தேர்வு செய்யப்பட்டுள்ளார். விரைவில் அவர் இந்திய அணியுடன் இணைவார். மீதமுள்ள போட்டிகளுக்கு அணித் தலைவராக விராத் கோஹ்லி செயற்படுவார், என, தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உலகக் கிண்ண கராத்தே ஆரம்பம்

உலகக் கிண்ண கராத்தே போட்டி கிரீஸில் உள்ள கோர்ஃபு நகரில் ஆரம்பமாகியது.



இப்போட்டி எதிர்வரும் 7ஆம் திகதிவரை நடைபெறுகிறது.

# விம்பிள்டனில் வீழ்ந்தார் டெனிஸ் புயல் செரீனா



தோல்வியால் நிலைகுலைந்த உலகின் முதற்தர டெனிஸ் வீராங்கனையும் நடப்புச் சம்பியனுமாகிய செரீனா

உலகின் நம்பர் 1 வீராங்கனையான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸைத் விம்பிள்டன் டெனிஸ் போட்டியில் தோற்கடித்து அனைவரின் கவனத்தையும் தன் பக்கம் ஈர்த்துள்ளார் ஜேர்மனி வீராங்கனை சபைன் லிசிக்கி.

லண்டனில் நடைபெற்ற காலிறுதிக்கு முந்தைய சுற்றில் செரீனாவுடன் போட்டித் தரவரிசையில் 23ஆம் இடத்தில் உள்ள லிசிக்கி பலப்பரீட்சை நடத்தினார். நடப்புச் சம்பியனான செரீனா இந்த ஆட்டத்தில் எளிதாக வெற்றி பெறுவார் என்று அனைவரும் கருதினர். ஆனால், செரீனாவுக்கு கடும் சவால் அளித்தார் லிசிக்கி. அதனால் 6-2 என்ற கணக்கில் முதல் செட்டை லிசிக்கி தன் வசமாக்கி னார். எனினும் அடுத்த செட்டில் செரீனா ஆக்ரோஷமாக விளையாடி, 6-1 என்று புள்ளிக் கணக்கில் வென்றார். இதனால் ஆட் டம் 3ஆவது செட்டுக்குச் சென்றது.

இதில் இரு வீராங் கனைகளும் கடுமையாகப் போராடினர். இறுதியில் லிசிக்கி 6-4 என்ற கணக் கில் செரீனாவை வீழ்த்தி சாதனை படைத்தார்.

இந்த தோல்வியின் மூலம் நடப்புச் சம்பியனான செரீனா விம்பிள்டன் டெனிஸ் போட்டியிலிருந்து வெளியேறினார்.

மகளிர் கிரிக்கெட் போட்டியில்

# பாகிஸ்தானை பந்தாடியது இங்கிலாந்து

இங்கிலாந்துக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் பெண்கள் கிரிக்கெட் அணிக்கும், இங்கிலாந்துப் பெண்கள் கிரிக்கெட் அணிக்குமிடையிலான 2 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் முதலாவது போட்டியில் இங்கிலாந்துப் பெண்கள் கிரிக்கெட் அணி 111 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

லௌத் கிரிக்கெட் கழக மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்துப் பெண்கள் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்துப் பெண்கள் அணி 50 ஓவர்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 227 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் இங்கிலாந்து அணி சார்பாக அணித்தலைவி சார்லட் எட்வேர்ட்ஸ் 124 பந்துகளில் 83 ஓட்டங்களையும், அரன் பிறின்டில் 102 பந்துகளில் 55 ஓட்டங்களையும், லிடியா கிறீன்வே 29 பந்துகளில் 38 ஓட்டங்களையும் பெற்றனர்.

228 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் பெண்கள் அணி, 41.2 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 111 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

சிறந்த ஆரம்பமாக 15.2 ஓவர்களில் முதலாவது விக்கெட்டுக்காக 58 ஓட்டங்களைப் பகிர்ந்த அவ்வணி, அதன் பின்னர் 2 விக்கெட்டுக்களை இழந்து 101 ஓட்டங்களுடன் காணப்பட்ட போதிலும், அதன் பின்னர் தொடர்ச்சியாக விக்கெட்டுக்களை இழந்து தோல்வியைத் தழுவியது.

துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் அணி சார்பாக ஜாவெரியா கான் 95 பந்துகளில் 39 ஓட்டங்களையும், நஹீடா கான் 44 பந்துகளில் 23 ஓட்டங்களையும், பிஸ்மா மரூப் 36 பந்துகளில் 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

இப் போட்டியின் நாயகியாக ஜெனி கண் தெரிவானார்.

## வொட்சனின் மறுப்பு

அவுஸ்திரேலிய தொடக்க வீரர் வோர்னர் ஆஷஷ் டெஸ்ட் தொடருக்கான அணியில் இருந்து சமீபத்தில் நீக்கப்பட்டார். சம்பியன்ஸ் கிண்ண போட்டியின்போது இங்கிலாந்து வீரர் ஜோரூட்டை மதுபான பாரில் தாக்கிய விவகாரத்தில் வோர்னரை அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை இடைநிறுத்தியது. அதோடு அபராதமும் விதிக்கப்பட்டது.

வொட்சனின் வற்புறுத்தலின் பேரில்தான் வோர்னரை அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை நீக்கியதாக தகவல் வெளியானது. இதை வொட்சன் மறுத்துள்ளார். வோர்னர் நீக்கத்துக்கும் எனக்கும் தொடர்பில்லை என அவர் விளக்கமளித்துள்ளார்



# விமானத்தின் கதவை திறக்க முயன்றார் இல.கிரிக்கெட் வீரர்




இலங்கை கிரிக்கெட் அணியின் வீரரொருவர் 35 ஆயிரம் அடி உயரத்தில் பறந்துகொண்டிருந்த விமானத்தின் கதவை திறக்க முயன்றமையினால்பெரும பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான போட்டியில் விளையாடிய பின்னர் சென் லூசியாவில் இருந்து கேட்விக்குக்கு செல்லும் போதே பிரிட்டிஸ் எயார்வேய்ஸ் விமானத்தில் இந்த சம்பவம் இடம்பெற்றுள் ளது.


மதுபோதையில் இருந்த வீரரொருவரே விமானத்தின் கதவை இவ்வாறு திறக்க முயன்றுள்ளார்.

குறித்த கிரிக்கெட் வீரர், கழிவறைக்கு செல்வதாக கூறி, சென்ற போதும் பின்னர் விமானத்தின் வெளியேறும் கதவை திறக்க முற்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள் ளது. நடுநிசியிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கிரிக்கெட் வீரரின் இந்த செயலை அடுத்து, ஏனைய வீரர்கள் அவரை சத்தமிட்டதுடன் அவரை அழைத்து வந்து இருக்கையில் அமர்த்தினர்.

விமானம், சென்.லூக்காவிலிருந்து கெட்விக் விமான நிலையத்தை சென்றடைவதற்கு 8 மணித்தியாலம் எடுக்கும் என்பதுடன்விமானம்தரையிறங்குவதற்கு ஒருமணித்தியாலத்திற்கு முன்னரே இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த விமானத்தில் 229 பயணிகள் பயணம் செய்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் அண்மையில் வட மாகாண பாடசாலைகளுக்கு இடையில் மேசைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் நடைபெற்றன. இப்போட்டியில் யாழ்.இந்துக் கல்லூரி சார்பாக 19 வயதுப் பிரிவு அணி பங்குபற்றியிருந்தது. இதில் யாழ்.இந்து 19 வயதுப் பிரிவு மேசைப்பந்தாட்ட அணி மாகாண ரீதியில் மூன்றாம் இடத்தினைப் பெற்று கொண்டது. அவ்வணியினரைப் படத்தில் காணலாம்.

# கதிரொளி றொக்கெட் வெற்றி



முரசொலி சனசமூக நிலையத்தின் 65-வது ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட 20 ஓவர்கள் கொண்ட மென்பந்து சுற்றுப் போட்டியில் முரசொலி அணியை வீழ்த்தி கதிரொளி றொக்கெட் அணி வெற்றி வாகை சூடியது.

இப்போட்டியில் அச்சுவேலி கதிரொளி றொக்கெட் மற்றும் முரசொலி அணியினர் மோதினர். இதில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற முரசொலி அணித் தலைவர் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

இதன்படி களமிறங்கிய முரசொலி அணியினர் 18.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 89 ஓட்டங்களை மாத்திரம் எடுத்தனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கதிரொளி றொக்கெட் அணிக்கு தொடக்க வீரர் சுல்பி மற்றும் சஞ்சி ஆகியோரின் சிறப்பான ஆட்டமும், நெக்ஸ்மனின் அதிரடியும் கை கொடுக்க அவ்வணி 16.3 ஓவர்களில் 4 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து வெற்றி வாகை சூடியது.

# இலங்கை விவகாரங்களில்...

இலங்கையின் உள்விவகாரம் மற்றும் 13-வது அரசியலமைப்பு திருத்தம் தொடர்பில் இந்திய அரசாங்கத்தின் தலையீடுகளுக்கு எதிர்ப்பை தெரிவிக்கும் நோக்கில் பொது பல சேனா அமைப்பு, இந்தியப் பிரதமர மன்மோகன் சிங்கிடம் ஒப்படைக்கும் வகையில் மகஜர் ஒன்றை கையளித்துள்ளது.

கொழும்பில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகரகத்தில் இந்த மகஜர் நேற்றுக் கையளிக்கப்பட்டுள்ளது.

மகஜரை ஒப்படைக்கும் நோக்கில் ஆயிரக்கணக்கான பௌத்த பிக்குகள் கொள்ளுப்பிட்டியில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகரகத்திற்கு முன்பாக கூடியதன் காரணமாக காலி வீதியில் பாரிய வாகன நெரிசல் ஏற்பட்டது.

இந்திய தலையீடுகளை கண்டித்து தமது கட்சியின் நிலைப்பாடுகளை வெளியிடும் நோக்கில் இந்திய பிரதமருக்கு மகஜரை கையளித்ததாக பொது பல சேனா இயக்கத்தின் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக இந்தியாவின் அனுசரணையுடம் ஏற்படுத்தப்பட்ட 13-வது திருத்தச் சட்ட மூலத்தில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு எதிராக புதுடில்லி அழுத்தங்களை பிரயோகித்து வருகின்றது எனக் கூறப்படும் நிலையிலேயே் அவ்வாறான அழுத்தங்களைத் தவிர்க்கக் கோரி குறித்த மனு கையளிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இலங்கை சிங்கள பௌத்தர்களுக்கு எதிராக என்றுமில்லாதவாறு ஒட்டுமொத்த தமிழ்நாடும் தற்போது கிளர்ந்தெழுந்துள்ளது. எனவே, இந்தியா செல்லும் இலங்கையர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் உட்பட அது விடயம் தொடர்பில் மேலும் சில கோரிக்கைகளையும் தமது மனுவில் பொது பல சேனா அமைப்பு கோரியுள்ளது.

இலங்கைக்கான புதிய இந்திய தூதுவராக நியமனம் பெற்று வந்துள்ள வை.கே. சின்ஹாவிடம் இந்நாட்டு அமைப்பொன்று சமர்ப்பிக்கும் முதல் மனு இதுவென்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, "மாகாணசபை வேண்டாம்" என்ற தொனிப்பொருளின் கீழ் மாகாண சபை முறையை ரத்து செய்யக்கோரும் தேசிய ஒன்றியம் நேற்றுப் பிற்பகல் மஹரகமவில் மாநாடு ஒன்றை நடத்தியுள்ளது.

மாகாண சபை முறைமையின் ஊடாக இனங்களுக்கு இடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது என்று மாநாட்டில் கலந்து கொண்ட களனி பல்கலைக்கழகத்தின் கலாசார கல்வி பிரிவின் விரிவுரையாளர் இந்துராகாரே தம்மரதன தேரர் தெரிவித்துள்ளார். (செ-11)

# நாட்டு மக்கள்...

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மைக் காலமாக ஆபிரிக்க நாடுகளுக்கு பல தடவைகள் எமது ஜனாதிபதி விஜயம் மேற்கொண்டுள்ளார். அதே மாதிரி உகண்டா ஜனாதிபதியும் பல தடவைகள் இங்கு விஜயம் மேற்கொண்டுள்ளார்.

நாட்டு மக்கள் பட்டினியாலும் வைத்திய சாலையில் மருந்துகள் இன்மையாலும் அவதிப்படுகின்றபோது மக்களின் பணத்தைச் சுரண்டி ஆபிரிக்க நாடுகளுக்கு தானம செய்வதாக இலங்கை அரசாங்கம் சர்வதேசத்திற்கு காட்டுகின்றது.

உகண்டா ஜனாதிபதி இங்கு வந்த நேரம் எமது நாட்டு ஜனாதிபதி 10 மில்லியன் அமெரிக்க டொலர்களை நீர்ப்பாசன வேலைத் திட்டத்திற்குத் தருவதாகக் கூறியிருந்தார்.

எமது நாட்டு மக்களுக்கு எவ்வித உதவிகளையும் இந்த அரசாங்கம் கொடுக்காது உகண்டாவில் உள்ள மக்களுக்கு உதவிகளை வழங்குின்றது. இது என்ன அடிப்படையில் இடம்பெறுகின்றதெனத் தெரியவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (செ-11)

# அவிசாவளை...

தலைவர் பொட்டம்மானின் ஆலோசனைக்கு அமைய இந்த குண்டு மறைத்து வைக்கப்பட்டதாக வவுனியாவை சேர்ந்த நபரொருவர் இந்தத் தகவலை வெளியிடடுள்ளார்.

தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள குறித்த சந்தேக நபரை மூன்று நாட்களுக்கு பயங்கரவாத விசாரணைப் பிரிவினரிடம் ஒப்படைக்குமாறு நீதவான் நிரோஷா பெர்ணான்டோ சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

19 துப்பாக்கிகள், 3 ஆயிரத்து 500 தோட்டாக்கள், 03 எல்.எம்.ஜி துப்பாக்கிகள், ஒரு கோடி ரூபா பணம், 80 லட்சம் ரூபா பெறுமதியான சொக்லட்டுகள் உள்ளிட்டவை ஒரு தொன் எடைக் கொண்ட குண்டுடன் மறைத்து வைக்கப்பட்டுள்ளதாக தகவல் கிடைத்துள்ளது.

புலிகள் செயற்பட்ட காலத்தில் அந்த அமைப்பின் புலனாய்வு பிரிவின் உறுப்பினரான இந்தச் சந்தேக நபர், துப்பாக்கி மற்றும் குண்டை கொண்டு வந்து மறைத்து வைத்தாகவும் அவை மறைத்து வைக்கப்பட்டுள்ள இடத்தை கரண்பிக்க சந்தேக நபர் தானாவே முன்வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (செ-11)

# அபிவிருத்தி நிதி...

ஊடகவிலாளர் சந்திப்பின் போதே சுரேஸ் எம்.பி மேற்கண்ட வாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், வடக்கின் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட மேற்படி நிதியின் மூலம் ஆயிரத்து 500 சைக்கிள்கள் மற்றும் 25 ஆயிரம் கூரைத் தகடுகள் வழங்கப்படவிருந்ததாக அறியக் கிடைத்துள்ளது.

அத்துடன் இந்த தேர்தலில் அரசாங்கத் தரப்பிலிருந்து போட்டியிடும் வேட்பாளர்களுக்கான நேர்முகத் தேர்வும், இராணுவத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றுள்ளது.

"தேர்தலில் எவ்வாறு குழப்பத்தை ஏற்படுத்தி வெற்றி பெறலாம் என்ற நிலையில் அரசு செயற்படுகின்றது.

எனவே இவ்வாறான அபிவிருத்தி நிதி மோசடி தொடர்பில் உரிய நடவடிக்கை எடுத்து இது தொடர்பில் பொதுமக்களுக்கு தெரியப்படுத்த தேர்தல் ஆணையாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றும் அவர் கேட்டுக் கொண்டார். (செ-6)

# புத்தர் சிலையை...

காணியில் சிலை வைப்பதற்கு நான் யாரிடமும் கேட்க வேண்டிய அவசியம் கிடையாது. இந்த புத்தர் சிலையை நான் தான் வைத்தேன். 1960ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06ஆம் திகதி வி.ஜேமிஸ் அபுகாமி என்பவரால் புத்த ஜயந்தி விகாரைக்கு இரண்டு ஏக்கரும் பதினேழு பேர்ச் அடங்கலான காணியை அன்பளிப்புச் செய்திருந்தார்.

கடந்த யுத்த காலத்தின்போது விகாரையின் காணிகளை முறையான பராமரிப்பு இல்லாத காரணத்தினால் சிலரால் விகாரையின் காணிகள் பிடிக்கப்பட்டு தற்போது பாடசாலை மைதானம் என்று குறிப்பிடப்படும் காணி அடங்கலாக இரண்டு ஏக்கருக்கும் குறைவான காணியே உள்ளது.

இந்த காணி விவகாரம் தொடர்பாக வாழைச்சேனை நீதிமன்றில் வழக்கு நடைபெற்றபோது தனக்கு தமிழ் தெரியாது என்றும் இந்த வழக்குத் தொடர்பாக தமிழில் எந்த விதமான அறிவித்தல்களும் வழங்காமல் சிங்களத்தில் மொழி பெயர்த்து அனுப்புமாறும் எழுத்துமூலம் நீதிமன்றத்திற்கு அறிவித்ததன் பின்னர் என்ன நடை பெற்றுள்ளது என்று எனக்கு எதுவும் தெரியாது.

தீர்ப்புக் கிடைத்துவிட்டது என்று பாடசாலை நிருவாகமோ வேறு எவருமோ என்னிடம் கூறவில்லை.

இந்த புத்தர் சிலையை நான்தான் வைத்தேன். இது முஸ்லிம்களுக்கு எதிரான செயற்பாடாக எவரும் கருதக் கூடாது. புத்த ஜயந்தி விகாரைக்குரிய காணியை மீட்கும் போராட்டமே" என்றார்.

இது தொடர்பாக பிறைந்துரைச் சேனை சாதுலியா வித்தியால அபிவிருத்திக் குழு செயலாளர் எஸ்.எம்.செயினுதன் தெரிவித்ததாவது,

"இந்த மைதானக் காணி தொடர்பாக வாழைச்சேனை பொலிஸில் செய்த முறைப்பாட்டுக்கு அமைவாக பொலிஸ் நிலையத்தில் நடைபெற்ற விசாரணைக்கு அமைய நீதிமன்றத்தில் ஏற்கெனவே வழங்கப்பட்ட தீர்ப்புக்கு எதிராக விகாரையின் நிர்வாகம் அத்துமீறி அக் காணியில் புத்தர் சிலை வைத்துள்ளது.

பாடசாலை நிர்வாகம் சிவில் வழக்கு தாகீகல் செய்யும்படி கூறியதற்கிணங்க சட்டத்தரணிகளுடன் சிவில் வழக்கு தாக்கல் செய்வது தொடர்பாக ஆலோசித்து வருகின்றோம்" என்றார். (செ-11)

# 13 ஐ திருத்...

களை பாதுகாக்கக்கூடிய புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் தற்போதைய நிலையில் 13ஆவது திருத்தத்தை திருத்துவது ஏற்புடையதல்ல என பொன்சேகா மேலும் குறிப்பிட்டார். (செ-11)

காணி விற்பனைக்குண்டு

புலோலி கிழக்கு சந்தா தோட்டம் முதலிகோவிலிற்கு மேற்காக காணி விற்பனைக்குண்டு. பர.8 குளி 16

(மூன்றாம் புளியடி)

விபரங்களுக்கு :- 0773619638

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீடு விற்பனைக்கு

புன்னாலைக் கட்டுவன் வீதி ஏழாலையில் களை ஓடை அம்மன் கோயிலுக்கு அருகாமையில் 7.5 பரப்புக் காணியுடன் கூடிய அழகான வீடு விற்பனைக்குண்டு.

**தொடர்பு: 0777146693**

(3169)



## வேலைவாய்ப்பு

பருத்தித்துறையை அண்மித்து வாழ் இளைஞர், யுவதிகளுக்கு ஓர் அரிய வாய்ப்பு! நீங்கள் (O/L) சாதாரணதரம் படித்தவர்களா? தன்னிச்சையாக செயற்படக்கூடியவரா? விடாமுயற்சியுடன்கூடிய நேர்மைத்தன்மை உள்ளவர்களா?

உங்களுக்காகவே புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள DYNAMIC COMPANY தனது கிளைகளை பன்முகப்படுத்தும் முகமாக துடிப்பு மிக்க இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பினை வழங்க முன் வந்துள்ளது. அடிப்படைச் சம்பளத்துடன் ஆறுமாத கால பயிற்சி வழங்கப்படும்.

குறிப்பு: இலவச தங்குமிட வசதி வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு: **0750695649**

(சி-3856)



# 2014 Biology Exam

## Marks List 11 th
Science Corner

| பெயர் | புள்ளி | பாடசாலை |
|---|---|---|
| எஸ்.அபிராமி | 90 | J/VGHS |
| எ.யதுஷ்னா | 90 | J/VGHS |
| எஸ்.தனுஜா | 88 | J/VGHS |
| ரி.பிரணவி | 85 | J/VGHS |
| ரி.வைஷ்ணவி | 83 | J/VGHS |
| எஸ்.ஜேன் | 80 | J/CGC |
| எஸ்.சசிகலா | 80 | J/VGHS |
| பி.கிருஷா | 79 | J/KHC |
| கே.துஷ்யந்தினி | 79 | J/VGHS |
| எஸ்.சரண்யா | 77 | J/VGHS |
| வி.யதுஷன் | 76 | J/StJC |
| ஆர்.பானுவரன் | 76 | J/HC |
| எஸ்.நிருஷிகா | 75 | J/CGC |
| பி.விசாகாஜா | 74 | J/VGHS |
| ஆர்.சிந்துஜா | 72 | J/HLC |
| எ.பிரியங்கா | 72 | J/UGC |
| கே.பவித்ரா | 70 | J/VGHS |
| எஸ்.மிதிலா | 70 | J/CGC |
| கே.கிருஷாந்தினி | 69 | J/HLC |
| கே.சௌயா | 66 | J/VGHS |
| கே.காயத்திரி | 66 | J/CGC |
| எஸ்.தேனுகா | 66 | J/VGHS |
| ஆர்.ராஜினி | 65 | J/HLC |
| எம்.பிரசாந்தினி | 65 | J/HLC |
| பி.சிவரூபன் | 65 | JC |

## 2014 Class

சனி, ஞாயிறு : 8- 9.30 am
புதன் : 3-5 pm

## 2015 Class

Batch I சனி, ஞாயிறு : 9.30 - 11 am
Batch II சனி, ஞாயிறு : 3 - 4.30 pm

சு.பொன்.திவாகரன்

(3163)



# VACANCY

Opportunity to Earn 45,000/= more

யாழ், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் போன்ற புதிய கிளைகளுக்கான International கம்பனியின் பயிற்சியுடன் கூடிய நிரந்தர வேலைவாய்ப்புகள், 30 பேருக்கு முன்னுரிமை, வயது 18-30

அழைக்க :- 0779994807
021-4993166

(3211)



## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

French மொழி கற்பிப்பதற்கு French Embassy ஆல் அங்கீகரிக்கப்பட்ட வட மாகாணத்திலுள்ள ஒரேயொரு நிறுவனம் Alliance Francaise de Jaffna மட்டுமே. இது ஓர் அரிய சந்தர்ப்பம். மேலும் தரமான Certificate ஐ பெறுங்கள்.

புதிய வகுப்புகள் விரைவில்... T.P: 0212228093

61, Kachchery-Nallur Road, Jaffna.

(றக்கா வீதியும் கச்சேரி-நல்லூர் வீதியும் இணையும் சந்தியில்)

(3159)


# மேனன் - மகிந்த...

யும் அவர் ஜனாதிபதியிடம் கையளிக்கவுள்ளார். இந்த சந்திப்பு அலரி மாளிகையில் காலை உணவு சந்திப்பாக அமையவுள்ளது.

இதன்போது இந்திய உயர்ஸ்தானிகர் யஸ்வந்த் சிங்ஹா, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோரும் உடனிருப்பார்கள்.

எதிர்வரும் 7-ம் திகதி யன்று இலங்கை வரும் மேனன், 8-ம திகதியன்று பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜ பக்ஷவை சந்திக்கவுள்ளார்.

அத்துடன் அன்றைய தினம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரையும் சந்திக்கவுள்ளார்.

9-ம் திகதியன்றே ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பிரதிநிதிகளை சந்திக்கவுள்ளார். (செ-11)


## 31- ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 20.06.1948
மறைவு 03.06.2013

### திருமதி கனகசிவநாயகம் பரமேஸ்வரி

(கட்டுவன் தெல்லிப்பளை)

பாசமழை பொழிந்து பாரினில் எம்மை வளர்த்தீர்கள்
பாசமுடன் நாங்கள் தேட பறந்து எங்கு சென்றீர்கள்
கலங்கும் விழிகளுடன் இதயமது வெதும்பி நிற்க
இறைஞ்சுகிறோம் இறைவனிடம் ஆத்மசாந்திக்காய்!

கடந்த 03.06.2013 இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவியின் அந்தியேட்டிக் கிரியைகள் 03.07.2013 புதன்கிழமை காலை 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

முத்தட்டு மட லேன்,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

- குடும்பத்தினர்

(3171)



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு: 1954.10.16
இறப்பு: 2012.07.29

## ஜெயம் சரஸ்வதி

(சிவன் வீதி,ஆவரங்கால்)



கண்ணை இமை காப்பது போல்
காலமெல்லாம் எம்மைக் காத்து வந்த - எம்
தெய்வம் எமைப் பிரிந்து
இன்று ஓராண்டு ஆனதுவோ
மண்ணுக்குள் போனாய்
என எம் மனது நம்புதில்லை
விண்ணுக்குள் இருந்தும்
விழிகாட்டி சிரிக்கிறாய்

கடந்த 2012.07.29 அன்று இறைபதம் எய்திய எமது குடும்பத் தலைவியின் முதலாம் ஆண்டு நினைவு 03.07.2013 இன்று புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்

(3168)



## பதவி வெற்றிடம்

விசா ஆலோசனைத்துறையில் உச்சகட்ட வளர்ச்சி கண்டு நவீனப்பட்ட உங்கள் "திசைகாட்டியில்" இணைய இறுதி வாய்ப்பு

- எழுதுவினைஞர் (Clerk)
- A/L 3 பாட சித்தி, IT அறிவு, ஆங்கில அறிவு
- வயது 20 – 45
- யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் (பெண்கள்) மாத்திரம் நேர்முகத்தேர்வுக்குத் தோற்றலாம்
- 04.07.2013 – காலை – 10 மணி

**திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்**
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
021 221 9016, 0215689090



(C-3847)



## Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை

விஷேட கட்டண சலுகைகள்



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION
MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி
(சம்பத்வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு -
0212224040 / 0772931062

(C-3850)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.07.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.